விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com



ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
R A M C O
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து



சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 மாசி 16 வியாழக்கிழமை (28.02.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 071


## பட்டமளிப்பு விழா இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் 28 ஆவது பொதுப்பட்டமளிப்புவிழா இன்றுவியாழக் கிழமை ஆறு அமர்வுகளாக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

முதலாவது அமர்வு காலை 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ள அதேவேளை 6-வது அமர்வு மாலை 5 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.(எ-6)

## இறுதியாக தோன்றினார் புனித பாப்பரசர்



பாப்பரசர் 16-வது பெனடிக்ட் அவர்கள் தான் பதவி விலகுவதற்கு முன்னதாக இறுதியாக பொதுமக்கள் முன்பாக பவனியாக வந்து தோன்றியுள்ளார்.

கடந்த 600 ஆண்டுகளில் தானாகவே பதவி விலகும் முதலாவது பாப்பரசர் இவராவார். பதவி விலகுவது (02ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கைக்கு எதிரான தீர்மானம் தேவையற்றது

## ஜெனிவாவில் அமைச்சர் சமரசிங்க




ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 22-வது அமர்வில் இலங்கைக்கு எதிராக கொண்டு வரப்படவுள்ள தீர்மானம் தேவையில்லாததொன்று. அது கொண்டு வரப்பட்டிருக்கும் நேரம் கூட தவறானது. அது ஐ.நா மனித உரிமை கவுன்ஸிலின் அடிப்படைக் கொள்கைகளுக்கு முரணானது என்றும் ஐ.நா மனித உரிமைகள் ஆணைக் குழுவின் இலங்கை ஜனாதிபதியின் சிறப்புத் தூதுவரான அமைச்சர் மகிந்த சமரசிங்க கூறியுள்ளார்.

நேற்று புதன்கிழமை ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கையின் தரப்பு வாதங்களை முன்வைத்துப் பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் பேசுகையில், மனித உரிமைகள் நிலைமைகள் தொடர்பில் இலங்கை ஏற்கெனவே உரிய நடவடிக்கைகளை எடுக்கத் தொடங்கிவிட்ட நிலையில் இந்தத் தீர்மானம் தமது அபிப்பிராயப்படி தேவையற்ற ஒன்று என்றும் அவர் கூறியுள்ளார்.

இலங்கையில் போருக்கு பின்னர் மீள் யேற்றம், புனர் (19ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய மாநிலங்களவையில் இலங்கையின் போர்க் குற்றம்

### விவாதத்தால் நேற்று அதிர்ந்தது அவை

(புதுடில்லி)

இலங்கையின் போர்க்குற்றம் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக இந்திய மாநிலங்களவையில் நேற்று கவனயீர்ப்புத் தீர்மானம் கொண்டு வரப்பட்டு விவாதம் நடைபெற்றது

இந்தப் பிரச்சினை தொடர்பாக சிறப்பு விவாதம் நடத்தக்கோரி அதிமுக சார்பில் மைத்ரேயன், திமுக சார்பில் திருச்சி சிவா, இந்திய கம்யூனிஸ்ட் மூத்த தலைவர் டி.ராஜா உள்ளிட்ட எம்.பிக்கள் அவைத் தலைவரிடம் அறிக்கை அளித்திருந்தனர்.

மேலும், பாரதிய ஜனதா கட்சியைச் சேர்ந்த வெங்கையா நாயுடு, சிவசேனா கட்சியின் சஞ்சாய் ராட் ஆகியோரும் இதே கோரிக்கையை வலியுறுத்தி கடிதம் அளித்தனர்.

இந்நிலையில், இலங்கை போர்க் குற்றம் குறித்து மாநிலங்களவையில் நேற்று கவனயீர்ப்புத் தீர்மானத்தை அதிமுக மாநிலங்களவை உறுப்பினர் மைத்ரேயன் கொண்டுவந்தார்.

அப்போது விளக்கம் அளித்துப் பேசிய மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் சல்மான் குர்ஷித், இலங்கைத் தமிழர்களுக்கு இந்தியா பெரும்பாலான மனித உதவிகளை வழங்கியுள்ளதாகத் தெரிவித்தார்.

மேலும், 2012 செப்ரெம்பர் மாதம் அனைத்து முகாம்களும் (19ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியாவின் எதிரி நாடாக இலங்கையை கருத முடியாது

### இந். வெளியுறவு அமைச்சர் விளக்கம்



இலங்கையை இந்தியாவின் எதிரிநாடு எனக் கருத முடியாது என இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் தெரிவித்துள்ளார்.

ஐ.நா மன்றத்தின் மனித உரிமைகள் பேரவையில் நடந்துவரும் இலங்கை தொடர்பான விவாதம் குறித்து இந்திய நாடாளுமன்றத்தின் மேலவையான மாநிலங்களவையில் நேற்று விவாதம் நடந்தது.

இதில் தி.மு.க, அ.தி.மு.க, பாரதிய ஜனதா, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் இலங்கை அரசு தொடர்பான இந்திய அரசின் அணுகுமுறையை கடுமையாக விமர்சித்து பேசினார்கள்.

குறிப்பாக, ஐ.நா மன்றத்தில் இலங்கை அரசுக்கு எதிராக அமெரிக்கா கொண்டுவர இருக்கும் தீர்மானத்தை (19ஆம் பக்கம் பார்க்க)

## விஜயகாந்த் மீது விழுந்த அடி!

(சென்னை)

தஞ்சாவூர் நீதிமன்ற வளாகத்தில் தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் மீது அவரது கட்சி சட்டமன்ற உறுப்பினர் ஒருவர் மிகக் கடுமையாக அடித்ததால் (19ஆம் பக்கம் பார்க்க)

## ஒன்றிணைந்தால் தீர்வு கிட்டும்




(லண்டன்)

இலங்கையில் அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து செயற்படுவதன் மூலம் காயங்களை ஆற்ற முடியும் என பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூன் தெரிவித்துள்ளார்.

குளோபல்தமிழ்போரம் (20ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையின் நடவடிக்கையால் அமெரிக்காவுக்கு ஏமாற்றம்

### விளக்கினார் றொபேர்ட் ஓ பிளேக்



நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளை நிறைவேற்றாமை, வட மாகாண தேர்தலை தள்ளிப்போட்டு வருதல் ஆகியவை போன்ற நடவடிக்கைகளின் மூலம் இலங்கை குறித்து தாம் ஏமாற்றம் அடைந்துள்ளதாக தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்க அரசுத்துறையின் துணைச்செயலர் றெபேர்ட் ஓ பிளேக் கூறியுள்ளார்.

அமெரிக்க காங்கிரஸ் வெளியுறவுக் குழுவின், ஆசிய மற்றும் பசுபிக் துணைக்குழுவில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு பேசியுள்ளார்.

இலங்கை விடயங்களில் 6 வருடங்கள் தான் பணியாற்றி வருவதாகவும், அந்த நாட்டை தனக்கு நன்றாகத் தெரியும் என்றும், அதனை ஒரு நட்பு நாடாகத் தான் கருதுவதாகவும் தெரிவித்த றெபேர்ட் ஓ பிளேக், ஐ.நாவின் குழு ஒன்றால் பத்தாயிரம் முதல் 40 ஆயிரம் பேர் வரை கொல்லப்பட்டதாகக் கூறப்படும் இலங்கைப் போரின் இறுதி நிகழ்வுகள் பல கேள்விகளை எழுப்பியுள்ளன என்றும் கூறியுள்ளார்.

இந்த விடயங்கள் குறித்து விசாரிப்பதற்கென ஒரு உள்ளக பொறிமுறையை (19ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலை ஆள் தேவை

கட்டிடப் பராமரிப்பாளர் தேவை. (ஆண்கள்)

தங்கி நின்று வேலை செய்வது விரும்பத்தக்கது.

தொடர்பு:- 077 9361427 (2041)







## இறுதியாக தோன்றி...

என்ற தனது முடிபு எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை தான் முழுமையாக அறிவேன் என்றும், ஆனால் திருச்சபை மீதும் ஆண்டவரின் மீது கொண்ட நம்பிக்கை காரணமாக தாம் மிகுந்த மன அமைதியுடன் இருப்பதாகவும் அவர் புனித பீட்டர் சதுக்கத்தில் வந்திருந்த பல்லாயிரக் காணக்கான மக்கள் முன்பாக பேசினார்.

அண்மைக்காலமாக தனது பலவீனம் அதிகரித்து வருவதை தான் உணர்ந்ததாகவும், நல்ல முடிபை எடுப்பதற்கு தனக்கு உதவ வேண்டும் என்று ஆண்டவரைக் வேண்டிக் கொண்டதாகவும் பலத்த கர கோஷங்களுக்கு மத்தியில் அவர் கூறினார்.

ஒரு பாப்பரசராக இருப்பதில் உள்ள மகிழ்ச்சி மற்றும் சிரமங்கள் ஆகியவை குறித்து அவர் பேசினார்.

வரும்வாரங்களில் புதிய பாப்பரசர் தெரிவு செய்யப்படுவார். (ஏ)


## Cabs Service

யாழ்.மாவட்டத்தில் உள்ள முச்சக்கரவண்டி Van, Batta உரிமையாளர்களுக்கு எமது நிறுவனம் தமது சேவையினை விரிவுபடுத்தும் முகமாக Cabs Services னை ஆரம்பிக்க உள்ளோம். எனவே ஆர்வம் உள்ளவர்கள் மேலதிக விபரங்களுக்கு இந்தத் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

Tel:- 0772104550

குறிப்பு :- முச்சக்கரவண்டிகளுக்கு தரிப்பிட பதிவுகள் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது. (2039)



## பாராட்டி வாழ்த்தும் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்



எமது துணைத்தலைவர்
மா.நவநீதமணி (அதிபர்)



எமது துணைச் செயலாளர்
அ.அருளானந்தசோதி
(அஞ்சல் அதிபர்)

யாழ்.பல்கலைக்கழகத்தில் முதுகல்விமாணி பட்டம் பெறும் திரு. மா.நவநீதமணி அவர்களையும், பொறுப்பு அஞ்சல் அதிபர் தரம் I பரீட்சையில் சித்தி எய்திய திரு. அ.அருளானந்தசோதி அவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்

(சி-2541)



## மனம் நிறைந்த வாழ்த்துக்கள்



### திரு. சிதம்பரப்பிள்ளை மாணிக்கராஜா

**B.A (Hons in Geo), Dip in Edu, MED SLEAS III**

கல்விப்புலத்தில் தகைமைகள் பல பெற்று, நல்ல ஆசானாக விளங்கி, வல்லமையுள்ள மாணவர்களை உருவாக்கி, வினைத்திறனுள்ள அதிபராகப் பரிணமித்து, கோட்டக்கல்விப் பணிப்பாளராக வினைத்திறன்கள் பல தந்து 2011.06.01 தொடக்கம் இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் III இற்கு உயர்வு பெற்றுப் பெருமை பெறும் எமது அன்புக்கும் மதிப்புக்கும் உரிய திருவாளர் சிதம்பரப்பிள்ளை மாணிக்கராஜா அவர்கள் மேலும் பல சிறப்புக்கள் பெற்றுக் கல்விப் பணியிலும் சிறக்க எமது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் வழங்குவதில் பெருமையும் அகமகிழ்வும் அடைகின்றோம்.

2042

வாழ்த்துவோர். நல்லூர்க் கோட்ட அதிபர்கள்



## சேவை நலன் பாராட்டுவிழா





### திரு.சிவகுரு பத்மநாதன்

38 வருடங்களாக

(01.03.1975-28.02.2013)

மக்கள் வங்கிக்கு அளப்பரிய சேவையாற்றி இன்று வங்கிச்சேவையிலிருந்து ஓய்வுபெறும் எமது பிராந்திய முகாமையாளர் திரு.சிவகுரு பத்மநாதன் அவர்கள் தனது ஓய்வுக் காலத்தில் சகல சௌபாக்கியங்களையும் பெற்று, நீடூழி வாழ ஊழியர் நலன்புரிச்சங்கம் சார்பாக வாழ்த்துகின்றோம்.

ஊழியர் நலன்புரிச்சங்கம்
மக்கள் வங்கி,
பிராந்திய தலைமையகம்,
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.
2013.02.08

(F-2538)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## வாதத்துக்கு மருந்து

ஒரு ஊரிலே பெரியவர் இருந்தார். அவர் பார்வையிழுந்தவர். வாதாடுவதிலே சாலச் சிறந்தவர். தர்க்கத்திலே மேதை.

அவரிடம் சிலர் பேசிக் கொண்டிருந்தார்கள். அப்போது அவர் சொன்னார்;

"சூரியன் வெளிச்சத்தைக் கொடுக்கிறது. சந்திரன் ஒளியைக் கொடுக்கிறது. விண்மீன்கள் மின்னி மின்னி பிரகாசிக்கிறன. வெளிச்சம் இருப்பதால்தான் நமக்கு எவ்வளவோ உபயோகமாக இருக்கிறது" என்றார்.

உடனே பார்வை இழுந்த அந்தப் பெரியவர்; வெளிச்சம் என்ற ஒன்று உண்மையிலேயே இருக்கிறதா?" என்றார்.

"உண்மையிலேயே ஒளி இருக்கிறது!" என்றார்.

"நான் அதை நம்பமாட்டேன்" என்று கூறினார்.

"சூரியன்... சந்திரன்... நட்சத்திரம்... இவையெல்லாம் இருக்கிறதாகச் சொன்னார்கள்"

அதையெல்லாம் ஒப்புக் கொள்கிறேன். ஆனால்... அதையெல்லாம் என்னை சற்றுத் தொட்டுப் பார்க்க விடுங்கள்" என்றார்.

"அவற்றினை தொட்டு அறிய முடியாது" என்றார்.

"அப்படியென்றால்... முகர்ந்து அறிகிறேன். முகர்ந்து பார்க்க விடுங்கள்... ஏதாவது வாசனை வருகிறதா... என்று பார்க்கிறேன்" என்று சொன்னார்.

"அதுவும் முடியாது" என்றார்.

"சரி... அதுவும் முடியவில்லையென்றால், அந்த வெளிச்சத்திலே சிறிதளவு எடுத்து என் கையிலே கொடுங்கள். வாயிலே போட்டு விழுங்கி ருசித்துக் கொள்கிறேன்" என்றார்.

அவரை எந்த வகையிலேயும் ஒப்புக்கொள்ள வைக்க முடியவில்லை.

அவரைச் சுற்றியிருந்தவர்கள் எல்லோரும் குழப்பமடைந்தார்கள்.

"என்ன... நாங்கள் சொல்வதை நீங்கள் நம்பவில்லையா?" என்றார்.

என்னுடைய நான்கு புலன்களுக்கும் புலப்படாத ஒன்றை நான் "மாயை" என்கிறேன். நீங்கள் என்னை அவமானப் படுத்துவதற்காக இப்படிச் சொல்கிறீர்கள் என்று நினைக்கிறேன்.

ஏதோ உங்களுக்கெல்லாம் "பார்வை" இருப்பதாகவும்... அது எனக்கு இல்லை என்று சொல்லி நீங்கள் அவமதிக்கிறீர்கள்" அப்படியென்றார் தர்க்க சாஸ்திரத்திலே மேதையான அந்தப் பெரியவர்.

சுற்றியிருந்தவர்கள் பார்த்தார்கள்... "வெளிச்சம் இருக்கிறதை இவர் நம்ப வேண்டும்... இவரை நம்ப வைக்க வேண்டுமென்றால்... அது புத்தராலேதான் முடியும்" என்று கூறினார்கள்.

"சரி அவரிடம் போவோம்" என்று எல்லோரும் முடிவெடுத்து போய்ச் சேர்ந்தார்கள்.

புத்தரிடம் விபரத்தை எடுத்துரைத்தார்கள்.

புத்தர் சிரித்தார். உண்மை எப்படிப்பட்டது என்று நான் நினைக்கிறேனோ அப்படித்தான் அவரும் நினைக்கிறார். எதையும் அனுபவபூர்வமாக உணர்ந்தால்தான் நம்பமுடியும்.

"ஒளியை அனுபவித்து அறியாத வரையில் அது இருக்கிறதா இல்லையா என்ற கேள்விக்கே இடமில்லை. அதனாலே இவர் அதை நம்பாததும் சரிதான்" என்று கூறினார்.

அதன்பின் சொன்னார்; "உங்களைக் குணப்படுத்தி விடலாம்... உங்களுக்குத் தேவை ஞானி அல்ல... மருத்துவர்தான்" என்றார்.

ஒரு வைத்தியரிடம் அழைத்துக்கொண்டு சென்றார்கள். பார்வை கிடைக்கப் பெற்றது... வெளிச்சத்தைக் கண்டதும் அவர் மகிழ்ச்சி அடைந்தார். புத்தரை வணங்கினார்.

"நான் வாதம் செய்தேன்... நீங்கள் எதிர்வாதம் செய்யவில்லை. என்னுடைய பிரச்சினை மருத்துவரால்தான் தீரும் என்று சொல்லி எனக்குப் பார்வை கிடைக்கச் செய்தீர்கள்" என்றார்.

மனித குலத்தின் மிகப் பெரும்பாலானவர்கள் நிலைமை இதுதான் அப்படியென்கிறார் ஓஷோ!

இந்தக் காலத்திலே சில பேர் கண்களைத் திறந்து கொண்டு சில காரியங்கள் செய்வார்கள். அது பிழையென்பது அவர்களுக்குப் பின்புதான் புரியும்.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# நியாயங்கள் எழுகின்றபோது அநியாயங்கள் அடக்கப்படும்

## சந்தர்ப்பம் அமையும் என்கிறார் சிவஞானம்

(யாழ்ப்பாணம்)

எமது கடந்தகால ஆயுதப் போராட்டத்தின் மூலம் எமது பிரச்சினை சர்வதேச மயப்படுத்தப்பட்டது.

அதனை பயன்படுத்தியே நாம் சர்வதேசங்களுடன் அணுகியும் வருகின்றோம்.

இதன் ஒரு படிக்கல்லாகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜெனீவா சென்றுள்ளனர் என தமிழரசுக் கட்சியின் துணைப் பொதுச் செயலாளர் சி.வி.கே. சிவஞானம் தெரிவித்தார்.

அவர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

வடபகுதி மக்களின் உணர்வுகளினை புரிந்து கொண்டு இந்தியா எமக்கு ஆதரவாக கடந்த வருடம் போன்றல்லாது இக்கூட்டத் தொடரில் செயற்பட ஆரம்பித்துள்ளது.

ஜெனீவா தீர்மானம் குறித்து பரவலாக தற்போது பேசப்பட்டுக் கொண்டு இருக்கும் நிலையில் பலர் பலவிதமாகன கருத்துக்களினை வெளியிட்டு வருகின்றனர்.

சிலர் சர்வதேசம் எம்மை இம்முறையும் ஏமாற்றத்தான் போகின்றது எனவும் ஜெனீவா தீர்மானத்தால் தமிழர்களிற்கு ஒன்றும் கிடைக்கப் போவதில்லையென்று கருத்துக்களினை வெளியிட்டு ள்ளனர்.

அதனோடு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு சரியானதொரு தீர்வினை சர்வதேசத்திடம் முன்வைக்கவில்லை என்றும் அதனால் சர்வதேசம் எமக் ான தீர்வினை பெற்று கொடுப்பதற்கு முன்வரமாட்டாது என குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இவை தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு யாெ னில் நாம் சர்வதேசத்திடம் தெளிவான தீர்வினை முன்வைத்துள்ளோம்.

ஐக்கிய இலங்கைக்குள் நாம் சுதந்திரமாக வாழ்வதற்கும் தன்னாட்சி உரிமையை பெற்றுக் கொள்வதற்கும் எமது தாயகத்தினை பாதுகாத்து கலாசாரத்துடனும் பண்பாட்டுடனும் வாழ்வதற்குரிய தீர்வினை பெற்றுத்தருமாறு நாம் சர்வதேசத்திடம் கோரியுள்ளோம்.

சர்வதேசம் எம்மை ஏமாற்றுகின்றது என கூறப்படுகின்றது. அவ்வாறு சர்வதேசம் எம்மை ஏமாற்றினால் தமிழர்களாகிய எமது அடுத்த நிலைப்பாடு என்ன?.

புலம்பெயர் தமிழர்கள் தமிழர்களிற்கான தீர்வினை வெளிப்படையாகவே சர்வதேசத்திடம் முன்வைக்கின்றனர்.

அதற்கான சுதந்திரம் அங்கு உண்டு. எமக்கும் உணர்வுகள் உண்டு. ஆனால் இங்கு உச்சரிக்க முடியவில்லை.

சென்ற முறை போல் 13 ஆவது திருத்தச் சட்டம் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க குழுவின் பரிந்துரைகள் அமுல்படுத்தல் என்பவற்றை பேசிக் கொண்டு இருப்பதில் பயனில்லை. அவற்றில் எமக்குரிய ஒன்றினைகூட அரசாங்கம் அமுல்படுத்தவில்லை. இவை இரண்டினையும் தமிழ்த் தேசியத் கூட்டமைப்பு என்றுமே ஏற்கவில்லை.

கடந்த வருடம் போன்று இம்முறையும் ஜெனீவா கூட்டத் தொடரில் வெறும் கண்டனங்கள் நிறை வேற்றப்படும் என நாம் கூறமுடியாது. அதற்கு அப்பால் இலங்கைக்கு எதிரான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு சட்ட ரீதியாக தடைகள் விதிக்கப்படலாம்.

நியாயங்கள் எழுகின்ற போது அநியாயங்கள் அடக்கப்படுகின்ற சந்தர்ப்பம் கட்டாயம் வரும் எனவும் கூறினார். (அ-4)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 70 | 60 | 50 |
| உருளைக்கிழங்கு | 60 | 80-100 | 70 | 70 |
| பச்சைமிளகாய் | 200 | 200 | 220 | 250 |
| தக்காளி | 120 | 160 | 120 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 30 | 40 | 40 |
| கோவா | 60 | 50 | 60 | 80 |
| கரட் | 150 | 100 | 140 | 160 |
| பூசணி | 40 | 30 | 40 | 50 |
| புடோல் | 40 | 80 | 60 | 50 |
| வாழைக்காய் | 50 | 50 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 40 | 60 | 80-100 | 60-100 |
| பெரிய வெங்காயம் | 80 | 70 | 90 | 90 |
| பாகற்காய் | 110 | 120 | 100 | 120 |
| வெண்டிக்காய் | 50 | 60 | 80 | 100 |
| கருணைக் கிழங்கு | -- | 50 | 80 | 80 |
| பயற்றங்காய் | 170 | 160 | 180 | 200 |
| லீக்ஸ் | 120 | 120 | 120 | 130 |
| பீற்றூட் | 60 | 40 | 60 | 60 |
| கறிமிளகாய் | 140 | 140 | 140 | 150 |
| இராசவள்ளி | -- | 500 | -- | -- |
| போஞ்சி | 120 | 100 | 160 | 200 |
| கத்தரி தம்புள்ள | -- | 60 | -- | -- |
| கீரை - 1 பிடி | 20 | 20 | 20-30 | 40 |
| தேசிக்காய் | 20 | 50 | 50 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 50 | 40-50 | 40-45 |
| முருங்கைக்காய் | 100 | 110 | 100 | 120 |
| வெங்காயப்பூ | 80 | 150 | 160 | 140 |

## இராசி பலன்

**28.02.2013**

**(மாசி 16, வியாழக்கிழமை)**

**சூரிய உதயம் காலை 6.25 மணிக்கு**
**திருதியை பின்னிரவு 12.39 மணிவரை**
**அத்தம் பின்னிரவு 3.25 மணிவரை**
**இராகுகாலம் 1.58-3.28 மணிவரை**
**சுபநேரம் 7.58-9.28 மணிவரை**

**மேடம்** தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், தொலைபேசி வழித்தகவல்கள் மகிழ்ச்சி தரும், நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், கடன்களை வசூலிக்க எடுத்த முயற்சி கைகூடும்.

**இடபம்** அரசு வழியில் அனுகூலமுண்டு, கல்யாணக் கனவுகள் நனவாகலாம், பிள்ளைகள் வழியில் சுபசெலவுகள் ஏற்படலாம், சஞ்சலங்கள் தீர இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள்.

**மிதுனம்** தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், வியாபாரத்தை விரைவுபடுத்தும் எண்ணம் உருவாகும், பணவரவு திருப்திதரும், பொதுப் பணிகளில் ஈடுபாடு காட்டுவீர்கள்.

**கடகம்** கனிவான பேச்சுகளால் காரியங்களை சாதித்துக் கொள்வீர்கள், பாசத்தோடு பழகியவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும், பொது நல ஈடுபாட்டால் புகழ்பெறுவீர்கள்,

**சிங்கம்** சான்றோர் சந்திப்புண்டு, விலையுயர்ந்த பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், பேச்சில் இனிமை தென்படும், தொழில் முன்னேற்றத்திற்கு பெரிதும் பாடுபடுவீர்கள்.

**கன்னி** வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அகலும், சிந்தனை மிகுதியான நாள், செய்தொழில் மேன்மையுண்டு, போசன சுகமுண்டு.

**துலாம்** மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், மனச் சஞ்சலங்கள் அதிகரிக்கும், குடும்பத்தினரின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பதன் மூலம் ஆதாயம் கிடைக்கும், சயன சுகக்குறைவான நாள்.

**விருச்சிகம்** மதிப்பும் மரியாதையும் உயர்வடையும், விருந்தினர் வருகையுண்டு, கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், சகோதர ஒற்றுமை பலப்படும், சுப தகவல்கள் வந்து சேரும் நாள்.

**தனுசு** வீட்டை அழகுபடுத்துவதில் அதிக ஈடுபாடு காட்டுவீர்கள், வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், அந்நியர் உதவியுண்டு.

**மகரம்** மாற்றினத்தவர்கள் மூலம் மகிழ்ச்சிக்குரிய தகவல்கள் வந்து சேரலாம், மருத்துவச் செலவுகள் குறைந்து மன நிம்மதியைக் கொடுக்கும், ஏட்டிக்கு போட்டியாக இருந்தவர்கள் மனம் மாறுவர்.

**கும்பம்** கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், விரயங்கள் கூடும், மற்றவர்களிடம் பேசும் போது நிதானத்தைக் கடைப்பிடிப்பது நல்லது, பயணங்களின் போது விழிப்புணர்ச்சி தேவை.

**மீனம்** மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள், விட்டுப்போன உறவுகள் மீண்டும் வந்து சேரலாம், களஸ்திர நன்மையுண்டு, எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவள்ளுவர் குருபூசை

(யாழ்ப்பாணம்)

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக் களமும் காமாட்சி அம்மன் அறநெறிப் பாட சாலையினரும் இணைந்து நடத்தும் திருவள் ளுவர் குருபூசை விழா எதிர்வரும் மார்ச் மாதம் 2 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி நாச்சிமார் கோவில் பகுதியில் அமைந்துள்ள ஸ்ரீகாமாட்சி அம்மன் கல்யாண மண்டபத்தில் இந்து அபிவிருத்தி உதவி உத்தியோகத்தர் திருமதி மாணிக்க ராஜசர்மா அனந்தலெட்சுமி தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்குருபூசை விழாவில் பிரதம விருந்தின ராக, ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் வி.மாணிக்கம், சிறப்பு விருந்தினர்களாக ஜே/98 கிராம சேவகர் ஆர்.சுரேஸ், வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் தேவஸ்தான தலைவர் அ.சிதம்பரநாதன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக ஈவினை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் செ..பரமேஸ்வரன், யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரி ஆசிரியை ந.தமிழ்ச்செல்வி, மருதடி விநாயகர் அறநெறிப் பாடசாலை தர்மாசிரியர் திருமதி புஸ்பராஜா லிங்கராஜி ஆகியோரும் பங்கு கொள்ளவுள் ளனர்.

இதேவேளை, புண்ணிய கிராம விழாவை முன்னிட்டு மேற்குறித்த திணைக்களத்தால் நடத்தப்படும் **அன்பே சிவம்** என்ற கருப் பொருளிலான. நாடகப்போட்டி எதிர்வரும் மார்ச் 23 ஆம் திகதி இடம்பெறவுள்ளது. இதில் பங்குபற்ற விரும்பும் மாணவர்களின் விப ரங்களை பதிவுசெய்யுமாறு கேட்டுக் கொள் ளப்பட்டுள்ளது. நல்லூர் பிரதேச செயலகத் திற்குட்பட்ட அறநெறிப் பாடசாலைகளில் இருந்து ஒரு பாடசாலைக்கு 6 மாணவர்கள் வீதம் பங்குபற்ற முடியும் எனவும் தரம் 2 முதல் தரம் 11 வரையான மாணவர்கள் இப் போட்டியில் பங்குபற்ற முடியும்.

இந்நாடகப் போட்டியில் கலந்து கொள் ளும் மாணவர்களின் விபரங்களை எதிர்வ ரும் மார்ச் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் திருமதி மா.அனந்தலெட்சுமி (இந்து அபிவி ருத்தி உதவி உத்தியோகத்தர்), ஸ்ரீலஸ்ரீ ஆறு முகநாவலர் மணி மண்டபம், நல்லூர் ஆலய முன்றல், நல்லூர் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த நாடகப் போட்டி எதிர்வரும் 23 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9 மணி க்கு அரியாலை கிழக்கு கோப்பர்குளம் ஸ்ரீ துரவடிப் பிள்ளையார் கோவிலில் இந்து அபிவிருத்தி உதவி உத்தியோகத்தர் திருமதி மாணிக்கராஜ சர்மா அனந்தலெட்சுமி தலை மையில் நடைபெறவுள்ளது. (அ-5)



நன்றி: மிரர்

# கிராம அலுவலர் மீதான தாக்குதலை கண்டித்து நேற்று நல்லூரில் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

அரியாலை மத்தி, தெற்கு கிராம உத்தி யோகத்தர் எஸ்.விஜிதன் மீது மேற்கொள்ளப் பட்ட தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய நபர்களை கைது செய்து உரிய சட்ட நடவ டிக்கை எடுக்கப்பட வேண்டுமென வலியுறு த்தி நல்லூர் பிரதேச செயலகம் முன்பாக, பொதுமக்கள் மற்றும் கிராம உத்தியோகத்தர் கள் இணைந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்று காலை 9 மணியளவில் இந்த ஆர்ப்பாட்டம் ஆரம்பமானது. பிரதேச செய லகத்தின் பிரதான வாயிலில் கூடிய பொது மக்கள் உட்பட கிராம சேவை யாளர்கள் செயலகத்தின் பிரதான வாயில் கதவினை பூட்டி வைத்து ஆர்ப் பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அத்தோடு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட வர்கள் தமது கைகளில் எதிர்ப்பு பதா கைகளையும் தாங்கி நின்றனர். அதில் **நீதியான விசாரணை செய், உடன் கைது செய், தண்டனை வழங்கு, நீதியாக வேலை செய்வதற்கு அநீதி ஏன்?, அரச அதிபரே ஏன் இதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை?** எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

கடந்த வியாழக்கிழமை இரவு 7 மணியளவில் நாயன்மார்கட்டு ஆடிய பாதம் வீதியில் வைத்து இனந்தெரியாத நபர்களினால் தாக்குதலுக்குட்படுத்தப் பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.



இதேவேளை, பொதுமக்கள் பிரதேச செயலகத் தின் வாயில் கத வினை அடைத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுக் கொண் டிருந்தபோது கால தாமதமாக பணிக்கு வந்த சுமார் 30 இற்கும் மேற்பட்ட அரசாங்க உத்தியோ கத்தர்கள் பிரதேச செயலகத்திற்குள் செல்ல முடியாது அந்தரித்ததை அவதானிக்கக்கூடிய தாயிருந்தது. இதில்பலர்பட்டதாரிபயிலுநர்கள்என்டது குறிப்பிடத்தக்கது.(அ-6)

# பனி தொழிற்சாலை திறப்புவிழா நாளை

(கும்பளை)

கற்கேவளம் பாடசாலை வீதியில் U.S.AID நிறு வனத்தின் அனுசரணையுடன் கற்கோவளம் பனிக் கட்டடத் தொழிற்சாலை அமைக்கப்பட்டுள்ளது.

இக்கட்டட திறப்பு விழா நாளை வெள்ளிக் கிழமை பிற்பகல் 1.15 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

ஹற்றன் நஷனல் வங்கி யாழ்ப்பாணக் கிளை முகாமையாளர் சிவசரவணபவன் சுந்தரேஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக ஐக்கிய அமெரிக்காவில் இருந்து வருகை தந்த சர்வதேச அபிவிருத்தி திணைக்களத் தைச் சேர்ந்த பிரதிப் பணிப்பாளர் திருமதி டெனிஸ் றோலின்ஸ் கலந்து சிறப்பிக்கவுள்ளார் என பனிக் கட்டித் தொழிற்சாலையின் நிறைவேற்று பணிப்பாளர் தி.சேந்தன் அறிவித்துள்ளார். (அ-3-19)


## தொடர் மாடி வீடு வாடகைக்கு

கொழும்பு வெள்ளவத்தையில் பாதுகாப்புடைய தனித்துவமான Flat ஒன்று இருவர் தங்குவதற்கு சகல வசதிகளுடனும் வாடகைக்கு உள்ளது. எனவே தேவையுடைய வர்கள் தொடர்பு கொள்ளவும் **0772556113**

(C-2543)



## வேலைவாய்ப்பு

வடக்கு வாழ் இளைஞர் யுவதிகளுக்கு ஓர் அரிய வாய்ப்பு நீங்கள் (O/L) சாதாரணதரம் படித்தவர்களா? தன்னிச்சை யாக செயற்படக் கூடியவரா? விடாமுயற்சியுடன் கூடிய நேர்மைத்தன்மை உள்ளவர்களா?.......

உங்களுக்காகவே கனடா நாட்டைச் சேர்ந்த **Granton group of Company** தனது கிளையை யாழ் நகரிலும் திறந்து இரண்டு ஆண்டு (02) பூர்த்தியை இட்டு 20 பேருக்கு வேலை தர முன்வந்துள்ளது. ஆறு மாத கால பயிற்சியுடன் இவ் வேலையை பூர்த்தி செய்வோருக்கு வெளிநாட்டு சுற் றுலாப் பயணங்களும் ஒழுங்கு செய்து தர முன் வந்துள்ளது.

**அழைக்க வேண்டிய இலக்கம்:**

**- 0772151014, 0217212045**

(2061)


## அறிவித்தல்

மகாதேவா, ஆச்சிரமச் சிறுவர் இல்லத்திற்கு சட்ட ஆலோசனை வழங்குவதற்கும் இல்லச் சிறுவர்களுக்கும் அலுவலர்களுக்கும் சட்டம், ஒழுக்கம் என்பவற்றினை போதனை செய்வதற்கும் சிரேஷ்ட சட்டத்தரணிகளைக் கொண்ட சட்ட நிறுவனம் ஒன்றுடன் ஒப்பந்தம் செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே பொருத்தமான சட்ட நிறுவனத்தை இச் சேவையாற்றுவதற்கு விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**நிபந்தனைகள்:**

01. சட்டநிறுவனம் 5-க்கு மேற்பட்ட முதுநிலைச் சட்டவாளர்களைக் கொண்ட சட்ட நிறுவனமாக இருத்தல் வேண்டும்.
02. இலகுவான இல்லச் செயற்பாடுகளுக்கு போதிய ஆலோசனை வழங்குதல் வேண்டும்.
03. இல்ல நிர்வாகிகளுக்கும் பிள்ளைகளுக்கும் கருத்தரங்குகளும் பயிற்சிப்பட்டறைகளும் ஒழுங்கு செய்து நடாத்த வேண்டும். இதற்கான வருடாந்த வேலைத் திட்டம் ஒன்று சமர்ப்பிக்க வேண்டும்.
04. விண்ணப்பிக்கும்போது தங்களது கடந்தகால அனுபவம் மற்றும் சமூக நிறுவனங்களுக்குத் தாங்கள் வழங்கிய சட்ட உதவிச் சேவைகள் பற்றிய விபரங்கள் குறிப்பிடவேண்டும்.
05. மேலும் எமது நிறுவனம் சிறுவர்களைப் பராமரிக்கும் நிறுவனம் என்ற வகையில் தாங்கள் எவ்வகையில் உதவ முடியும் மென்ற வேலைத்திட்டத்தினையும் சமர்ப்பிக்க வேண்டும்.
06. எங்களது காணிகள் சொத்துக்களைப் பராமரிப்பது பேணுதல் தொடர்பானசட்ட ஆலோசனைகளையும் வழங்கியுதவ வேண்டும். இதற்கான வேலைத்திட்டத்தினையும் உள்ளடக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.
07. மேலும் எமது நிறுவனம் பற்றிய விபரங்களை எமது வெப்சைற் முகவரி www.mahadevahome.org லும் எனது பெயரில்உள்ள Facebookலும் பார்வையிட முடியும்.

இங்ஙனம்
சமூகசேவையில் உள்ள

தி.இராசநாயகம்
தலைவர்
மகாதேவா ஆச்சிரமச் சிறுவர் இல்லம்
ஜெயந்திநகர், கிளிநொச்சி.

(C-2540)


01-03-2013 இல்

மாணிக்க விழாவினைக் கொண்டாடும்

உயர்ந்து விளங்கும்

*The Express Institute* இனை

வாழ்த்துவதில் உவப்படைகின்றோம்.

நாற்பதாவது ஆண்டின் நிறைவினைக் கொண்டாடும் 'எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட்' நிறுவனமே! நூற்றாண்டு விழாவினைச் சிறப்பாகக் கொண்டாட எம் வாழ்த்துக்கள்.


K.K.S. வீதி, இணுவில்.

வாழ்த்துவோர், பேராசிரியர் க. தேவராஜா குடும்பம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ


ஸ்ரீ அம்மா பகவான் சரணம்



ஓம் சச்சிதானந்த பரப்பிரம்ம புருஷோத்தம
பரமாத்மா ஸ்ரீ பகவதி சமேத ஸ்ரீ பகவதே நமஹ

# ஸ்ரீ கல்கி பகவான் 65 ஆவது ஜென்ம தினம்

07.03.2013 - வியாழக்கிழமை



அன்பர்களே...!

ஸ்ரீ கல்கி பகவான் 65 ஆவது ஜென்ம தினத்தை முன்னிட்டு இலங்கை பக்தர்களுடன் சற்சங்கங்கள் மூலம் ஒழுங்கு செய்யப்படும் நிலையங்களில் Webcast மூலம் உரையாற்றி தரிசனம் வழங்க சங்கல்பம் பூண்டிருக்கிறார். இந்நிகழ்வானது

## நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில்

**03.03.2013 ஞாயிற்றுக்கிழமை பி.ப.3 மணிக்கு இடம்பெறவுள்ளது**

பகவானின் உரையை நேரடியாக கேட்டு இன்புற்று தரிசனம் பெறத் தக்க இவ்வரிய வாய்ப்பினை தவறாது பெறும் வண்ணம் அனைவரையும் அழைக் கின்றோம்.

65 ஆவது ஜென்ம தின விழாவானது 07.03.2013 வியாழக்கிழமை சுன்னாகம் கதிர மலைச் சிவன்கோயில் மண்டபத்தில் நடைபெறும். வியாழக்கிழமை காலை 6 மணிக்கு சுன்னாகம் ஐயனார் கோயில் வீதி சற்சங்கத்திலிருந்து பாற்குட பவனி, நகர சங்கீர்த் தனத்துடன் ஸ்ரீ அம்மா பகவான் எழுந்தருளி கே.கே.எஸ் வீதியூடாக சுன் னாகம் கதிரமலைச் சிவன் கோயில் மண்டபத்தையடைந்து '**பாதபூஜை**' நிகழப்பெற்று **Webcast தரிசனம்** மு.ப.10 மணிக்கு இடம்பெறும். இந்நிகழ்விலும் கலந்து ஸ்ரீ அம்மா பகவானின் அருளையும் அனுக்கிரகத்தையும் பெறும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மதியம் மகேஸ்வர பூஜை இடம்பெறும்.

(2029) **ஸ்ரீ அம்மா பகவான் சற்சங்கங்களின் ஒன்றியம், யாழ்.மாவட்டம்.**

**வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு:**
**T.P : 021 321 0815, 021 567 1540**

### வர்த்தகர்களுக்கு 32500 ரூபா தண்டம்

(பூந்தோட்டம்)

நிறுத்தல் அளவை இயந்திரங்களுக்கு முத்திரையிடாத 17 பேர் மீது மன்னார் நீதவான் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் 16 வழக்குகளுக்கு தீர்ப்பளிக்கப்பட்டு 32 ஆயிரத்து 500 ரூபா தண்டமாக அறவிடப்பட்டுள்ள தாக அளவீட்டு அலகுகள் நியமங்கள் சேவை திணைக்களத்தின் வவுனியா அலுவலக பொறுப்பதிகாரி பாலஸ்கந்தன் இராஜேஸ்வரன் தெரிவித்தார்.

கடந்த 8, 9, 10 ஆம் திகதிகளில் மன்னார் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட திடீர் பரிசோதனையின் போது பொது நிறுத்தல் அளவை இயந்திரங்களுக்கு முத்திரையிடப்படாத வர்த்தக நிலையங்கள் கண்டுபிடிக்கப்பட்டு அதன் உரிமையாளர்களுக்கு எதிராக நேற்றுமுன்தினம் வழக்குதாக்கல்செய்யப்பட்டதாகவும் இதன் போது குறித்த பணம் தண்டமாக அற விடப்பட்டதாக அவர் தெரிவித்தார். (அ-2-266)

## தொடர்ந்தும் உங்கள் சேவையில்

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்
- கடிதங்கள்
- அன்பளிப்பு பொருட்கள்
- உடுபுடைவைகள்
- CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

(சு/2534)

**ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்**
303, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. No.:-021 222 5392

WESTERN UNION MONEY TRANSFER



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 28 ஆவது பட்டமளிப்பு விழாவில் கல்வி முதுமாணிப் பட்டத்தில் சிறப்புத் தேர்ச்சி பெறும் M.Ed merit

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**சுப்ரமணியம் தர்மரத்தினம்**

B.A.Hons M.A. Pgde (Merit), PGDEM (Merit) M.Ed (Merit), SLPS - 2-1 - கோட்டக் கல்விப் பணிப்பாளர் – பூநகரி

இவர் மேலும் பல பட்டங்களை பெற்று கல்வியுலகில் சாதனைகள் படைத்து நீடூழி வாழ்க என வாழ்த்துகின்றோம்.

**பாடசாலைச் சமூகம்,**
கிளி/பரமன் கிராய் அ.த.க.பாடசாலை,
கிளி/வினாசியோடை.அ.த.க. பாடசாலை - பூநகரி.

(2033) Valampurii Graphics (2031)

## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1978 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: அத்தம் 2<br>உயரம்: 5'3"<br>கி.பா: 18<br>தகைமை/தொழில்: A/L, சொந்தக்கடை<br>எ.பா: சைவபோசனம்<br>தொ.இ: B -1300 | பிறப்பு: 1983 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: சித்திரை 2<br>உயரம்: 5'2"<br>கி.பா:16.5<br>தகைமை/ தொழில்: O/L (விவாகரத்துப் பெற்றவர்)<br>தொ.இ: G -1312 |
| பிறப்பு: 1981 இந்துவேளாளர்<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>உயரம்: 5'7"<br>கி.பா:15<br>தகைமை/தொழில்: NCT தனியார் தொழில் UK- PR<br>தொ.இ: B -1301 | பிறப்பு: 1981 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: பூராடம் 2<br>உயரம்: 4'10"<br>கி.பா: 44.5, 11 இல் செவ்<br>தகைமை/ தொழில்: இந்தியா +2 (12th), ஆசிரியை<br>தொ.இ: G-1314 |
| பிறப்பு: 1981 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: சித்திரை<br>உயரம்: 5'9"<br>கி.பா: 36, 12இல் செவ்<br>தகைமை/ தொழில்: A/L, அரச முகாமைத்துவ உதவியாளர்<br>தொ.இ: B -1305 | பிறப்பு: 1988 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: பரணி<br>உயரம்: 5'2"<br>கி.பா: 33, 4 இல் செவ்<br>தகைமை/ தொழில்: A/L<br>தொ.இ: G -1315 |
| பிறப்பு: 1980 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: சித்திரை 4,<br>கி.பா: 18.75, 8இல் செவ்<br>தகைமை/தொழில்: CIMA, Accountant<br>தொ.இ: B -1320 | பிறப்பு: 1979 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: சதயம்<br>உயரம்: 5'4"<br>தகைமை/ தொழில்: BA, ஆசிரியை<br>தொ.இ: G -1316 |

சகல தொடர்புகளுக்கும்:-


**கல்யாண மாலை**

(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )

ஊடக அனுசரணை வலம்புரி





## கைத்தொலைபேசி இலவச சேவீஸ்

அன்பான வடமாகாண வாடிக்கையாளர்களே....!

உங்களுடைய சகல கைத்தொலைபேசிகளையும் ஒரு கிழமைக்குப் பின்வரும் நாட்களில் இலவசமாக சேவீஸ் செய்து கொடுக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம். சேவீஸ் செய்து கொடுக்கப்படும்.

**நாட்கள் மாசி 25 முதல் பங்குனி 2 வரை**
**(25,26,27,28 பங்குனி 1,2 ஆம் திகதிகளில்)**

Valampurii Graphics (சி-2518) (சி/2518)

**S.V.M. Technology PVT (Ltd)**
No: 180, Stanley Road, Jaffna.
T.P:021 222 0293, 0214925828, 077 2441679, 077 3380820.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்ணாவிரதம் இருந்த விவசாயிகள் ஜனாதிபதிக்கு மகஜர் அனுப்பி வைப்பு

(பூந்தோட்டம்)

**விவசாயிகள், மூன்று கோரிக்கைகளை முன்வைத்து நேற்றுமுன்தினம் உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுத்தனர். மன்னார், முருங்கன், செம்மண்தீவு விளையாட்டு மைதானத்தில் முன்னெடுக்கப்பட்ட இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் அரசியல் முக்கியஸ்தர்கள், பொது அமைப்புகளைச் சேர்ந்தவர்கள், விவசாயிகள் பொதுமக்கள் என நூற்றுக்கணக்கானோர் பங்கேற்றனர்.**

இப்போராட்டத்தின் இறுதியில் விவசாயிகளின் கோரிக்கைகள் அடங்கிய மகஜரொன்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கையளிப்பதற்காக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் சரத் ரவீந்திரவிடம் கையளிக்கப்பட்டது. அம்மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

கடந்த யுத்த பேரழிவின்போது மோசமான இழப்புக்களுக்கும் பின்னடைவுகளுக்கும் முகம்கொடுத்த வன்னி பெருநிலப் பரப்பின் ஒரு பகுதியினர் மன்னார் மாவட்ட விவசாயிகளாவர்.

கடந்த 2006 ஆம் ஆண்டு மகா காலப்போக அறுவடை நெருங்கிய காலப்பகுதியில் யுத்தம் தீவிரப்படுத்தப்பட்டதால் விவசாயத்தில் பெருமளவு முதலீட்டைச் செலவிட்ட நாம் அதனைப்பெற அறுவடை செய்ய முடியாது. அவற்றை முழுமையக கைவிட்டு இடம்பெயர வேண்டிய அவலத்திற்குள்ளானோம்.

வங்கிகளிடமும் தனியாரிடமும் விவசாயத்திற்காக பெறப்பட்ட கடன்கள் மீளச் செலுத்த முடியாமலும் விவசாய செலவுக்காக அடைவு வைத்த நகைகளை மீட்க முடியாமலும் உள்ளனர். 2010 இல் மீள்குடியமர்த்தப்பட்ட நாம் முதலீடு எதுவும் இல்லாமையால் அவ்வாண்டு காலப்போகச் செய்கையில் ஈடுபட முடியாத அவலத்திற்கு உள்ளானோம்.

எனினும் 2011 ஆம் ஆண்டில் ஓரளவு விவசாயத்தில் ஈடுபட்டோமாயினும் அறுவடை செய்த நெல்லும் சந்தைப்படுத்த வாய்ப்பு இல்லாமையால் தனியாருக்கு குறைந்த விலைக்கு விற்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதால் முதலீட்டை மீட்க முடியாது கடனில் தத்தளித்தோம்.

2012 இல் செய்த வேளாண்மை ஒருபுறம் நீர்ப்பற்றாக்குறையாலும் வெள்ளப்பெருக்கினாலும் அழிவுக்குட்பட்டதால் இவ்வாண்டிலும் பாரிய நட்டத்தையே சந்தித்தோம்.

இக்காலத்தில் எரிபொருள் விலை உயர்வு, விதை நெல் தட்டுப்பாடு, பசளை வகைக்கான மானியங்கள் வழங்கப்படாமை போன்ற காரணங்களால் உற்பத்திச் செலவைக் கூட மீட்டெடுக்க முடியாத நிலைக்குள்ளானோம்.

இக்காரணங்களாலும் சந்தைப்படுத்தும் வாய்ப்பு எம் மாவட்டத்தில் இல்லாமையாலும் உள்ளீடுகளுக்கான மானியங்கள் இல்லாமையாலும் எரிபொருள் விலை அதிகரிப்பாலும் உற்பத்திச் செலவை மீட்டெடுக்க முடியாத நிலையில் தனியார் சுரண்டல் காரணமாக 66 கிலோ மூடைக்கு பதிலாக 75 கிலோ மூடைக்கு வழங்கப்பட்டதோடு நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு குறைவாகவே விற்க வேண்டிய அவலம் எமக்கு ஏற்பட்டது.

மீள்குடியமர்வின் பின் எமக்கு வழங்கப்பட வேண்டிய வீட்டுவசதி, வாழ்வாதாரவசதி போன்ற நிவாரண வசதிகள் எவையும் எமக்கு வழங்கப்படாத நிலையில் எமது முயற்சிகளுக்கு எதுவித பலனும் பெறமுடியாத அவலத்திற்கும் உள்ளாகியுள்ளோம்.

எனவே, இவற்றை கருத்தில் கொண்டு கீழ்வரும் குறைந்தபட்ச நிவாரணங்களை யாவது உடனடியாக வழங்கி உதவுமாறு பணிவுடன் வேண்டி ஓர் அடையாள உண்ணாவிரதத்தை மேற்கொண்டு இக்கோரிக்கைகளை முன்வைக்கின்றோம்.

வங்கி கடன்கள் அனைத்தையும் இரத்து செய்ய வேண்டும். அடைவு வைக்கப்பட்ட நகைகளுக்கான வட்டிகளை இரத்து செய்வதோடு மீட்புக்காலத்தை நீடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். எரிபொருள் விலை உயர்வுக்கெதிராகவும் விவசாய உள்ளீடுக்காகவும் உரிய மானியம் வழங்க வேண்டும். நெல்லுக்குரிய தரமான விலை நிர்ணயம் செய்து உறுதிப்படுத்தப்பட வேண்டும். சந்தை வாய்ப்பை அதிகரிக்க வேண்டும். விதை நெல் உற்பத்திக்கு ஊக்கமளிப்பதுடன் உற்பத்தி செய்யப்பட்ட விதை நெல்களை அத்தாட்சிப்படுத்தும் உத்தியோகத்தர்களின் சேவையை அதிகரிக்க வேண்டும். வறட்சி, வெள்ளப்பெருக்கு போன்ற இயற்கை அனர்த்தங்களால் பயிர் பாதிப்புக்குள்ளாகும்போது காப்புறுதி செய்தவர்களுக்கு காப்புறுதி தொகைகளை தாமதமின்றி வழங்க வேண்டும். மேற்படி கோரிக்கைகளின் மீது விரைவான நடவடிக்கையெடுக்குமாறு மன்னார் மாவட்ட விவசாயிகளான நாம் பணிவுடன் வேண்டுகின்றோம் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட விவசாய சம்மேளனம் ஏற்பாடு செய்திருந்த இந்த போராட்டத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன், எஸ். வினோ நோதராதலிங்கம், மக்கள் விடுதலைமுன்னணியின் உறுப்பினர் சாமிவேல் செல்வக்குமார், மன்னார் நகரசபை, மன்னார், நானாட்டான், மாந்தை மேற்கு ஆகிய பிரதேச சபைகளின் தலைவர்கள், உபதலைவர்கள், உறுப்பினர்கள், விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், விவசாயிகள் என பல நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து கொண்டிருந்தனர். (அ-2-266)

# திருட்டு மின்சாரம் பெற்ற ஒன்பது பேருக்கு அபராதம்

## 1,62,000 ரூபா அபராதம்

(கரவெட்டி)

வடமராட்சி வல்வெட்டித்துறை பகுதியில் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற 9 பேருக்கு ஒரு இலட்சத்து 62 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்த பருத்தித்துறை நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

வடமராட்சி வல்வெட்டித்துறை பகுதியில் கடந்த 23 ஆம் திகதி இரவு கொழும்பில் இருந்து வந்த விசேட திடீர் மின்சார பரிசோதனை பிரிவு அதிகாரிகளினால் 9 பேருக்கு எதிராக வழக்கு பதிவு செய்யப்பட்டது.

இவ்வழக்கு விசாரணை நேற்று பருத்தித்துறை நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

குறித்த 9 நபர்களும் மன்றில் தமது குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் நீதிமன்றத்திற்கு அபராதமாக தலா 10 ஆயிரம் ரூபாவும் மின்சாரசபைக்கு நட்டஈடாக தலா 8 ஆயிரம் ரூபாவும் செலுத்துமாறு உத்தரவிட்டனர். (அ-3-24)

# யுத்தகால உயிரிழப்புக்கள் தொடர்பில் கணக்கெடுப்பு

(கொழும்பு)

போர் நடைபெற்ற காலத்தில் நடந்த உயிரிழப்புக்கள் மற்றும் சொத்து சேதங்கள் குறித்து நாடளாவிய ரீதியில் கணக்கெடுப்பு நடத்தப்பட உள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அடுத்த மாதம் இந்த கணக்கெடுப்பு ஆரம்பிக்கப்படவுள்ளது. 1983 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இலங்கையில் அனைத்து பிரதேசங்களிலும் மோதல்கள் காரணமாக ஏற்பட்ட உயிரிழப்புக்கள் மற்றும் சொத்து சேதங்கள் முழுமையான கணக்கெடுப்பு நடத்தப்படும் எனவும் திணைக்களம் கூறியுள்ளது.

பொதுநிர்வாகம், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு மற்றும் மக்கள் தொகை மற்றும் புள்ளிவிபரத்திணைக்களம் ஆகியன இணைந்து இந்த கணக்கெடுப்பை நடத்தவுள்ளன. (அ-2)

# விற்பனை நிலையங்களில் துணிகரக் கொள்ளை

(குருமன்காடு)

வவுனியா காய்கறி மொத்த விற்பனை செய்யும் எட்டு கடைகளில் துணிகரக் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவம் கடந்த 25 ஆம் திகதி இடம்பெற்றுள்ளது.

வவுனியா நகரசபைக்கு சொந்தமான காய்கறி விற்பனை சந்தையில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதுபற்றி மேலும் தெரிய வருவதாவது,

சம்பவதினம் பிற்பகல் கடை வியாபாரத்தை முடித்து கொண்டு அதிகாலை வியாபாரம் செய்வதற்காக கடையை வந்து பார்த்த போது கடை உடைக்கப்பட்டு களவெடுக்கப்பட்டிருந்தது. அடுத்த நாள் காய்கறிகளை கொள்வனவு செய்வதற்கு வைக்கப்பட்டிருந்த ஒரு இலட்சத்து 62 ஆயிரம் ரூபா பணமே இவ்வாறு கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

வியாபாரிகள் பொலிஸில் முறைப்பாடு செய்ததை தொடர்ந்து மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-2-250)

# காலாவதியான அரிசி மூடைகள் பறிமுதல்

காலாவதியாகும் சரியான திகதி மற்றும் உற்பத்தி செய்யப்பட்ட திகதி, விலை எதுவும் குறிப்பிடப்படாமல் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த 2 ஆயிரத்து 500 கிலோ பாஸ்மதி அரிசியை நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையினர் கைப்பற்றியுள்ளனர்.

கூட்டுறவுத்துறை அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவின் பணிப்பின் பேரில் மேற்படி அதிகார சபை நேற்று முன்தினம் கொழும்பு பழைய சோனகத்தெரு கடையொன்றிலிருந்து மேற்படி பாஸ்மதி அரிசியை கைப்பற்றியுள்ளது.

25 கிலோ வீதம் 10 பைகளில் அடைக்கப்பட்டிருந்த பாஸ்மதி அரிசி இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டது. எனினும் இவற்றில் உற்பத்தி செய்யப்பட்ட திகதியோ விலையோ குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

உற்பத்தி செய்யப்பட்ட திகதி, வருடம், இடம் ஆகியவை குறிப்பிடப்படாமல் மாதம் மட்டும் குறிப்பிடப்பட்டிருந்தது. அரிசிப் பைகளில் முன்பக்கத்தில் காலாவதியாகும் ஒரு திகதியும் பின்பக்கத்தில் போலியாக மாற்றப்பட்ட இன்னுமொரு திகதியும் குறிப்பிடப்பட்டுள்ளது.

வர்த்தக நிலைய உரிமையாளருக்கு எதிராக நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளது. (அ-2)



யா/ஆனைக்கோட்டை அ.மி.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட மக்கள் வங்கி முகாமையாளர் செ.கந்தசாமி மங்கல விளக்கேற்றுவதையும் அருகில் விருந்தினர்கள் நிற்பதையும் மாணவர்களின் அணிவகுப்பு நிகழ்வினையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கை அரசின் போர்க்குற்றங்களை இதயம் படைத்தோர் ஏற்றுக் கொள்ளார்

## கருணாநிதி அறிக்கை; டெசோவுக்கும் அழைப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு எதிராக டெசோ அமைப்பு சார்பில் எதிர்வரும் 5 ஆம் திகதி நடைபெறும் போராட்டத்தில் அனைவரும் அணி யாக கலந்து கொள்ள வேண்டும் என தி.மு.க தலைவர் கலைஞர் அழைப்பு விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இலங்கை இராணுவம் விடு தலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் 12 வயது பாலகன் பாலச்சந்திரனை கொடுமையாகச் சுட்டுக் கொன்றுள்ளது.

தாக்குதல்கள் நடத்தக் கூடாதென வரையறுக்கப்பட்ட பகுதிகளில் இலங்கை இராணுவம் அத்து மீறி கொடூரத் தாக்குதல்களை நடத்தி ஆயிரக்கணக்கான ஈழத்தமிழ் மக்களை கொன்ற காட்சிகளை சனல் 4 நிறுவனம் ஆவணப்படமாக வெளியிட்டுள்ளது.

பெண்கள் சீரழிக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்ட காட்சிகளும் ஆண்களை நிர்வாணமாக்கி சுட்டுக் கொல்கின்ற காட்சிகளும் அதில் இடம் பெற்றுள்ளன.

இதயம் படைத்த யாருமே ஏற்றுக் கொள்ள முடியாத போர்க் குற்றங்களை இலங்கை அரசு செய்துள்ளது என்பதற்கு அடுக்கடுக்கான சான்றுகளாக அவை உள்ளன.

இலங்கையில் நடைபெறும் கொடுமைகள் இன்று, நேற்றல்ல தந்தை செல்வாவின் காலத்திருந்தே தமிழன் என்றாலே அவனைத் தாக்கிக் கொன்று குவிக்கிற அளவுக்கு சிங்கள வெறி அப்போதே தலை தூக்கியது.

தங்கத்துரை, குட்டிமணி உள்ளிட்டோரை சிறைச்சாலையிலேயே கொலை செய்து அவர்களது கண்களைப் பிடுங்கி கீழே போட்டு மிதித்த கொடுமையெல்லாம் நடைபெற் றது.

இந்தவேதனையெல்லாம்நினைவு படுத்தி இலங்கை ஜனாதிபதி ஒரு சர்வதேச போர்க்குற்றவாளி என்று உணரச் செய்வதற்காகத்தான் எதிர் வரும் மார்ச் 5 ஆம் திகதியன்று சென்னையில் இலங்கைத் தூதரகத்தை டெசோ இயக்கத்தின் சார்பில் முற்றுகையிடும் அறப் போராட்டமும் அதே நாளில் இந்திய தலைநகரான டில்லியில் நாடாளுமன்றத்துக்கு முன்னால் ஜனநாயக வழியில் கண்டன ஆர்ப்பாட்டமும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த போராட்டத்தில் தி.மு.க உறுப்பினர்கள் மட்டுமன்றி டெசோ அமைப்பில் இடம்பெற்றுள்ள இயக்கங்களைச் சேர்ந்தவர்களும் அணி அணியாக கலந்து கொண்டு வெற்றியாக்கித் தர வேண்டும். இவ்வாறு கலைஞர் கூறியுள்ளார். (செ-1)




வடக்கு பிராந்திய (YMCA)யின் தலைவர் தேசமானி லயன் எஸ்.ஜே.செல்வராஜாவுக்கு கடந்த 23 ஆம் திகதி தேசமானி விருது வழங்கப்பட்டது. இதனை கௌரவிக்கும் முகமாக வடபிராந்திய (YMCA) களினால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்படுவதைப் படத்தில் காணலாம்.

# இந்திய ம.உ கண்காணிப்பகத்தின் குற்றச்சாட்டுக்கு காரியவசம் பதில்

(கொழும்பு)

இந்தியாவில் செயற்படும் மனித வுரிமைகள் கண்காணிப்பகம் இலங்கை தொடர்பில் வெளியிட்ட புதிய அறிக்கைக்கு புதுடில்லியில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகர் பிரசாத் காரியவசம் பதில் தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலி சந்தேகத்திற்குரியவர்கள் சித்திரவதைக்கு உட்படுத்தி தகவல் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாக மனிதவுரிமைகள் கண்காணிப்பகத்தில் முறையிடப்பட்டிருந்தது.

இந்தியாவில் செயற்படும் மனித வுரிமைகள் கண்காணிப்பகத்தின் தெற்காசிய வலய பணிப்பாளர் மினாக்ஸி கங்குலி இலங்கையில் இடம் பெற்ற பாலியல் வன்புணர்வு மற்றும் துன்புறுத்தல் சம்பந்தமான 75 சம்பவங்கள் குறித்த ஆவணப்படுத்தல் தம்மிடம் இருப்பதாக தெரிவித்துள்ளார்.

குறிப்பாக இலங்கை பாதுகாப்பு தரப்பினரால் மேற்கொள்ளப்பட்ட இவ்வாறான சம்பவங்களே அதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இருந்த போதும் தற்போது இலங்கை நெருக்கடியை எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் சந்தப்பத்தில் மேலும் சிக்கலான சூழ்நிலைக்கு உள்ளாக்கும் குற்றச்சாட்டு என்று அவர் தெரிவித்துள்ளார்.

அந்த குற்றச்சாட்டுக்கள் இது வரை எந்த விதத்திலும் உறுதிப்படுத்தப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உரிய விசாரணைகள் மற்றும் நீதிமன்ற செயற்பாடுகள் இன்றி இலங்கை பாதுகாப்பு தரப்பினர் சித்திரவதை மூலம் தகவல் பெற்றுக் கொண்டண்மயை உறுதிப்படுத்த முடியாது என்றும் அவர் தமது பதிலறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# இலங்கையின் போக்கில் மாற்றங்கள் ஏற்படவேண்டும்

## கனடா வலியுறுத்து



(கொழும்பு)

இலங்கையில் மாற்றங்கள் ஏற்படாவிட்டால் இந்த ஆண் டின் இறுதியில் கொழும்பில் நடைபெறவுள்ள கொமன்வெல்த் உச்சி மாநாட்டைப் புறக்கணிக்கும் முடிவில் இருந்து தாம் பின் வாங்கப் போவதில்லை என்று கனேடிய பிரதமர் ஸ்டீபன் ஹாப்பர் அறி வித்துள்ளார்.

கனேடிய நாடாளுமன்றத்தில் நேற்று முன் தினம் உரையாற் றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் தொட ர்ந்து உரை நிகழ்த்துகையில்,

இலங்கையின் நிலைமைகள் முன்னேற்றமடையாது போனால் அங்கு நடைபெறும் கொமன்வெல்த் தலைவர்களின் மாநாட்டில் கலந்து கொள்ளப் போவதில்லை என்று அறி வித்திருந்தேன்.

அந்த அறிக்கையை வெளியிட்ட பின்னர் அங்கு ஏற்பட்டுள்ள மாற்றங்கள் கவலைய ளிக்கிறது. அந்த நாடு மோசமான திசையில் சென்று கொண்டிருக்கிறது என்று அவர் தெரி வித்துள்ளார்.

கொமன்வெல்த் மாநாட்டைப் புறக்கணிக் கும் முடிவை கனடா கைவிட வேண்டும் என்று கொமன்வெல்த் செயலர் கமலேஸ் சர்மா கேட்டுக் கொண்டிருந்த போதும் தனது நிலை ப்பாட்டில் உறுதியாக இருப்பதாக கனேடியப் பிரதமர் ஸ்டீபன் ஹாப்பர் தெரிவித்துள்ளார். இலங்கை விடயத்தில் மென்போக்குடன் நடந்து கொள்ளுமாறு விடுக்கப்பட்ட அழைப்புகளையும் கனேடிய பிரதமர் நிராகரித்துள்ளார். (அ-2)

# இராஜதந்திர அழுத்தங்களை வழங்கியே சம்பந்தன் மற்றும் மாவை லண்டன் பயணம்

## கூட்டமைப்பு தெரிவிப்பு

ஜெனீவாவில் இலங்கைக்கு எதிராக கொண்டு வரப்படவுள்ள தீர்மானத்தினை வலுவடையச் செய்யும் முகமாகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜெனீவா சென்று ள் ளனர் என தமிழரசுக்கட்சியின் துணைப் பொதுச்செயலாளர் சி.வி.கே. சிவஞானம் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன், செயலாளர் மாவை சேனாதிராஜா ஆகியோர் ஜெனீவா பயணமாகவில்லை எனவும் லண்டனுக்கே சென்றுள்ளனர். எனவும் கூறப்படுகின்றது.

அவர்கள் ஜெனீவா சென்று இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை வலியுறுத்தல் ஏன்? லண்டன் சென்றன.ர் அதற்கான காரணம் யாது? என ஊடகவியலாளர்களினால் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் பதிலளிக்கையில், சம்பந்தன், மாவை சேனாதிராஜா ஆகியோர் லண்டன் சென்றுள்ளது உண்மைதான். அவர்கள் இலங்கைக்கு எதிரான ஜெனீவாத் தீர்மானத்தினை வலியுறுத்தவே அங்கு சென்றுள்ளனர்.

அரசியல் கட்சியொன்று கூட்டத் தொடரில் பங்குபற்ற முடியாது. எனினும் கூட்டத் தொடருக்கு வெளியே தீர்மானத்திற்கு அழுத்தம் கொடுக்கின்ற லொபன் என்ற நிகழ்வு என்ற நிகழ்வு நடைபெறுவது வழமை. அதில் கலந்து கொண்டே இலங்கைக்கு எதிரான தீர்மானத்தினை வலியுறுத்துவது கூட்டமைப்பின் நோக்கமாகும்.

அதற்காகவே நாடாளுமன்ற உறுப்பினர்களாகிய சிவஞானம் சிறிதரன், சுரேஸ் பிரேமச்சந்திரன் ஆகியோர் சென்றுள்ளனர்.

இராஜதந்திர அழுத்தங்களை வழங்குவதற்காக சம்பந்தன், மாவை சேனாதிராஜா ஆகியோர் லண்டன் சென்றுள்ளனர் என்றார் அவர். (செ-1)

# ஆன்மீகத் தேடலை வழிப்படுத்தும் தவக்காலம்

## வறியவர்களுக்கு உதவ முன்வாருங்கள்



இன்றைய வேதாகமப் பகுதியில் வரும் இலாசரும் செல்வரும் எனும் அழகான உவமைக்கதை, பல செய்திகளைத் தன்னிலே கொண்டிருக்கிறது. இந்த கதையில் வரும் செல்வரை பற்றி சிந்திப்போம். அந்த செல்வர் செய்த ஒரே தவறு. தான் மட்டும் நாள்தோறும் விருந்துண்டு தன்னலத்தோடு இன்பங்களை அனுபவித்ததுதான். அதிலேயே வாழ்வைக் கழிப்பதும் தவறு.

கண்கெட்ட பின் சூரிய நமஸ்காரம் செய்வதை பைத்தியக்காரத்தனம் என்று சொல்கின்றோம். வாய்ப்புக்கள் வரும் போது வசப்படுத்தாதவன் முட்டாள். கிடைத்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தாமல் இன்னொரு வாய்ப்பு நமக்கு கிடைக்கும் என எதிர்பார்ப்பது அறிவீனம். அதைவிட கிடைத்த வாய்ப்பை தவறாகப் பயன்படுத்துவது மிகப் பெரிய தண்டனைக்கு நம்மை ஆளாக்கிவிடும். நம்மில் பலருடைய நிலை இதுதான். இந்த பணக்காரன் இப்படித்தான் கிடைத்த வாய்ப்பை பயன்படுத்தவில்லை. தவறாகவும் பயன்படுத்தினான். நிறைந்த செல்வம் இருந்தது. ஏழைகளுக்கு உதவும் வாய்ப்பு இருந்தது.

போதுமான கால அவகாசம் கொடுக்கப்பட்டது. ஏழைகளுக்கு உதவுங்கள் என்ற போதனை பல விதங்களில் போதிக்கப்பட்டது. கண்டு கொள்ளாமல் இருந்தான். தன்னுடைய சுகமான வாழ்வில் நாட்களை கழித்தான். அவன் செய்யாமல் விட்ட நல்ல செயலுக்காக அவனுக்கு தண்டனை கொடுக்கப்பட்டது.

நான் பசியாய் இருந்தேன்- நீங்கள் எனக்கு உணவு கொடுக்கவில்லை என்னும் சொற்களை நாம் தீர்ப்பு நாளில் கேட்காமலிருக்க வேண்டும் என்றால் இன்றே இத்தவக் காலத்திலிருந்தாவது நம்மைச் சூழ்ந்திருப்போரில் குறிப்பாக ஏழைகளுக்கு பசியை ஆற்றிட முன்வர வேண்டும்.

ம.பிரான்சிஸ்க்
கத்தோலிக்க
சுதந்திர பத்திரிகையாளர்


எங்கள் வருமானத்தில் ஒரு சதவீதமாவது ஏழைகளல்லது வறிய மாணவ, மாணவியரின் கல்விக்காக கொடுப்போம். மொத்தமாக சேர்த்து ஒரு நாள் ஒரு மாணவனுக்காவது கொடுப்போம். எங்கள் உள்ளத்தில் ஒரு இனம் புரியாத தெய்வீக மகிழ்ச்சி உருவாகும். மறைவாய் செய்த நற்செயலைக் காணும் இறைவன் உங்களுக்கு அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து உங்கள் மடியில் போடுவார்கள் என்று வேதாகமத்தில் இறைவன் கூறுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

383



## அம்புலிமாமா கதைகள்

# சொன்ன வாக்கு பலிக்கும்


ஒரு ஊரில் ஹரி, கிரி என்ற இரண்டு இளைஞர்கள் இருந்தனர். அவர்கள் வீடுகள் அருகருகே அமைந்திருந்தன. இருவரும் வேலை ஏதும் இல்லாத இளைஞர்களாக இருந்தனர். இருவரது குணங்களும் முற்றிலும் வேறுபட்டிருந்தன. ஹரி வீட்டு வேலைகள் அனைத்தும் செய்து பெற்றோருக்கு உதவியாக இருந்தான். கிராமத்திலுள்ள மற்றவர்களுக்கும் தன்னாலான உதவிகளை செய்து வந்தான்.

கிரி இதற்கு நேர் மாறாக இருந்தான். யாருக்கும் எந்த உதவியும் செய்யமாட்டான். பெரியவர்களுக்கு மரியாதை தருவதில்லை. யாருடனாவது ஏதாவது சண்டையும் சச்சரவும் செய்துகொண்டேயிருப்பான். பிள்ளை என்றால் கிரியைப்போல் மட்டும் இருக்கவே கூடாது என்று எல்லோரும் சொல்லுமளவுக்கு இருந்தான்.

தன்னைப்பற்றி ஊரார் கேவலமாக நினைப்பது ஹரியினால்தான் என்று எண்ணி எப்போதும் ஹரியைப் பற்றி அவதூறாக ஏதாவது சொல்லிக்கொண்டேயிருப்பான். ஆனால் இதெல்லாம் தெரிந்தும் ஹரி கிரியை வெறுக்காமல் கிரியைப் பற்றிக் குறைகூறுபவர்களிடம் எல்லோரும் ஒரே மாதிரி இருப்பதில்லை. என்னுடன் கிரியை ஒப்பிட்டுப் பேசுவதால்தான் இந்த தப்பான அபிப்பிராயம் உண்டாகிறது. கிரியும் நான்தான் இதற்கெல்லாம் காரணம் என்று என்னை வெறுக்கிறான் என்று சொல்வதுண்டு.

ஒருநாள் கிரியின் மாமா சங்கரன் கிரியின் வீட்டுக்கு வந்தார். அவர் கிரியிடம் எங்கள் ஊர் ஜமீன்தாருக்கு இரண்டு இளைஞர்கள் தேவை. ஒருவன் வீட்டு வேலைகள் செய்வதற்கும் ஏனையவன் தகவல்கள் தெரிவிப்பதற்கும் தேவை. நீங்கள் இருவரும் சேர்ந்து அவரிடம் சென்றால் உங்களுக்கு வேலை கிடைக்கும் என்றார். ஏன் நான் தனியாகச் சென்றால் எனக்கு வேலை தரமாட்டாரா என்று கிரி கேட்டான்.

இல்லை ஜமீன்தாருடைய விருப்பம் இருவர் வேண்டுமென்பது. ஹரி மிகவும் நல்லபிள்ளை. அவன் உடன் சேர்ந்து சென்றால் உனக்கும் நல்து என்றார் மாமா. எனக்கு வேலை கிடைக்காவிட்டாலும் பரவாயில்லை. ஹரிக்குக் கண்டிப்பாக வேலை கிடைக்கக் கூடாது என்று ஆவேசத்துடன் கிரி கத்தினான். உனக்கு ஹரியின் மீது ஏன் இவ்வளவு பொறாமை? என்று மாமா கேட்டார். அவனால்தான்



எனக்குக் கெட்ட பெயர் ஏற்பட்டது. ஆகவே அவனுக்கு இந்த வேலை கிடைக்கக்கூடாது என்று பிடிவாதம் செய் தான் கிரி.

கிரியின் தீய எண்ணத்தையும் பொறாமையையும் கண்டு கொண்ட கிரியின் மாமா அதற்குமேல் கிரியிடம் ஒன்றும் பேசாமல் ஹரியிடம் சென்று மேற்படி விடயங்களைக் கூறிவிட்டு கிரியை வற்புறுத்தும்படியும் கேட்டுக் கொண்டு சென்று விட்டார்.

ஹரி கிரியிடம் வந்து ஜமீன்தாரிடம் வேலை தேடிச்சொல்வோம் என அழைத்தான். அதற்கு கிரி அந்த ஜமீன்தார் நல்லவர் இல்லை. எனக்கு வீட்டு வேலையும் உனக்கு தகவல தரும் வேலையும் தருவார். சில நாட்களுக்குப் பின்பு நம் இருவரையும் வேலையைவிட்டு நீக்கிவிடுவார். ஆகவே நான் அங்கு வரத்தயாராக இல்லை என்றான்.

இது உன்னுடைய ஊகம் அப்படியெல்லாம் நடக்காது வா செல்வோம் என்றான் ஹரி.

ஹரி உனக்கு என்னைப் பற்றித் தெரியாது. எனக்குத் தெய்வவாக்கு உண்டு. நான் சொல்வதெல்லாம் அப்படியே நடக்கும். என் வீட்டுக் காரர்களுக்கு என்னைப்பற்றித் தெரியும். நீ வந்து கேட்டுப்பார். ஒரு வாரம் முன்னால் எனக்குத் திரட்டுப்பால் சாப்பிட ஆசை உண்டாயிற்று. இன்று பால் திரிந்துபோகும் என்றேன். அப்படியே நடந்து கடைசியில் திரிந்த பாலில் திரட்டுப்பால் செய்தார்கள். மூன்று நாளைக்கு முன் என் தாய் என்னைச் செடிகளுக்குத் தண்ணீர் விடச்சொன்னாள். தேவையில்லை இன்று மழை பெய்யும் என்றேன். அப்படியே அன்று மழை பெய்தது. இப்போது நான் இன்று சொல்கிறேன். அந்த ஜமீன்தார் கெட்டவர் என்று. என் வாக்கு பலிக்கும் என்றான்.

உன் தெய்வ வாக்கு பலிக்குமா என்று தெரியாது. ஆனால் வேலை வாய்ப்பு என் கையைவிட்டு நழுவிச் செல்கிறதே என்று வருத்தமாக உள்ளது என்றான் ஹரி.

எனக்கும்தான் வேலைவாய்ப்பு தவறுகிறது. என்னால்தான் இந்த வேலை உனக்குக் கிடைக்காமல் போகிறது என்று நினைத்தால் அது தவறு. இதைவிட ஒரு நல்லவேலை உனக்குச் சீக்கிரம் கிடைக்கும். அப்போது இந்த வேலை கிடைக்காமல் போனது நல்லது என்று நீயே சொல்வாய் என்றான்.

உண்மையிலேயே ஹரிக்கு நான்கு நாட்களில் ஒரு வேலைவாய்ப்பு தேடி வந்தது. ஹரியின் உறவினராக கேசவன் அவனைத் தனது ஊருக்கு வரும்படி அழைத்தார். அவர் பல ஆண்டுகளாகக் கடல் வாணிபம்



செய்து ஏராளமான செல்வம் சேர்த்திருந்தார். ஆனால் அவருக்கு பிள்ளைப் பாக்கியம் இல்லை. வயதான காரணத்தினால் வியாபாரத்தை நிறுத்திவிட்டு வீட்டில் ஓய்வு எடுத்துக் கொண்டிருந்தார். தன்னுடைய சொத்துக்களை பாதுகாக்கவும் மக்கள் தொண்டு புரிவதற்கும் தகுதியான இளைஞனைத் தேடிக்கொண்டிருந்தபோது அவருக்குத் திடீரென ஹரியின் ஞாபகம் வந்தது. ஹரி தான் இதற்குத் தகுதியானவன் என்று முடிவுக்கு வந்தது மட்டுமன்றி தனது சொத்தில் கால் பங்கை ஹரிக்கே எழுதிவைத்து விட்டு ஏனையதை நல்ல காரியங்கள் செய்வதற்காக ஹரியின் மூலம் செலவிடவும் தீர்மானித்தார்.

அவரது அழைப்பை ஏற்றுக் கொண்டு உற்சாகத்துடன் ஹரி சென்றான். சில நாட்கள் கழித்து ஹரி கிராமத்திற்கு ஒருமுறை திரும்பிவந்தான். தனக்கு உதவி புரிந்தவர்களுக்கெல்லாம் வெகுமதிகள் கொடுத்து மகிழ்ந்தான். ஆனால் கிரியைச் சந்திக்கவும் இல்லை. பரிசுப்பொருளும் கொடுக்கவில்லை.

கடைசியில் கிரியே அவன் வீட்டுக்குச் சென்று அவனைச் சந்தித்தான். என்னுடைய தெய்வ வாக்கினால்தான் உனக்கு இந்த நல்லவேலை கிடைத்தது. ஆனால் மற்றவர்களையெல்லாம் சந்தித்து மகிழ்ந்த நீ என்னை மட்டும் பார்க்க வரவேயில்லை. எனக்காக பரிசு எதுவும் தரவில்லை என்றான்.

அதற்கு ஹரி எனக்கு ஜமீன்தாரிடம் வேலை கிடைக்கக்கூடாது என்ற ஒரே காரணத்தினால்தான் நீ அந்த வேலையைக் கைவிட்டாய். தெய்வவாக்கு அது இது என்று சொல்கிறாய். உனது வாக்குப் பலித்ததாக நீ எண்ணிக் கர்வம் கொள்ள வேண்டாம். நீ கூறியவை நடந்தது எல்லாம் தற்செயலாக நிகழ்ந்தவை. நீ கூறிய வார்த்தைகள் உன் சுயநலத்தினாலும் தீய குணத்தினாலும் கூறப்பட்டவை. பால் திரிந்து போகும், மழை வரும் என்றதெல்லாம் தற்செயலாக நிகழ்ந்தவை. அவை தெய்வவாக்கு ஆகாது. ஆகவேதான் உன்னைப் பார்க்கவே நான் விரும்பவில்லை. உனக்குப் பரிசு கொடுத்தால் உன்னுடைய தீய எண்ணங்களுக்குப் பரிசு கொடுத்ததாகப் பொருள் படும் என்பதால் உனக்கு எதுவும் பரிசு கொண்டு வரவில்லை. இனிமேல் ஆவது உன்னை நீ திருத்திக்கொள் என்றான்.


இதற்குப் பதில் ஏதும் சொல்ல முடியாமல் குனிந்த தலையுடன் கிரி அங்கிருந்து சென்று விட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாம் உலகப்போர்

59

## மானுடத்திற்கான திடக்கண்ணீர்!



காசுவெறி புடிச்சு அலையறான் முத்துமணி.

அனுபவிக்கிறது மட்டும்தான் காசு. அதுக்கு மேல பதுக்கி வைக்கிறதெல்லாம் வெறும் நம்பர்னு தெரியாமப் போகுது நாட்டுல பல பேருக்கு. அந்த நம்பர் கையில குடுமியக் குடுத்துட்டா லேசுல விடாது அது.

முத்துமணி குடுமி சிக்கிப் போச்சு காசோட கையில. மலையக் கொள்ளையடிச்ச பாவிப்பய, ஊருல குளத்துப் பொறம்போக்கையும் கொஞ்சம் கொஞ்சமா விக்க ஆரம்பிச்சுட்டான்.

ஒரு பெருச்சாளி போதும் வீட்(டை)டக் கெடுக்க;

ஒரு வஞ்சகன் போதும் ஊ(ரை)ரக் கெடுக்க.

☆☆☆☆☆☆

அடேயப்பா... ஒருகாலத்துல எப்படியிருந்த குளம்? பாக்கப் பாக்க ஆசையா இருக்கும். குளம் நெறை பெருக்கா நிக்கிறப்பக் கரைமேல நின்னு பாத்தாக் காணக் காணக் கண்ணடங்காது. தண்ணிக்கு மேல தீபம் பொருத்திவச்ச மாதிரி தாமரைப் பூவும் அல்லிப் பூவும் சும்மா வரிசை கட்டி நிக்கும். தவளையும் மீனும் தாமரை எலை மேல சடுகுடு விளையாடிட்டுப் போகுங்க.

குளத்தங்கரையில உக்காரக் கெடச்சவன் கொடுத்துவச்சவன். கண்ணு முன்னால ஒரு உயிர்ச்சினிமா நடக்குமய்யா குளத்துக்குள்ள. அயிரை மீனு, ஆரா மீனு, உளுவ மீனு, கெண்டை மீனு, கெளுத்தி மீனு, கெளுறு, வெராலு, மணிக்குரவைன்னு ஒரு மீனுக் குடும்பமே சண்டை சத்தம் போட்டுக்கிட்டே சந்தோஷமா இருக்கும். 'கடக்'குன்னு தண்ணிக்குள்ள முங்கி கொஞ்சநேரம் காணாமப் போயி, வீட்டுக்குச் சாயங்காலம் வெறுங்கையோட திரும்பாத சில அதிகாரிகளப்போல எதையாச்சும் ஒண்ணைப் புடிச்சு எங்கேயாவது எந்திரிக்கும் நீர்க்கோழிக.

குளத்துக்கு மத்தியில காலங்காலமா நிக்குது ஒரு கருவேலங்காடு. ஊரு தேசம் சுத்திவந்தாலும் பறவைகளுக்கெல்லாம் படுக்கை அங்கதான். கொக்கு, நாரை, மயிலு, மைனா, காக்கா, குருவி, மரங்கொத்தி, பொராந்து- இப்படி சகல பறவைகளுக்கும் சமத்துவபுரம் அதுதான். விடிகாலையிலயும் சாயங்காலத்துலயும் எல்லாம் கூடிக் கத்திக் குடியக் கெடுங்குங்க. ஒவ்வொரு தொண்டைக்கும் வேற வேற சத்தம். ஆனா அத்தன சத்தத்துக்கும் ஒரே அர்த்தம் சந்தோஷம் மட்டும்தான்.

☆☆☆☆☆☆

நண்டு, நத்தை, தவளை, தண்ணிப் பாம்பு- இதுகளப் பாத்துப் பழகலேன்னா ஒருத்தன் ஊருல பெறந்து ஒரு புண்ணியமும் இல்ல. மண்ணைக் கரைச்சு மனசுக்குள்ள ஊத்தாதவனுக்கு அனுபவம் எப்படி வரும் அனுபவம்?

☆☆☆☆☆☆

ஒருநரி, நண்டு புடிக்கிறதப் பாக்கக் கொடுத்துவச்சன் பாக்கியசாலி. ஓடியாடி மேஞ்சிட்டு அந்த மசங்கப் பொந்துக்குள்ள போயிருங்க நண்டுங்க. அந்தநேரம் பாத்துத்தான் நாட்டாமைய ஆரம்பிக்கும் நரி. ஒவ்வொரு பொந்தா மோப்பம் புடிச்சு வர்ற நரி நண்டோடிய தடம் பாக்கும். மேய்ச்சல் எடுத்த நண்டு இதுக்குள்ளதான் அடைஞ்சிருக்குமின்னு அடையாளம் கண்டுபுடும். இப்பப் பின்பக்கம் திரும்பிப் பின்னங்கால்ல குத்தவச்சு ஒக்காந்துக்கிட்டு நரி வாலைச் செலுத்தும் நண்டுப்பொந்துக்குள்ள. தலையில்லாத நண்டுக்கு மூளை கம்மியா இல்லையா? என்னமோ ஒண்ணு பொந்துக்குள்ள



எறங்குதுன்னு நரிவாலைக் கவ்வும் நண்டுங்க. சிக்கிருச்சுக நண்டுகன்னு தெரிஞ்சதும் விசுக்குன்னு வாலை வெளிய உருவித் தரையில ஓங்கி அடிச்சு நண்டுகளத் தலைகீழாக் கவுத்துப்புடும் நரி. அதுக பெரண்டு படுக்கு முன்ன மளார்னு தவ்வி நண்டுக் காலுகள மிசுங்கவிடாம அமுக்கிக்கிட்டு அடிவயித்துச் சதைய அப்பிடியே பிச்சுத்தேங்காச் சில்லத் திங்கற மாதிரி தின்டுபுடும் தின்டு. தந்திரக்கார நரின்னு சும்மாவா சொலவம் சொன்னாங்க?

☆☆☆☆☆☆

குளமும் பூமாதேவி மாதிரிதான். ஒரு பாகுபாடும் பாக்கிறதில்ல.

மனுசனா? மாடா? வா... குளிச்சுக்க.

முள்ளுச் செடியா? அல்லிக் கொடியா? வா... வந்து முளைச்சுக்க.

மேல்சாதியா? கீழ்சாதியா? வா... வந்து குடிச்சுக்க.

வயித்த வலிக்காரனா? வாந்தியெடுத்த முண்டச்சியா? வா... வந்து செத்துக்க.

சக்கரை வியாதியா? சங்கு இலை இருக்கு; தின்னுக்க.

தடுமன் காயச்சலா? தாராக்கீரை இருக்கு; வதக்கிக்க.

இப்படி சகல சீவராசிகளுக்கும் சர்வரோக நிவாரணியாயிருந்தது பாண்டியராசக்கமாரு வெட்டி வச்ச அந்தக் குளம்தான்.

குளம் நெறஞ்சாக் காடுகரை விளையறதுமட்டுமில்ல- நிலத்தடிநீர் கசிஞ்சு கசிஞ்சு சுத்துபத்துல இருக்கிற மலட்டுக் கெணறுகளுக்கும் மார்புல ஊத்தெடுக்க ஆரம்பிச்சிரும்.

குளம்ங்கறது ஒரு ஊருக்குத் தள தளன்னு தளும்பி நிக்கிற சந்தோசம்.

☆☆☆☆☆☆

ஊருக்குள்ள என்னைக்கு ஒரு அரசியல் கொலை நடந்துச்சோ அன்னைக்குக் கெட்டுச்சு குளம்.

பொக்கப்பாண்டிக்கும் தும்மலப் பட்டிக்கரையான் தலையனுக்கும் ஆண்டாண்டு காலமா அரசியல் பகை. அந்தத் தேர்தல்ல பொக்கப்பாண்டிக்கு ஓட்டுப்போட விடாமத் தன் சாதி சனத்தையே தடுத்துப்புட்டான் கரையான் தலையன்.

'ஏலேய்... அவனுக்கு லேசா ஒரு முரட்டு வைத்தியம் பண்ணிட்டு வாங்கடா'ன்னு பொக்கப்பாண்டி சொன்னதும் கிளம்பிருச்சு ஒரு தண்ணிப் பார்ட்டி.

வயக்காட்டுக்கு வாய்மடை தெறந்து விட்டுட்டு நடுச்சாமம் திரும்பிக்கிட்டிருந்த கரையான் தலையனக் குளத்தங்கரையில வழி மறிக்குதுக கோஷ்டிக.

வாய்த்தகராறு முத்திக் கம்புல ரெண்டு சாத்துச் சாத்தவும் கை தவறிப் பொடணியில விழுந்து போச்சு ஒருஅடி; பொட்டுன்னு உசுரும் போச்சு. அடிச்சவங்களுக்கு போதையும் எறங்கிப்போச்சு.

பொணத்த என்ன பண்றது? புடிபடல ஒருத்தருக்கும்.

குளத்தோரமா ஒரு காளவாசல் புகைஞ்சிக்கிட்டிருக்கு; செஞ்கல்லு வெந்துக்கிட்டிருக்கு. பொணத்தத் தூக்கிக் காளவாசல்ல எறிஞ்சாங்க; முள்ளப்போட்டு மூடிட்டாங்க. பொண வாடை வராம இருக்க ஒரு சாக்கு மொளகாயக் கொட்டுனாங்க.

"யப்பே... யாத்தே"ன்னு கத்திப் பாத்தான் காளவாசல் குருசாமி.

"ஒன்னையும் சேத்து எரிச்சிருவம்டா"ன்னு மிரட்டிப் பொணத்த மட்டும் எரிச்சிட்டுப் போய்ட்டாய்ங்க.

மறுநாள் முத்துமணிகிட்ட மட்டும் தண்ணியப் போட்டு உளறிட்டான் குருசாமி.

ஒருபுடி கிடைச்சுப் போச்சு முத்துமணிக்கு.

தன் வேலை வாங்க சினேகிதன் மூலமாப் பொக்கப்பாண்டிகிட்டக் கொடுத்த லஞ்சக்காசை வசூல் பண்ண இதாண்டா நேரமுன்னு முடிவுபண்ணிட்டான் முத்துமணி. பொக்கைப்பாண்டியப் போய்ப் பாத்துட்டான்.

"யண்ணே... ஆட்சி மாறுச்சுன்னா ஆபத்துண்ணே. குடிகாரப்பய குருசாமி ஒருநாள் இல்லாட்டி ஒருநாள் உளறிருவாண்ணே. பச்சைநோட்டை வச்சு அவன் வாயை அடைக்கணுமுண்ணே..."

கொஞ்சநேரம் மேலயும் கீழயும் பாத்துத் தலைய அங்கிட்டும் இங்கிட்டும் ஆட்டுனாரு பொக்கப்பாண்டி. தலையாட்டம் நின்னுச்சுன்னா முடிவுக்கு வந்துட்டாருன்னு அர்த்தம்.

"பணமாக் கொடுக்க வேணாம்; நெலமாக் கொடுத்திருவோம்".

"நெலமா? என்னண்ணே சொல்றீங்க?"

"குளத்துப் பொறம்போக்குல ரெண்டு ஏக்கரை அளந்துவிட்டுக் குருசாமிய உழுதுக்கிறச் சொல்லு. தாசில்தார், தோலான் துருத்தியெல்லாம் நான் பாத்துக்கிறேன்"

முத்துமணி மூஞ்சி வெளுத்து வெள்ளையாப் போச்சு.

"சீ கெட்டசாதிப் பயலா இருக்கானே... இவன நான் ஏய்க்கலாமுன்னு வந்தா இவன் என்னிய ஏய்ச்சு அரசாங்கத்தையுமில்ல ஏய்க்கப் பாக்கிறான். இருங்கடி... நான் ஒன்னிய ஏய்ச்சு, குருசாமிய ஏய்ச்சு, அரசாங்கத்தையும் ஏய்க்கிறனா இல்லையா பாரு"

நேரா குருவாமிகிட்டப் போனான்.

அவன் செங்கக்கல்ல வித்து வச்சிருந்த காசைக் கையில வாங்கிக்கிட்டுக் குளத்துப்பொறம்போக்கைக் கையக் காட்டி விட்டுட்டுச் சொல்றான்:

"ஆண்டாண்டு காலத்துக்கு ஆண்டு அனுபவிச்சுக்க. காலாகாலத்துல பட்டா வாங்கறதுக்குப் பொக்கப்பாண்டியும் நானும் பொறுப்பு"

எப்படியோ தன் வேலைக்காக அடுத்தவன் கொடுத்த லஞ்சத்தையும் தன் பேருக்கே மாத்தி வரவு வச்சிட்டான் முத்துமணி.

## ஒரு பெருச்சாளி போதும் வீட்டைக் கெடுக்க;
## ஒரு வஞ்சகன் போதும் ஊரைக் கெடுக்க

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை கனடா வலியுறுத்த வேண்டும்

## புதிய ஜனநாயகக் கட்சி வலியுறுத்தல்

(கொழும்பு)

**இலங்கையின் பொறுப்பேற்பு தொடர்பான காத்திரமான தீர்மானமொன்றை ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைகள் சபையில் நிறைவேற்றுவதை உறுதி செய்வதில் கனடா தலைமைப் பொறுப்பை ஏற்க வேண்டும் என புதிய ஜனநாயகக் கட்சியின் வெளியுறவு பிரதியமைச்சர் போல் டூவர் கேட்டுள்ளார்.**

இலங்கையில் தமிழருக்கெதிராக பரவலாக நிகழ்ந்த வன்கொடுமைகளையும் மனிதவுரிமை மீறல்களையும் தடுத்து நிறுத்த ஒட்டுமொத்த சர்வதேச சமூகமும் தவறியுள்ளது என அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைகள் சபையின் புதிய அமர்வு நீதியை மீள நிலை நாட்டுவதற்கான செயற்பாட்டை தொடங்க ஒரு முக்கிய வாய்ப்பை வழங்குகிறது.

ஐக்கிய நாடுகள் நிபுணர்கள் குழுவின் பரிந்துரைகளை செயற்படுத்தும் வகையிலான ஒரு தீர்மானத்தை நிறைவேற்ற கனடா வலியுறுத்த வேண்டும்.

பல்வேறு வகையான சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களும் மனிதவுரிமைகள் சட்டங்களும் இலங்கை அரசு மற்றும் விடுதலைப் புலிகள் ஆகிய இரு தரப்பினராலும் மீறப்பட்டன எனவும் அவற்றுள் சில போர்க்குற்றங்களும் மானிடத்திற்கெதிரான குற்றங்களுமாகும் எனவும் ஆதாரங்களுடனான குற்றச்சாட்டுகள் உண்மையென நிரூபிக்கப்படும் சந்தர்ப்பத்தில் காணமுடியும் என ஐக்கிய நாடுகள் நிபுணர்கள் குழுவின் அறிக்கை தெரிவித்துள்ளது.

அவற்றுக்கு பொறுப்பானவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என அந்த அறிக்கை கேட்டுக் கொண்டதோடு ஐக்கிய நாடுகள் உடனடியாக பக்கச்சார்பற்ற ஒரு விசாரணையை ஆரம்பிக்க வேண்டும் எனவும் வலியுறுத்தியது.

இலங்கையின் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க அரசியல் நோக்கோடு பதவி விலக்கப்பட்ட செயல் இலங்கை அரசு மீண்டும் மீண்டும் வழங்கும் உறுதி மொழிகளையும் மீறி நீதித்துறையின் நடுநிலைமையையும் மனிதவுரிமைகளுக்கான மதிப்பையும் பின்நோக்கித் தள்ளியுள்ளது.

இலங்கை அரசை பொறுப்பேற்க வைக்கத் தவறினால் உள்நாட்டுக் கிளர்ச்சிகளுக்கு முகங் கொடுத்துள்ள ஏனைய நாடுகளுக்கு அது ஒரு மோசமான செய்தியை தெரிவிக்கும்.

இதுபோன்ற வன்கொடுமைகள் எந்த பின்விளைவுமின்றி வேறு எங்காவது நிகழ்த்தப்பட்டாலும் சர்வதேச சமூகம் வெறுமனே பார்த்துக் கொண்டிருக்கும் என்பதே அந்தச் செய்தி.

மனிதவுரிமைகள் மற்றும் நல்லாட்சி பண்புகளை மதிப்பதற்கும் பேணுவதற்குமான தனது உறுதிப்பாட்டை இலங்கை அரசு வெளிப்படுத்த வேண்டும் எனக்கோரும் மனச்சாட்சியுள்ள உலக மக்கள் அனைவருடனும் புதிய ஜனநாயகக் கட்சி உணர்வுத் தோழமையுடன் உடன் நிற்கிறது.

உலக அரங்கில் கனடா பொறுப்புடன் செயற்பட்டு இந்த விடயத்தில் மனிதவுரிமைகள் சபையின் அர்த்தமுள்ளதும் காத்திரமானதுமான ஒரு தீர்மானத்தை நிறைவேற்ற ஏனைய நாடுகளுடன் இணைந்து செயலாற்ற வேண்டும். (அ-2)

## ஹலால் விவகாரம் சூடுபிடிக்கிறது

ஹலால் சான்றிதழ் விநியோகத்தை அரசாங்கம் தமது ஒத்துழைப்புடன் பொறுப்பேற்க வேண்டும் என்று அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா விடுத்த கோரிக்கையை பொதுபலசேனா நிராகரித்துள்ளது.

இந்த விடயம் குறித்த அகில இலங்கை ஜம்மியத்துல் உலமாவின் அறிவிப்பை ஏற்க முடியாது என்று தெரிவித்துள்ள பொதுபல சேனா அமைப்பு பௌத்தர்களுக்கு ஹலால் சான்றிதழ் பொருட்கள் விற்பனை செய்யப்படுவதை எதிர்ப்பதாக குறிப்பிட்டுள்ளது.

இந்த நிலையில் தொடர்ந்தும் போராட்டங்களை நடத்த போவதாக பொதுபல சேனா எச்சரித்துள்ளது. (அ-2)

## இந்திய மீனவர்கள் தாக்கப்படவில்லை

### இலங்கை கடற்படை

இந்திய மீனவர்களை தாக்கியதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுகளில் உண்மையில்லை என இலங்கை கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

கச்சதீவில் வைத்து இந்திய மீனவர்கள் மீது, இலங்கைக் கடற்படையினர் தாக்கியதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

20 இந்திய மீன்பிடிப் படகுகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

எவ்வாறெனினும் இலங்கைக் கடற்படையினர் எந்தத் தாக்குதல் எதனையும் நடத்தவில்லை என கடற்படைப் பேச்சாளர் அறிவித்துள்ளார். (அ-2)

## ஜெனீவா தீர்மானங்களை ஏற்றுக்கொள்ள போவதில்லை

### அமைச்சர் ரம்புக்வெல தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு எதிராக ஐ.நா. மனிதவுரிமைப் பேரவையில் தன்னிச்சையாக முன் வைக்கப்படும் தீர்மானங்களை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளவோ அனுமதிக்கவோ முடியாது. இலங்கை அடிமை நாடல்ல என்பதனை பிரித்தானியா உள்ளிட்ட மேற்குலக நாடுகள் புரிந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளரும் ஊடக அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் ,

ஜெனீவாவில் தற்போது நடைபெறுகின்ற ஐ.நா. மனிதவுரிமைகள் பேரவையின் 22 ஆவது கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிராக அடிப்படையற்ற குற்றச்சாட்டுக்களையும் தீர்மானங்களையும் அமெரிக்கா உட்பட மேற்குலக நாடுகள் முன்வைத்தன.

அதேபோன்று மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளை எவ்விதமான அடிப்படைத்தன்மையும் அற்ற வகையில் இலங்கைக்கு எதிராக மனித உரிமைகள் குற்றச்சாட்டுக்களை சுமத்தியுள்ளார்.

இது இலங்கைக்கு எதிரான திட்டமிட்ட செயற்பாடாகும். இலங்கையின் நிலைப்பாடு குறித்து இன்று எமது விசேட பிரநிதியான அமைச்சர் மஹிந்த சமரசிங்க ஜெனீவாவில் விளக்கமளிப்பார்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கு அமைவாக இலங்கையின் உள்நாட்டு நடவடிக்கைகள் அனைத்தும் இடம்பெறுகின்றன.

எவ்விதத்திலும் இலங்கை பொறுப்புடைமையை தவறவிடவில்லை என்பதை சர்வதேசம் புரிந்து கொள்ள வேண்டும்.

ஆகவே ஜெனீவாவில் முன் வைக்கப்படுகின்ற இலங்கைக்கு எதிரான தீர்மானங்களை அரசு ஏற்றுக்கொள்ளாது என்றார். (அ-2)

## பிரதிப் பொலிஸ்மா அதிபர் இடமாற்றத்தில் அரசியலில்லை

### இப்படிக் கூறுகிறார் கோத்தா

(கொழும்பு)

பாசிக்குடா சம்பவம் தொடர்பில் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன அழுத்தங்களை பிரயோகிக்கவில்லை என பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பொலிஸ் உத்தியோகத்தர்கள் மீது அழுத்தங்களை பிரயோகிப்பதாக சிலர் போலிப் பிரசாரங் களில் ஈடுபட்டு வருகின்றனர்.

அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவின் மகனுக்கும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரவி வைத்தியலங்காரவின் மகனுக்கும் இடையில் மோதல் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

இந்த மோதல் சம்பவம் தொடர்பில் பொலிஸார் எடுத்த நடவடிக்கைகளில் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன எவ்வித தலையீடுகளையும் செய்யவில்லை. இந்த பிரச்சினையை சுமுகமாக தீர்த்துக் கொண்டிருக்க முடியும். இரு தரப்பினருக்கும் இடையில் ஏற்பட்ட வாக்குவாதமே கைகலப்பாக மாறியுள்ளது.

அண்மையில் மொனராகல பிராந்தியத்திற்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் இடமாற்றம் செய்யப்பட்டமை அரசியல் காரணங்களின் அடிப்படையில் அல்ல.

சிறந்த சேவையை பெற்றுக் கொள்ளும் நோக்கில் இவ்வாறு இட மாற்றம் செய்யப்பட்டார் என பாதுகாப்புச் செயலாளர் தெரிவித்துள்ளார். (அ-2)

## விளையாட்டுக்கு முன்னர் மருத்துவ பரிசோதனை

(கொழும்பு)


விளையாட்டு செயற்பாடுகளுக்கு மாணவர்கள் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னதாக அவர்களை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தும் திட்டத்தை கொண்டு வருமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அறிவுறுத்தியுள்ளார்.

கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தனவுக்கே ஜனாதிபதி இவ்வாறு அறிவுறுத்தியுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அரனாயக்கவில் பாடசாலை விளையாட்டுப் போட்டியின் போது 5ஆயிரம் மீற்றர் ஓட்டப் போட்டியில் கலந்து கொண்ட 18 வயதான மாணவி ஒருவர் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

இதனைத் தொடர்ந்தே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (அ-2)






மாதகல் நுணசை வித்தியாசாலையில் கல்வி பயிலும் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டபோது....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மாவும் அக்காவும் எங்கே?
# பாலச்சந்திரனின் இறுதி நிமிடங்கள்

இறுதிக் கட்டப் போரில் கொல்லப்பட்ட ஆயிரக்கணக்கான ஈழத் தமிழர்களின் மரணத்துக்கு இன்று உலக சாட்சியாக இருப்பது சனல் 4 வெளியிட்ட நோ பயர் சோன் வீடியோக்களும் புகைப்படங்களும்தான்.

பிரபாகரனின் மகன் பாலச்சந்திரனின் புகைப்படங்கள், ரமேஷின் வீடியோ ஆரம்பித்து ஆயிரமாயிரம் ஈழத் தமிழர்களின் குருதியற்ற உடல்கள் வரை விரியும் அந்த வீடியோ கட்சிகள் நெஞ்சைப் பதைபதைக்க வைக்கும் மரண சாசனம்.

**நோ பயர் சோன் வீடியோக்களின் தயாரிப்பாளர் கேலம் மெக்ரேவைத் தொடர்பு கொண்டோம். அவர் சொன்ன தகவல்கள் அத்தனையும் இலங்கை அரசுக்கு எதிரான குற்றப் பத்திரிகை.**

**கேள்வி: பிரபாகரனின் மகன் பாலச்சந்திரன் படங்கள் யாரால் எடுக்கப்பட்டது?**

பதில்: பாலச்சந்திரன் இருக்கும் புகைப்படங்கள் வீடியோ பதிவில் இருந்து எடுக்கப்பட்டவை. 2009 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆம் திகதி காலை அந்த வீடியோ எடுக்கப்பட்டது.

இலங்கை இராணுவத்தில் இருக்கும் படைப் பிரிவுகளிலேயே 53 ஆம் படைப் பிரிவு தான் மிகவும் கொடூர மானது. அவர்கள்தான் பிரபா கரன் உள்ளிட்ட முக்கிய தலை வர்களை எதிர்கொண்டவர்கள். இனி உங்களிடம் பகிர்ந்து கொள் ளும் எந்த தகவல்களும் நான் நேரடியாகப் பார்த்தவை கிடை யாது. அந்த வீடியோக்களை எடுத்த இரண்டு சிங்களப் படை வீரர்கள் என்னிடம் சொன்னவை. வீடியோவாகவும் பதியப்பட் டவை. அவர்கள் இருவரும் 53 ஆம் படைப் பிரிவைச் சேர்ந்தவர்கள்.

இறுதிக்கட்டம் வரை இலங்கையில் போர் நடக்கும் இடங்களில் பணியாற்றியவர்கள். போர் முடிந்தவுடன் அங்கிருந்து தப்பி வந்து விட்டனர். எல்லா வீடியோக்களும் அவர்களின் மொபைல் போன்களில் எடுக்கப்பட்டவை. போர் நடக்கும் இடங்களில் வீடியோவோ, புகைப்படங்களோ எடுக்க அனுமதி கிடையாது. மொபைலில் எடுத்ததும் இரகசியமாக எடுத்தவைதான்.

இறுதிக்கட்டப் போர் நடந்து முள்ளிவாய்க்கால் பகுதி ஒரு கிலோ மீற்றர் சதுரப்பரப்பளவில் இருக்கும் சிறிய பகுதி. அந்தப் பகுதியில்தான் மக்களை கொன்று குவித்துப்போரை முடிவுக்குக் கொண்டு வந்தனர்.

2009 மே மாதம் 18 ஆம் திகதி இரவு போர் தீவிரமடைந்து அங்கிருக்கும் மரங்களையும் வாகனங்களையும் இராணுவம் கொளுத்தியது. அப்போது பாலச்சந்திரன் தன் மெய்க்காப்பாளர்கள் நால்வருடன் இரவு முழுவதும் பதுங்கு குழியில் இருந்திருக்கிறார்.

காலையில் வேறு வழியே இல்லாமல் மெய்க்காப்பாளர்களின் முடிவுப்படி 53 ஆம் படையில் சரணடைந்தனர். மே 19 ஆம் திகதி காலை 7.30 மணிக்கு அவர்கள் சரணடைந்ததும் பாலச்சந்திரனையும் அவரது மெய்க்காப்பாளர்களையும் தனித்தனியே பிரித்து விட்டனர்.

சரணடைந்தவர்களைப் பற்றி அங்கே பணியில் இருந்த மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன, கோத்தபாய ராஜபக்ஷவுக்கு தகவல் சொல்லி இருக்கிறார். கோத்த பாய இந்தத் தகவலை புலிகளில் இருந்து விலகி அரசுடன் இணைந் துள்ள ஒருவரிடம் சொல்லி இருக்கிறார். அவனை உயி ரோடு விட்டால் அது நமக்குத்தான் பிரச்சினை. அந்தப் பையன் ஒரு மைனர். சட்டத்தின்படி எந்தத் தண்டனையும் வழங்க முடியாது.

சட்டத்தின் பிடியில் இருந்து அவன் தப்பி விட்டால் விடுதலைப் புலிகளின் அடுத்த தலைவராகக் கூட அவன் வந்து விடலாம். எனவே, எல்லோரையும் போல அவனை--- கோத்தபாயவுக்கு ஆலோசனை சொல்லி இருக்கிறார். அதற்கான உத்தரவு 53 ஆம் படைக்குப் பிறப்பிக்கப்பட்டது.

காலை 9.30 மணிக்கு பாலச்சந்திரன் உடல் அருகில் துப்பாக்கியை வைத்து ஐந்து முறை சுட்டிருக்கிறார்கள். யாரைக் கொன்றாலும் தடயம் இல்லாமல் எரித்து விடுவது தான் அந்தப் படைப் பிரிவின் வழக்கம். பாலச்சந்திரனையும் அப்படித்தான் தூக்கிச் சென்று விட்டனர்.

பாலச்சந்திரன் சரணடைந்த போது காலை 7.30 மணிக்கு எடுக்கப்பட்ட வீடியோவும் 9.30 மணிக்கு அவர் கொல்லப்பட்ட பின்னர் எடுக்கப்பட்ட வீடியோவும் தான் இப்போது வெளியானது.

**கேள்வி: பாலச்சந்திரனிடம் விசாரணை எதுவும் நடத்தப்பட்டதாகத் தெரிகிறதா?**

பதில்: பாலச்சந்திரனிடம் அவரின் அம்மா பற்றியும் அக்காவைப் பற்றியும் கேட்டார்களாம். நானும் என் அம்மாவும் நேற்று ஒன்றாகத் தான் இருந்தோம். தப்பிக்க வேண்டும் என சொன்னவுடன் அவர்கள் ஒரு குழுவாகவும் நாங்கள் ஒரு குழுவாகவும் கிளம்பும்போது இடையில் அம்மாவைக் காணோம்.

அவர்கள் இப்போது எங்கே என்று எனக்கு தெரியாது என்று மட்டும் சொல்லி இருக்கிறார். வேறு எதுவும் அவரிடம் கேட்கவி ல்லை. சுடுவதற்காக துப்பாக்கியை பாலச்சந்திரனுக்கு அருகில் நீட்டிய போது கூட தன்னைச் சுடப் போகிறார்கள் என்பது அவருக்குப் புரியவில்லை.

**கேள்வி: வீடியோ பொய் என்று இலங்கை அரசு சொல்கிறதே?**

பதில்: அந்த மொபைலில் இருந்த வீடியோவை நானே பலமுறை பார்த்து அதன் உண்மைத் தன்மையைக் கண்டறிந்த பின்னர் தான் ஆவணப்படம் எடுத்தோம். வீடியோவை இங்கிலாந்தில் ஆய்வுக்கும் உட்படுத்தினோம். வீடியோவில் இருப்பது அத்தனையும் உண்மை... உண்மை.... உண்மை...

இப்போது கூட அங்கிருக்கும் தமிழர்கள் உணவு, உடை, தண்ணீர் இல்லாமல் தவிக்கின்றனர். அவர்களுக்கு எந்த உதவிகளையும் இலங்கை அரசு செய்வது இல்லை என்றார் அழுத்தம் திருத்தமாக.

நோ பயர் சோன் தொகுப்பில் இடம்பெற்ற வீடியோக்கள் பலவற்றைக் கொடுத்து உதவியவர் இலங்கையைச் சேர்ந்த கண்ணன். கடைசிக்கட்டப் போரில் பிரபாகரனுடன் தொடர்பில் இருந்தவர்களில் கண்ணனும் ஒருவர். அவரிடமும் பேசினோம்.

இந்த நூற்றாண்டின் மிகக் கொடிய இன அழிப்பின் சோகம் இது. மிகச் சிறிய பரப்பளவு கொண்ட பகுதி முள்ளிவாய்க்கால். அந்தப் பகுதிக்குள் இலட்சக்கணக்கான தமிழர்கள் அடைபட்டிருந்தார்கள். ஒரு நாளைக்கு ஒரு வேளை உணவு தான். பாதிப் பேர் உணவு இல் லாமல் கடல் நீரைக் குடித்தே செத்துப் போனார்கள்.

தமிழ் மக்கள் கூட்டம் இராணுவத்திடம் சரணடைய வந்தனர். நாங்கள் உங்களைச் சுடமாட்டோம். நீங்கள் அனைவரும் துணிகள் இல்லாமல் நிர்வாண நிலையில்தான் எங்களிடம் வரவேண்டும் என்று கட்டளை இட்டது இராணுவம் .வேறுவழி இல்லாமல் அப்பா முன் மகளும் மகனின் முன் தாயும் அண்ணனின் முன் தங்கையும் நிர்வாணமாக வந்து சரணடை ந்தனர். வவுனியாவில் இருக்கும் மெனிக் பாம் முகாமிலும் வெலி கந்தை யில் இருக்கும் மறைமுக முகாமிலும் தினமும் இரவு நேரங்களில் பெண்களின் கதறல் சத்தம் கேட்டபடியே இருக்கும். இதுவரை இலங்கையில் கொல்லப்பட்ட மக்கள் ஒரு இலட்சத்து 47 ஆயிரம் பேர் இருப்பார்கள்.

போரில் தடை செய்யப்பட்ட ஆயுதங்கள் பலவற்றையும் இலங்கை இராணுவம் பயன்படுத்தியது. கொத்தணி குண்டு 500 சிறிய குண்டுகளாகப் பிரிந்து சென்று தாக்கும். உலக நாடுகள் எதுவும் அந்த குண்டுகளைப் பயன்படுத்தாது. வெண்பொசுபரஸ் அதை விடக் கொடூரமானது. ஒரே சொட் டில் 100 இற்கும் மேற்பட்ட குண்டு களை உமிழும். அந்தக் குண்டுகள் சுற்றியிருக்கும் எல்லா ஒட்சி சனையும் உறிஞ்சிக் கொண்ட பின் னர்தான் வெடிக்கும். அதனால் குண்டு பாதிப்பையும் தாண்டி பலர் மூச்சுத் திணறியே இறந்தனர்.

சனல் 4 வெளியிட்டு இருக்கும் ஆதாரங்கள் அத்தனையும் உதாரணங்கள் மட்டும்தான். ஒட்டுமொத்தமும் வெளிவந்தால் இலங்கை தாங்காது.





ஜூனியர் விகடன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இல. அரசாங்கம் தனது சொந்த வெற்றிகளின் கைதியாக உள்ளது !


**சேர். ஐவர் ஜென்னிஸ்** ஒருமுறை இலங்கை மக்களைப் பற்றி பின்வரும் தொனிப்படக் கூறியிருந்தார். "இலங்கை மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்வானது. எழுத்தறிவு உயர்வானது. சமூகச் சூழல் இரம்மியமானது. ஆனால், எப்பொழுதும் இந்தியா பொறுத்து, ஒரு பனிப்பாறை உருகி தங்கள் மீது கவிழ்ந்து விடுமோ என்ற அச்சத்துடன் வாழ்கின்றார்கள்."

**அவர், இலங்கையர்கள் என்று குறிப்பாகக் கருதியது சிங்கள மக்களைத் தான்.** பனிப்பாறை பற்றிய அச்சத்தின் மீது கட்டியெழுப்பப்பட்டதே இலங்கைத் தீவின் நவீன வெளியுறவுக் கொள்கையாகும். அதாவது, வெளி அச்சுறுத்தல்களுக்கு எதிராகத் தன்னை வெற்றிகரமாக நிலைநிறுத்திக் கொள்ள முற்படும் அல்லது தகவமைத்துக் கொள்ள முற்படும் ஒரு சிறிய அழகிய கவர்ச்சி மிக்க தீவன் தற்காப்பு உத்திகளி திரட்சியும் தொடர்ச்சியுமே இலங்கைத் தீவின் நவீன வெளியுறவுக் கொள்கையாகும்.

ஜெனிவாவில் இக்கொள்கையானது, மறுபடியும் ஒருமுறை அடுத்த மாதம் சோதனைக்கு உள்ளாகப் போகிறது. இலங்கைத் தீவின் மூத்த சமூகச் செயற்பாட்டாளராகிய *சுனிலா அபயசேகர* அண்மையில் ஒரு பேட்டியில் கூறுயதுபோல, ஜெனிவாவைப் பற்றிய ஒரு பயப்பிராந்திக்குள் கொழும்பு சிக்குண்டிருக்கிறது. இப்பயப்பிராந்தியை உருவாக்குவதிலும் பெருப்பிப்பதிலும் ஊடகங்களுக்கு கணிசமான பங்குண்டு. வெளியிலிருந்து வரும் இவ்வச்சுறுத்தலை கொழும்பானது எவ்விதம் எதிர்கொள்ள வேண்டும் என்பது குறித்து மூத்த மற்றும் ஓய்வு பெற்ற இராஜதந்திரிகள், கொள்கை வகுப்பாளர்களும் அரசாங்கத்திற்குக் கருத்துக்களைக் கூறவும் ஆலோசனை கூறவும் முற்பட்டிருக்கும் ஒரு காலகட்டம் இது. ஆனால், இலங்கைத் தீவு பிரிட்டிஷாரின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டதன் பின் ஆட்சிக்கு வந்த எல்லா அரசாங்கங்களும் இவ் அச்சுறுத்தலை ஏதோ வொரு விதத்தில் வெற்றிகரமாக எதிர் கொண்டதே இலங்கைத் தீவின் நவீன வரலாறாக உள்ளது.

உதாரணமாக 1971 இல் ஜே.வி.பி.யின் முதலாவது கிளர்ச்சியின்போது, அப்போது ஆட்சியிலிருந்த சிறிமாவோ அரசாங்கம் சீனாவிடமிருந்தும் உதவியைப் பெற்றது. இந்தியாவிடமிருந்தும் உதவியைப்பெற்றது. அதைப்போலவே, 4ஆம் கட்ட ஈழப்போரின் போது இப்போதுள்ள அரசாங்கமானது சீனாவிடமிருந்தும் உதவியைப்பெற்றது. இந்தியாவிடமிருந்தும் உதவியைப்பெற்றது. மேற்கு நாடுகளிடமிருந்தும் உதவியைப் பெற்றது. அதாவது, உள்நாட்டில் அச்சுறுத்தல்கள் எழும்போதும் வெளியிலிருந்து அச்சுறுத்தல்கள் வரும்போதும் தங்களுக்கிடையில் பகை நிலையில் காணப்படும் வெளிச்சக்திகளை வெற்றிகரமாக கையாண்ட ஓர் அனுபவம் கொழும்பிற்கு உண்டு.

இதைப்போலவே, 1987 இல் இந்தியா **ஒப்பரேஷன் பூமாலை** என்ற பெயரில் உணவுப் பொதிகளை வானிலிருந்து போட்ட போது, ஏற்பட்ட அச்சுறுத்தலை ஓர் உடன்படிக்கையாக மாற்றிய வெற்றிகரமான அனுபவமும் கொழும்பிற்கு உண்டு. தமிழர்கள் இந்தியப்படை வரும். என்று காத்திருந்த ஓர் காலகட்டத்தில் வரவிருந்த படையை அமைதி காக்கும் படையாக மாற்றியதில் கொழும்பிற்கு கணிசமான பங்குண்டு. மேலும் மஸ்தியஸ்தராக வந்த இந்தியாவை விளையாட்டு வீரராக மாற்றியதும், தமிழர்களோடு மோத விட்டதும் கொழும்பிற்கு கிடைத்த மிகப்பெரிய வெற்றிகள்தான். எனவே, வெளி அச்சுறுத்தல்களையும் வெளியாரின் பின்பலத்தோடு உள்ளிருந்து எழும் அச்சுறுத்தல்களையும் வெற்றிகரமாக கையாண்ட ஒரு பாரம்பரியம் இலங்கைத்தீவின் வெளியுறவுக் கொள்கைக்கு உண்டு. இதன் பின்னணியில் வைத்தே இலங்கை அரசாங்கம் ஜெனிவாவை எப்படி எதிர்கொள்ளப்போகிறது என்பதையும் பார்க்க வேண்டும்.



கொழும்பிலுள்ள **கே.கொடகே** போன்ற ஓய்வு பெற்ற மற்றும் மூத்த கொள்கை வகுப்பாளர்களின் கருத்துப்படி கொழும்பானது தன்னுடைய சொந்த நலன்களை முன்னிறுத்தியே முடிவுகளை எடுக்கவேண்டும் என்ற அபிப்பிராயம் தூக்கலாகக் காணப்படுகிறது. பேரரசுகளுக்கிடையிலான மோதுகளத்தில் சிறிய இலங்கைத் தீவானது, தனக்கு இருக்கக்கூடிய **லக்ஸ்மன் ரேகையைத்** தாண்டிச் சென்று ஏதோவொரு பேரரசை ஆதரிப்பதன் மூலம் மற்றொரு பேரரசின் பொறிக்குள் வீழ்ந்துவிடக்கூடாது என்று அவர்கள் கவலைப் படுவது தெரிகிறது.

மூத்த ராஜதந்திரிகளான கொடகே போன்றோர் இந்திய அமெரிக்க உறவின் நெருக்கத்தைச் சுட்டிக் காட்டுகிறார்கள். முன்னை நாள் அமெரிக்க இராஜாங்கச் செயலரான **பேர்ண்ஸ்** கூறியதுபோல், இந்தியாவுக்கும், அமெரிக்காவுக்கும் இடையிலான உறவெனப் படுவது பூகோள பங்காளித்துவமாக வளர்ச்சி பெற்றருப்பதை அவர்கள் சுட்டிக்காட்டு கிறார்கள்.

**எனவே, அமெரிக்காவைக் கையாள்வது என்பது இப்பிராந்தியத்தைப் பொறுத்த வரை இந்தியாவை வெற்றிகரமாகக் கையாள்வதுதான். அதாவது, பனிப் பாறையைக் கையாள்வதுதான் என்பதை** அவர்கள் அரசாங்கத்திற்கு சூசகமாக உணர்த்த முற்படுகிறார்கள்.

அரசாங்கத்திற்கு இப்போதுள்ள அடிப்படைப் பிரச்சினை, நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றுவதா அல்லது தமிழர்களுக்கு ஒரு அரசியல் தீர்வைப் பெற்றுக்கொடுப்பதா என்பதல்ல. மாறாக, சீனாவை கைவிடுவதா? இல்லையா? என்பது தான். இதை இன்னும் யதார்த்தபூர்வமாக கூறின் சீனாவை எந்தளவிற்கு அரவணைப்பது அல்லது எந்தளவிற்கு கைவிடுவது என்பதே. சிங்கள வெகுசனங்களின் மத்தியில் சீனாவைக் குறித்து மதிப்பார்ந்த ஓர் மனப்பதிவே உண்டு. மங்கோலிய இன மக்களுக்கும் சிங்கள மக்களுக்கும் இடையில் எப்போதும் ஒரு கௌரவமான உறவு இருந்து வந்துள்ளது. இதற்கு பௌத்தமும் ஒரு காரணம். மேலும் சீனாவானது, சிங்கள மக்களைப் பொறுத்தவரை என்றைக்குமே ஒரு பனிப்பாறையாக இருந்ததில்லை. தமிழர்களுக்கும் இது பொருந்தும் என்ற கருத்து, இந்தியாவின் மீது சலிப்பும்,கோபமும் அடைந்திருக்கும் சில மூத்த தமிழ்ப்பிரஜைகள் மத்தியிலும் காணப்படுகிறது.

**சீனாவானது, இலங்கைத் தீவை வெளிப் படையான ஆக்கிரமிப்பு நோக்கத்தோடு அணுகத்தேவையில்லாத அளவிற்கு இப்பிராந்தியத்தில் இலங்கைத் தீவிலிருந்து கணிசமான அளவு தொலைவில் அமைந்திருக்கிறது. அதோடு, உலகளாவிய நிதி மூலதனத்தின் விரிவாக்கத்தைப் பொறுத்தவரை சீனாவானது சிறிய, வறிய மற்றும் நலிந்த ஆசிய, ஆபிரிக்க லத்தீன் அமெரிக்க நாடுகளின் மத்தியில் நிகரற்ற ஒரு கொடையாளியாக எழுச்சி பெற்று வருகின்றது.** கம்போடிய நாட்டின் உயர் மட்டத்தோடு நெருக்கமான உறவுடைய ஒருவர், தன் நண்பர் ஒருவருடன் உரையாடியபோது இதைச் சுட்டிக்காட்டியிருக்கிறார். உலகின் மிக நெகிழ்ச்சியான ஒரு கொடையாளி நாடாக சீனா உருவாகிவிட்டது.

மேற்கத்தேய நாடுகள் கொடை வழங்கும் போது, அதற்குரிய முன்னேற்பாடுகள், கண்காணிப்பு ஏற்பாடுகள் என்று பல படிமுறைகளைக் கடந்து போகவேண்டியிருக்கும். குறிப்பாக, உதவி பெறும் நாடானது, ஜனநாயகம், பன்மைத்துவம், நிதிநடவடிக்கைகளில் வெளிப்படைத்தன்மை போன்ற முன் நிபந்தனைகளுக்கு உடன்பட வேண்டியிருக்கும். ஆனால், சீனா என்ற கொடையாளியைப் பொறுத்தவரை இப்படிப்பட்ட வரையறைகள், படிமுறைகள் ஒப்பீட்டளவில் குறைவு என்று நம்பப்படுகிறது. **நேட்டோ விரிவாக்கமானது படைகளை நகர்த்துகிறது. சீனா விரிவாக்கமானது சந்தையின் எல்லைகளைத்தான் நகர்த்துகிறது.** எனவே, சீனாவிடம் கடன்பெறும் எந்தவொரு சிறிய நாடும், இலகுவாக அந்த ராஜதந்திர கடப்பாட்டுக்குள் இருந்து வெளியில் வர முடியாத ஒரு நிலையே காணப்படுகிறது. இத்தகையதொரு பின்னணிக்குள் வைத்தே கொழும்புக்கும் பீஜிங்கிற்கும் இடையிலான உறவை ஆராய வேண்டும்.

இப்பொழுதுள்ள பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் கடந்த எட்டு ஆண்டு கால ராஜீய நடவடிக்கைகளை தொகுத்தும் பகுத்தும் நோக்கின் அது அகவயமான முடிவுகளையும் புறவயமான முடிவுகளையும் கலந்து எடுக்கும் ஓர் அரசாங்கமாகவே காணப்படுகிறது. ஆசிய மையச் சிந்தனை அல்லது உள்நாட்டிலுள்ள தீவிர தேசியவாத சக்திகளுக்குத் தலைமை தாங்குவது என்பவை எல்லாம் இலங்கை சுதந்திரக்கட்சியின் ஆட்சிப் பாரம்பரியத்தின் ஏற்கனவே, இருந்து வந்த ஒரு போக்குத்தான். **இந்த அரசாங்கம் தனது சொந்த வெற்றிகளின் கைதியாக வுள்ளது.** இதற்கு முன்பிருந்த அரசாங்கங் களுடன் ஒப்பிடுகையில் இது கட்டியெழுப்பி யிருக்கும் வீரப்படிமம் நிகரற்றதும், பிரமாண்ட மானதும், மிகத்தூக்கலானது மாகும். எனவே, தனது வெற்றிச் சிறையிலிருந்து இறங்கி வருவதில் இந்த அரசாங்கத்திற்கு என்று சில அடிப்படையான நடைமுறைசார் வரை யறைகள் உண்டு. அது அகவயமான முடிவு களை எடுப்பதற்கு இதுவும் ஒரு காரணம்.

ஆனாலும், சிறிய இலங்கைத் தீவின் வெற்றிகரமான வெளியுறவுத்துறை பாரம்பரியத்திலிருந்து முற்றிலுமாக விலக்கி, தலைகீழான முடிவுகளைத் தொடர்ச்சியாக எடுக்கலாமா? என்பது சந்தேகமே. அப்படியொரு விலகலான முடிவை எடுக்க முற்பட்டதனால், விடுதலைப்புலிகளைத் தோற்கடித்தபின், வந்த ஆண்டுகளில் ஜெனிவாவில் இந்த அரசாங்கம் கண்டங்களைக் கடக்கவேண்டியிருக்கிறது. கடந்த ஆண்டு வந்த கண்டத்தை ஓரளவிற்கு வெற்றிகரமாகக் கடக்க முடிந்தது. ஆனால், கடந்த ஆண்டைப்போலவே இந்த ஆண்டையும் இலகுவாக கடக்க முடியாதிருக்கும். ஏனெனில் இந்த ஆண்டில் வரப்போகும் கண்டமானது, கடந்த ஆண்டைவிட கடினமானதாக இருக்கக்கூடிய வாய்ப்புக்களே அதிகம் தென்படுகிறன. அதைக் கடப்பதென்றால், மேற்கு நாடுகளை அனுசரித்துப்போகும் சில முடிவுகளையாவது எடுக்கவேண்டி வரும்.

மேற்கு நாடுகளைத் திருப்திப்படுத்துவதென்றால், அதற்கு இரண்டு தளங்கள் உண்டு. முதலாவது, அடிப்படையானது. அதாவது சீனாவை ஏதோ ஒரு அளவிற்கு தள்ளிவைப்பது. இரண்டாவது, தமிழர்கள் சம்பந்தப்பட்டது. அதாவது, இச்சிறு தீவினுள் எந்தக் கதவினூடாக மேற்கு நாடுகள் நுழைய முற்படுகின்றனவோ அந்த வழியில் ஏதும் சுதாகரிப்புகளைச் செய்வது. இதன்படி, நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கும், அதைக் கண்காணிப்பதற்குமான ஏதோ ஒரு பொறிமுறையமைப்பை ஏற்படுத்த வேண்டியிருக்கும். குறிப்பாக, அதில், மேற்கின் பங்களிப்பை ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கும் ஏனெனில், அத்தகைய ஏதாவதொரு கண்காணிப்புப் பொறிமுறைக்கூடாகத்தான் மேற்கு நாடுகள் இச்சிறு தீவினுள் தமது பிடியை மேலும் இறுக்க முடியும்.

**இச்சிறிய அழகிய தீவை சக இனங்களுடன் கௌரவமான, நீதியான வழிகளில் பங்கிடத் தயாரில்லை என்றால், வெளியாரிடம் பணிவதைத்தவிர வேறு வழிகள் இல்லை.** இனங்களுக்கிடையிலான நல்லிணக்கம் எனப்படுவது நீதியின் மீதே கட்டியெடுப்பப்படுகின்றது. **நீதி இல்லாத இடத்தில் நல்லிணக்கம் இருப்பதில்லை. சமூகங்களுக்கிடையில் நல்லிணக்கத்தைப் பேண முடியாத நாடு எப்பொழுதும் வெளியாருக்கு திறந்து விடப்பட்டே இருக்கும். வெளியாருக்குத் திறந்துவிடப்பட்ட ஒரு நாடு என்றைக்குமே சுதந்திரமான ஒரு வெளியுறவுக் கொள்கையை வைத்துக் கொண்டிருக்க முடியாது.**

நன்றி:குளோபல் தமிழ் நியூஸ் நெற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யார் என்ன சொன்னாலும் சமுர்த்தி நிறுத்தப்படாது

## ஜனாதிபதி உறுதி

(கொழும்பு)

யார் என்ன சொன்னாலும் சமுர்த்தி திட்டத்தை நிறுத்தப் போவதில்லை என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அலரிமாளிகையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட போது அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் கூறுகையில்,

நாம் இன்று நாட்டை அபிவிருத்தி செய்து வருகின்றோம். துறைமுகம், அதிவேக நெடுஞ்சாலை, விமான நிலையம் போன்ற பல்வேறு புரட்சிகரமான அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஒரு பகுதிக்கு மட்டும் நாம் அபிவிருத்தியை மட்டுப்படுத்தவில்லை. தெற்கிலிருந்து வடக்கு வரையில் நாம் அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டு வருகின்றோம்.

கிராமங்களில் வாழும் பட்டதாரிகளுக்கு நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. யார் என்ன சொன்னாலும் சமுர்த்தி திட்டத்தை இரத்துச் செய்யப் போவதில்லை என ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (அ-2)

# அறநெறி பாடசாலைகளின் திருக்குறள் போட்டி முடிபுகள்

(யாழ்ப்பாணம்)

இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் திருவள்ளுவர் குருபூசை விழாவை முன்னிட்டு நல்லூர் பிரதேச செயலகத்திற்குட்பட்ட அறநெறிப் பாடசாலைகளிடையே நடத்தப்பட்ட திருக்குறள் மனனப்போட்டி, திருக்குறள் பேச்சுப்போட்டி, திருக்குறள்கட்டுரைப் போட்டி, என்பவற்றில் பங்கு கொண்டு முதல் மூன்று இடங்களை பெற்ற மாணவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு,

இதன்படி மத்திய பிரிவிற்கான திருக்குறள் கட்டுரைப் போட்டியில் முதலாம் இடத்தை கை.கிருபாகரி - (நெட்டிலிப்பாய் ஸ்ரீ கணேசா அறநெறிப் பாடசாலை), ந.கீர்த்தனா- (யாழ். காமாட்சி அம்பாள் அறநெறிப் பாடசாலை), கெ. பிரித்திகா ( கொக்குவில் ஸ்ரீ கிருஷ்ணா அறநெறிப் பாடசாலை)

பாலர் பிரிவிற்கான திருக்குறள் மனனப் போட்டியில் அ. அனுஸ்ரிகா (திருநெல்வேலி சைவ வித்தியா அறநெறிப்பாடசாலை), ப. குகபாலன் (வண்ணை ஸ்ரீ விஸ்வலிங்க மகா கணபதி அறநெறிப்பாடசாலை), ந. துவாரகன் (யாழ். சிவசாயி சித்திரக் கோட்டம் அறநெறிப் பாடசாலை) ஆகியோரும் பெற்றுக் கொண்டுள்ளனர்.

கீழ் பிரிவிற்கான திருக்குறள் பேச்சுப் போட்டியில் க. திவீசன் (அரியாலை காமாட்சி அம்பாள் அறநெறிப் பாடசாலை), இ.சயனிதா (அரியாலை சித்திவிநாயகர் அறநெறிப் பாடசாலை),சி.வானுஜா (திருநெல்வேலி சைவ வித்தியா விருத்திச் சங்க அறநெறிப் பாடசாலை) ஆகியோரும் பெற்றுக் கொண்டுள்ளனர். (அ-5)

# அரசின் தூரநோக்கற்ற ஆட்சியால் நாடு நெருக்கடிக்குள்- ஐ.தே.க.

(கொழும்பு)

அரசாங்கத்தின் தூரநோக்கற்ற ஆட்சியினால் நாடு நெருக்கடிகளை எதிர்நோக்கி வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

கண்டியில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டபோது அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் எம்முடன் கோபித்துக் கொண்டுள்ளன. ஜீ.எஸ்.பி. சலுகைத்திட்டம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்படுவதன் மூலம் நாடு மேலும் நெருக்கடிகளை எதிர்நோக்க நேரிடும்.

எதிர்காலத்தில் எமது நாடு மேலும் தனிமைபடக் கூடிய அபாய நிலைமை ஏற்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சி எந்தக்காலத்திலும் மக்களை கைவிடவில்லை. மக்கள் நலனை முதன்மையாகக் கொண்டே செயற்பட்டது.

கட்சியின் சிலர் பதவி மோகத்தினால் ஆளும் கட்சியில் இணைந்து மக்கள் விரோத செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர். தேர்தல் காலத்தில் மட்டுமே இவர்களுக்கு மக்கள் பற்றிய நினைவு வரும்.

கட்சியைப் பாதுகாத்து மக்களுக்கு சேவையாற்ற வேண்டியது மிகவும் அவசியமானது என்றார். (அ-2)

# ஷிராணி தொடர்ந்தும் கண்காணிக்கப்படுகிறார்

இலங்கையின் முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவின் அசைவுகள் யாவும் உன்னிப்பாக அவதானிக்கப்படுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அவர் தற்போது ராஜகிரியவில் உள்ள தமது இல்லத்தில் கணவர் மற்றும் மகனுடன் வசித்து வருகிறார். இந்நிலையில் அவருக்கு பாதுகாப்பு என்ற போர்வையில் பொலிஸ் அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் 24 மணித்தியாலங்களும் ஷிராணி பண்டாறநாயக்கவின் நடவடிக்கைகளை அவதானிக்கும் பணிகளில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

ஷிராணிக்கு வரும் கடிதங்கள், தொலைபேசி அழைப்புக்கள் மற்றும் அவரைச் சந்திக்க வரும் விருந்தாளிகள் அனைவருமே கடும் சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-[illegible])

# 2013.02 28 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★1710-சுவீடனில் ஆக்கிரமிப்பு முயற்சியில் ஈடுபட்ட டென்மார்க் படைகள் ஹெல்சின்போர்க் என்ற இடத்தில் வைத்து சுவிடியப் படைகளால் தோற்கடிக்கப்பட்டன.

★1784-ஜோன் வெஸ்லி மெதடிஸ்த திருச்சபையை ஆரம்பித்தார்.

★1844-USS பிரின்ஸ்டன் என்ற படகில் பொருத்தப்பட்ட துப்பாக்கி வெடித்துச் சிதறியதில் அதில் பயணம் செய்த இரண்டு ஐக்கிய அமெரிக்க அமைச்சர்கள் உட்பட பலர் உயிரிழந்தனர்.

★1854-ஐக்கிய அமெரிக்காவில் குடியரசுக் கட்சி ஆரம்பிக்கப்பட்டது.

★1897- மடகஸ்காரின் கடைசி அரசியான மூன்றாம் ரனவலோனா பிரெஞ்சுப் படைகளினால் பதவியில் இருந்து அகற்றப்பட்டார்.

★1922-எகிப்தின் விடுதலையை ஐக்கிய இராச்சியம் அங்கீகரித்தது.

★1935-வொலஸ் கரோதேர்ஸ் என்பவரினால் நைலோன் கண்டுபிடிக்கப்பட்டது.

★1942-இரண்டாம் உலகப் போர்: ஐக்கிய அமெரிக்காவின் யூஎஸ்எஸ் ஹூஸ்டன் என்ற கப்பல் இந்தோனேசியாவின் சுந்தா நீரிணையில் இடம்பெற்ற போரில் ஜப்பானினால் மூழ்கடிக்கப்பட்டதில் 693 பேர் உயிரிழந்தனர்.

★1953-ஜேம்ஸ் வாட்சன் மற்றும் பிரான்சிஸ் கிரிக் ஆகியோர் தாம் டிஎன்ஏயின் வேதியியல் அமைப்பைக் கண்டுபிடித்ததாக அறிவித்தனர்.

★1986- சுவீடன் பிரதமர் ஓலொஃப் பால்மே ஸ்டொக்ஹோம் நகரில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

★1991-முதலாம் வளைகுடாப் போர் முடிவுற்றது.

★1998- கொசோவோவில் கொசோவோ விடுதலை இராணுவத்தின் மீது செர்பியக் பொலிஸார் தாக்குதலைத் தொடுத்தனர்.

★2007- புளூட்டோவை நோக்கி ஏவப்பட்ட நியூ ஹரைசன்ஸ் தானியங்கி விண்கலம் வியாழனை அண்மித்தது.

### பிறப்புக்கள்

★1896-பிலிப் என்ச், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (இ.1965)

★1901-லினசு பவுலிக், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க வேதியியலாளர் (இ.1994)

★1915-பீட்டர் மெடாவர், நோபல் பரிசு பெற்ற பிரேசில் அறிவியலாளர் (இ.1987)

★1929-பிராங்க் கெரி, கட்டடக் கலைஞர்

★1930-லியோன் கூப்பர், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க இயற்பியலாளர்

★1931- துரை விஸ்வநாதன், ஈழத்தின் பதிப்பாளர் (இ.1998)

★1939- தானியேல் சூ, நோபல் பரிசு பெற்ற சீன இயற்பியலாளர்

★1948-ஸ்டீவன் சூ, நோபல் பரிசு பெற்ற அமெரிக்க இயற்பியலாளர்

★1953- பால் கிரக்மேன், அமெரிக்க பொருளியல் நிபுணர்

### இறப்புக்கள்

★1869-அல்போன்சு டி லாமார்ட்டின், பிரெஞ்சு வரலாற்று ஆசிரியர் (பி.1790)

★1936-சார்ள்ஸ் நிக்கோல், நோபல் பரிசு பெற்றவர் (பி.1866)

★1963-இராசேந்திர பிரசாத், இந்தியாவின் முதலாவது குடியரசுத் தலைவர் (பி.1884)

★2006-ஓவன் சாம்பர்லெயின், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க இயற்பியலாளர் (பி.1920)

### துரை விஸ்வநாதன்



1931 ஆம் ஆண்டுபெப்ரவரிமாதம் 28 ஆம் திகதி தமிழ் நாட்டு துறையூர் சிக்கத்தம்பூர் எனும் ஊரில்பிறந்த துரைவிஸ்வநாதன் 1945 ஆம் ஆண்டு தொழில் நிமித்தம் இலங்கையில் குடியேறி வியாபாரத்துறையில் தன்னை ஸ்தாபித்துக் கொண்டார்.

1976 ஆம் ஆண்டு கொழும்பு நகரில் விஜயா ஜெனரல் ஸ்டோர்ஸ் எனும் நிறுவனத்தை ஆரம்பித்தார். அந்த நாள் தொடக்கம் கலை இலக்கிய படைப்புக்களைத் தேடிப் பார்ப்பதிலும் கலை இலக்கிய கூட்டங்களில் செல்வதிலும் தணியாத ஆர்வம் கொண்ட அவர், தான் ரசித்த படைப்புக்களை தன் நாட்குறிப்பேட்டில் குறித்து வைக்கும் பழக்கம் கொண்டவராக இருந்தார்.

அந்த ரசனையின் பயனாக மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா, தெளிவத்தை ஜோசப் பிரேம்ஜி ஆகியோரின் உறவும் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் போன்ற இயக்கத்தின் தொடர்பும் அவரது கொழும்பு வியாபார நிறுவனத்தின் மேல்மாடியை கலை இலக்கிய கூட்டங்கள் நடக்கின்ற ஒரு மண்டபமாக உருவாக்க வைத்ததோடு துரைவி பதிப்பகத்தை உருவாக்கும் சிந்தனையை அவருக்குள் வித்திட வைத்து அவர் வாழும் காலத்தில் ஒன்பது நூல்களை குறிப்பாக மலையக தமிழ் இலக்கியத்திற்கு பங்களிப்பு செய்யும் வகையிலான நூல்களை துரைவி பதிப்பகத்தின் மூலம் வெளியிட்டு வைத்தார்.

அத்தோடு தினகரனின் அனுசரணையுடன் ரூபா ஒரு இலட்சத்து ஆயிரம் பரிசுத் தொகையாக அவரால் வழங்கப்படும் வகையிலான தேசிய ரீதியான சிறுகதைப் போட்டியை அறிவிக்க வைத்தார். ஆனால், அப்போட்டியின் முடிபுகள் வெளி வரும் முன்னதாகவே 1998 டிசெம்பர் 21 அன்று துரை விஸ்வநாதன் காலமானார்.

அவரது மறைவுக்குப் பின் துரைவி பதிப்பக வெளியீடாக பரிசு பெற்ற சிறுகதைகள் எனும் தலைப்பில் நூலாக வெளியிடபபட்டது தினகரன் நிறுவனத்தின் மண்டபத்தில் நடந்த முதல் நூல் வெளியீட்டு விழா எனும் பெருமையை பெற்று வெளியிடப்பட்டது.

இவருக்கு 1996 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் இலங்கை அரசினால் சமாதான நீதவான் நியமனமும் 1997 ஆம் ஆண்டு இலங்கை மத்திய மாகாண சாகித்திய விழாவில் கலாசார அமைச்சு விருதும் 1997 ஆம் ஆண்டு கண்டி மக்கள் கலை இலக்கிய ஒன்றியத்தினால் இலக்கியக்காவலர் எனும்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பட்டதாரிகளே! நீங்கள் அரச வேலைக்காக மாத்திரம் ஏங்கி நிற்பவர்களா?

### அறிமுகம்

எமது நாட்டில் கல்வி என்பது அரசின் பொறுப்பில் இலவசமாக வழங்கப்படும் ஏற்பாடாக உள்ளது. சுதந்திரமடைதற்கு முன்பு கல்வியில் நிலவிய பாரிய வேறுபாடுகளைக் குறைக்கும் வகையிலும் சுதந்திர இலங்கையின் அபிவிருத்திக்கு வேண்டிய மனித வளத்தை ஊக் குவிக்கும் குறிக்கோளுடனும் இலவச சுகாதார வசதிகளுடன் ஒன்றிணைந்து இலவசக் கல்வி யும் அறிமுகமானது.

ஆனால், இது பின்பு "உயர் கல்வி பெற்ற அனைவருக்கும் உடைநலுங்காத உடல்சார் வேலையுடன் தொடர்பற்ற- மேசை-கதிரை சார்ந்த வேலை வழங்கும் பொறுப்பும் அரசாங்கத்துக்கே உரியது" என்பதாக மாறிவிட்டது. அரச உத்தியோகங்களில் பல விசேட பாதுகாப்புக்களும் வசதிகளும் 1950 களில் நிலவியது உண்மைதான். அக்காலத்தில்எஸ்.எஸ்.சி. (க.பொ.த. சாதாரண தரம்) மற்றும் எச்.எஸ்.சி.(க.பொ.த.உயர்தரம்) தகுதியுடைய அனைவரும் தொழில் பெறும் வாய்ப்புக்கள் இருந்தன. எழுதுவினைஞராக அரச துறையில் பணியாற்றுதல் யாழ்ப்பாண மத்திய தர, இடைநிலை மற்றும் தாழ்நிலை வகுப்பினரின் கல்வி சார் கௌரவமாக அப்போது கருதப்பட்டிருந்தது. ஆங்கில மொழி மூலமாக இத்தகைய வேலை பெறுவதற்கு அப்போதைய பாடசாலைக் கல்வி உதவி செய்தது. சுதந்திர மடைந்த காலத்திலும் பல்கலைக் கழக கல்வி வரை செல்வோர் எண்ணிக்கையும் குறைவாகவேயிருந்தது. இதனால் பட்டம் பெற்றவர்கள் உடனடியாக தொழில்வாய்ப்பும் பெற்றனர். குடித்தொகையும் தொழிற்படையும் குறைவானதாயிருந்தது. இதனால் பட்டப்படிப்பு பெறுபவர்களும் குறைவாகவேயிருந்தனர். இதனால் பட்டதாரிகளுக்கான வேலையின்மை என்பதும் பிரச்சினைக்குரியதாயிருக்கவில்லை. 1946 இல் நிலவிய நிலைமை பின்வருமாறு காணப்பட்டது.

✦ மொத்த குடித்தொகை 6,657,000 பேர்

✦ தொழிற்படையினர் 2,611,000 பேர்

✦ பல்கலைக்கழகத்தில் கற்றோர் (1948) 1611 பேர் (இலங்கை மத்திய வங்கி 1998:347)

ஆனால், கடந்த ஆறு தசாப்த காலத்தில் இவற்றில் மிகப் பெரிய மாறுதல்கள் ஏற்பட்டன. எனினும் பட்டதாரிகளிடம் அரச துறையில் தொழில்வாய்ப்பை எதிர்பார்க்கும் மனோபாவம் மாறவேயில்லை. மாறுகின்ற சமூக, பொருளாதார, தொழில்நுட்ப, பண்பாட்டு சூழலில் மாற்றமடையாத கற்றவரது தொழில்வாய்ப்பு மனோபாவம் சமூக அமைதியின்மையையும் சமூக முரண்பாடுகளையும் உருவாக்குவது தவிர்க்க முடியாதது தானே!

இந்த கல்வி-கற்றோர்-அரச துறை தொழில்வாய்ப்பு தொடர்பான இயைபின்மை அல்லது முரண்பாடு பற்றி கலந்துரையாடுவதே இன்றைய நோக்கமாகும்

### அரசதுறையில் வேலைவாய்ப்பு

சுதந்திரத்தின்பின் பல்வேறு அரசியல், பொருளாதார முன்னேற்றங்களுடன் இணைந்து மக்கள் தொகையும் தொழிற்படையும் அதிகரித்துச் சென்றபோது அதற்கேற்ப உயர்கல்வி கற்பவர்கள் தொகையும் அதிகரித்தது. 2011 இல் இவை தொடர்பான நிலைமை பின்வருமாறு அமைந்தது.

மொத்தக் குடித்தொகை- 20, 869,000, தொழிற்படை- 8,236, 000, வேலையற்றோர்-342, 000, பல்கலைக்கழகத்தில் கற்றோர் 73,828

(இலங்கை மத்திய வங்கி அறிக்கை 2011:90) பல்கலைக்கழகங்களில் கற்போர் தொகை(திறந்த பல்கலைக்கழக பட்டதாரிகளையும் சேர்த்தால்) சுதந்திரத்துக்குப்பின் ஏறக்குறைய 50 மடங்காக பெருகிவிட்டது. இதேவேகத்தில் •அரசாங்கத்துறையில் வேலைவாய்ப்பும் பெருக வேண்டும் என்று எதிர்பார்ப்பது நியாயமாகாது. இந்த எதிர்பார்ப்பின் நியாயமின்மைகளை உணர்ந்து கொள்ள வேண்டிய காலகட்டத்தில் நாம் உள்ளோம்.

அரசாங்கத்தொழில் தொடர்பாக பின்வரும் சுயநலம்மிக்க எதிர்பார்க்கைகள் எம்மிடம் பெருவிருட்சமாக வளர்ந்துவிட்டது. வெளிப்படையாக சொல்லக்கூடிய எதிர்பார்க் கைகளும் சொல்ல முடியாத ஆனால் உள்மனதுக்கு குதூகலம் தரும் பல நன்மைகளும் அரசதுறை தொழில் வாய்ப்பில் இருப்பதாக பல ஆண்டுகள் நாம் நம்பி வந்துள்ளோம்.

✦ நிரந்தரமான தொழில் வாய்ப்பு: அறுபது வயது வரை முப்பது நாட்களுக்கொருமுறை பணச் சம்பளம் கிடைக்கும். வருடம் முழுவதும் ஆகக்கூடியது 260 நாட்களே வேலை செய்தால் போதுமானது.

✦ இளைப்பாறியபின் ஓய்வூதியம் பெறமுடிதல்: உயிர் வாழும் வரை தானும் தனக்குப்பின் மனைவியும் ஓய்வூதியம் பெற முடிதல்.

✦ வருடாந்தம் தொழில் செயலாற்றங்களைக் கணித்து வினைத்திறன் குறைந்தவரது சம்பளத்தை வெட்டுதல்: மேலதிக படிகளை குறைத்தல், வேலை யிலிருந்து இடைநிறுத்தம் செய்தல்(பிரமாணங்களில் இருந்தாலும்) என்பன நடை முறையில் இல்லாதிருத்தல்.

✦ அரசாங்கத் தொழிலுக்கு புறம்பாக, மேலதிகமாக விவசாயப் பண்ணை, சில்லறை வியாபாரம், பகுதிநேர கைத்தொழில் போன்றவற்றிலும் ஈடுபடுவதற்கெதிரான சட்டபூர்வமான-கடுமையான-நடைமுறைகள் இல்லாதிருத்தல்.

✦ தொழிலின் நிரந்தரப்பண்பு காரணமாக திருமணச்சந்தையில் அதிக கிராக்கியை பேண முடிதல். பெண்களுக்கு விரும்பத்தக்க வாழ்க்கைத் துணையை தேடுதற்குரிய மேலதிக அனுகூலத்தை தருதல்.

அரச தொழில்களைப் பெறுவதற்கான கல்வித்தகைமை வரலாறுக் காலத்தில் தரம் 8, க.பொ.த. (சாதாரணம்), க.பொ.த. (உயர்தரம்) என படிப்படியாக உயர்ந்து பல்கலைக்கழக பட்டம் என்பது வரை உயர்ந்துள்ளமை [illegible] னும் இது "பட்டதாரிகள் தொழில் தொடர்பான அதிகூடிய சிறப்புரிமைகளைக் கொண்டவர்களாக எப்போதும் அங்கீகரிக்கப்படுவர்" என்பதை வலியுறுத்தும் பிரகடனம் அல்ல என்பதையும் நாம் விளங்கிக்கொள்ளவேண்டும்.

பட்டதாரிகள் எப்போதும் அரச துறை தொழில்களில் மாத்திரமே தமது அறிவையும் திறன்களையும் வெளிப்படுத்துவர் என்று எழுதப் படாத சமூக நிபந்தனையை வலியுறுத்த முடியாது.

அண்மைக்காலங்களில் பல்கலைக்கழக பட்டங்களின் தராதரம் பற்றி கல்விமான்களே அவநம்பிக்கை நிறைந்த கருத்தாடல்களில் ஈடுபட்டு வருவதை அவதானித்துக் கொள்ள முடிந்தது.

தேசிய கல்வி ஆணைக்குழுவின் உப தலைவராக பணியாற்றிய கலாநிதி கே.டி. அருள்பிரகாசம் அவர்கள் பட்டதாரிகளின் வேலைத் தகைமை பற்றி பதினான்கு ஆண்டுகளுக்கு முன் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்.(பொருளியல் நோக்கு 1999:16)

"அண்மையவருடங்களில்வேலையற்றவர்களின் பட்டியலில் வேலையில் அமர்த்தப்பட முடியாதவர்களின் பட்டியலில் சேர்த்துக் கொள்ளும் பட்டதாரிகளின் எண்ணிக்கை இடையறாது அதிகரித்து வந்துள்ளது. முக்கியமாக இரண்டு காரணிகள் இதற்கு பங்களிப்புச் செய்திருப்பதனை காண முடிகின்றது.

(1) பாடங்களும் பாட சேர்க்கைகளும் பெருமளவுக்கு நெகிழ்ச்சித் தன்மை அற்றவை. இப்பாடங்களில் உள்ளடக்கப்பட்டிருக்கும் பெரும்பாலான விடயங்கள் நவீன உலகுக்கும் எதிர்காலத்துக்கும் பொருத்தமற்றவையாக காணப்பட்டன.

(2) புதிய மாற்றங்களை எடுத்து வருவதிலும் கல்வித் தேவைகளை விரிவடைந்து வரும் பொருளாதாரத்தின் பல்வேறுபட்ட தேவைகளுடன் பொருத்தி அதற்கேற்ப புதிய நெறிகளை ஆரம்பித்து வைப்பதிலும் பாடத்திட்டங்களை வகுப்பதி




லும் பீடங்களைச் சேர்ந்தவர்களும் தயக்கம் தெரிவித்து வந்துள்ளனர்.

பல பாடங்களும் பாடங்கள் தொடர்பான சேர்க்கைகளும் 50 வருடகாலமாக மாற்றமடையாது இருந்து வந்துள்ளன"

இவரது கூற்றுப்படி பழைய பாடங்களைக்கற்றுவிட்டு மாற்றமடைந்து விட்டபுதிய சூழலிலும் புதிய தேவைகளிலும் அவர்களால் பொருந்த முடியவில்லை என்பது வலியுறுத்தப்பட்டது.



பேராசிரியர் மா.சின்னத்தம்பி

எமது நாட்டில் கலைப் பட்டதாரிகள் மிகவும் எளிதாகக் குறிப்பாக வெளிவாரிப் பட்டங்களின்மூலம் பட்டதாரிகளாகின்றனர். சமூகத்துக்கு உதவக்கூடிய பாடங்களை விட மிகவும் எளிதான பாடங்களைக் கற்பதிலேயே நாட்டம் கொண்டுள்ளனர். இந்நிலையில் ஏற்படும் அபாயம் பற்றி கலாநிதி அருள்பிரகாசம் பின்வருமாறு தெளிவு படுத்துகின்றார்.

"அரசாங்கம் பெரும் முதலீடுகளைச் செய்து பட்டதாரி ஒருவர் உருவாக்கப்படுகின்றார். இறுதியில் இந்த நபரினால் தனக்கோ அல்லது அரசுக்கோ எத்தகைய பிரயோசனமும் ஏற்படுவதில்லை. இதைவிடவும் மோசமான விடயம் என்னவென்றால் பட்டதாரி ஒருவர் தனது தகுதிக்கும் அந்தஸ்துக்கும் ஏற்றவிதத்தில் தொழில்வாய்ப்பொன்றை வழங்கவேண்டிய பொறுப்பு அரசுக்கு இருந்து வருகின்றது என்று கருதுவதாகும்" (பொருளியல் நோக்கு 1999: 16)

எமது நாட்டின் பல்கலைக்கழகப் பட்டங்கள் போதுமான அறிவை வழங்குவதில் உயர் மதிப்பு மிக்கவை. பட்டதாரிகள் போதிய அறிவுத்தரம் கொண்டவர்கள் என்பது உண்மைதான். ஆனாலும் பல்வேறு வகையான கைத்தொழில்துறைகளிலும் தொழில்நுட்பத்துறைகளிலும் குறிப்பாக தனியார் துறைகளில் அவர்கள் தொழில்தேடவேண்டும். அரச திணைக்களங்களில் எழுதுநராக அல்லது பாடசாலைகளில் ஆசிரியராக வருவதற்கு மாத்திரம் முன்னுரிமை கொடுப்பதும் அதனை வலியுறுத்துவதும் கல்வியறிவு கூடியவர்கள் தம்மை பலவீனமானவர்களாகக் கருதுகின்றார்களோ என்ற ஐயப்பாட்டை உருவாக்குகின்றது.

இந்த நாட்டில் வறுமை காரணமாக அல்லது வேறுபட்ட குடும்ப, சமூக, அரசியல் நிலைமைகளினால் பாடசாலைக் கல்வியைக்கூட நிறைவுசெய்யமுடியாது இடைவிலகிய மாணவர்கள் தமது சொந்த முனைப்பு, கடின உழைப்பு, சமூகப் பொறுப்பை உணர்தல் போன்ற பண்புகளின் மூலம் பெரிய தொழில் முனைவோராக வளர்ந்துள்ளனர். நூற்றுக்கணக்கான வகைமாதிரி உற்பத்திகளை தேசத்துக்காக அவர்களது நிறுவனங்கள் உற்பத்தி செய்துள்ளன. பல்லாயிரம் பட்டதாரிகளுக்குரிய தொழில்வாய்ப்புக்களையும் இத்தகைய பட்டம் பெறாத தொழில்முனைவோர் வழங்கியுள்ளனர்; இப்போதும் வழங்கி வருகின்றனர். இவர்கள் பலவீனமானவர்கள், ஆற்றல் குறைந்தவர்கள், சமூக மதிப்பற்றவர்கள் என்றா பட்டதாரிகள் கருதுகின்றார்கள்.

க.பொ.த சாதாரண தகுதியை பெறமுடியாதவர்களும் சங்கம் அமைத்து தமக்குரிய உடல்சார் வேலைகளை தொழில்சார் மற்றும் தொழில்நுட்பவேலைகளை அரசாங்கம்தான் தரவேண்டுமென கோருவதற்கான எல்லா உரிமைகளும் கொண்டவர்கள்தான். ஆனால் அவர்கள் நல்லவர்கள்; தம்மீது அதீத நம்பிக்கை கொண்டவர்கள்; தொழில் உலகை அறிந்து அதற்கேற்ற தொழில்சார் பயிற்சிகளைப் பெற்று தம்மைச் சுய தொழில் வல்லுநர்களாக, தொழில் நுட்ப வினைஞர்களாக வளர்த்துள்ளனர்; தமக்குரிய தொழில்வாய்ப்பை உருவாக்கிக்கொண்டுள்ளனர். சுயதொழிலில் எழக்கூடிய இடர் (Risks) களை ஏற்கக்கூடிய துணிவு மிக்கவர்களாக விளங்குகிறார்கள்.

## புதிதாக சிந்திப்போம்: சமூகத்திற்கான கல்வி

இவர்களுடன் ஒப்பிடும்போது அதிர்ஷ்டம் கூடியவர்கள் என்றவகையில் அரசின் 11 வருட அல்லது 13 வருட இலவச பாடசாலைக் கல்வியை நிறைவுசெய்து மீண்டும் தமது படிப்பாற்றல் காரணமாக 3 வருடங்கள் அல்லது 4 வருடங்கள் அரசாங்க செலவில் இலவசமாகப் பட்டங்களையும் பெற்றவர்களும் ஏன் இதேமாதிரி முன்னுதாரணங்களைச் சமூகத்தில் உருவாக்கக்கூடாது.பல பட்டதாரிகள் இப்போது தனியார்துறைகளில் பணியாற்றும் நாட்டத்துடன் காணப்படுகின்றனர். பயண முகவர்களாகவும் ரியூசன் நிலைய உரிமையாளர்களாகவும் தொடர்பாடல் நிறுவன உரிமையாளர்களாகவும் தம்மை மாற்றிக்கொண்டு பொருளாதாரப் பலம் மிக்கவர்களாகவும் தொழில் சுதந்திரம் கொண்டவர்களாகவும் அரசாங்கத்துக்கு வரி செலுத்துவதன்மூலம் உதவி செய்பவர்களாகவும் மிளிர்கின்றனர். இவர்களை நாடுமதிக்கிறது. இவர்களை அரசாங்கமும் சமூகமும் பெறுமதி மிக்கவர்களாக கருதிக் கௌரவிக்கின்றது. இத்தகைய முன்மாதிரிகளை எல்லாப் பட்டதாரிகளும் பின்பற்ற விரும்பவேண்டும். அரச தொழில் கிடைக்கும் போது சேர்ந்து கொள்ளலாம். ஆனால்அரசவேலை வாய்ப்பு கிடைக்கும்வரை வேலையற்ற பட்டதாரிகளாக தமக்கு அடையாள முத்திரை குத்திக்கொண்டு தேசவளர்ச்சியின் தடைச்சுவர்களாக தம்மை மாற்றிக் கொள்ளக்கூடாது. அது சமூக நீதியுமாகாது. (16 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# IMMEDIATE VACANCIES

## உடனடி தொழில் வாய்ப்பு

இலங்கையின் முதற்தர நிறுவனமாகத் திகழும் Amana Takaful நிறுவனத்தின் முழுமையான பக்க பலத்துடன் தனது கிளை நிறுவனத்தை யாழ்ப்பாணத்தில் பிரபல்யமாக ஆரம்பித்து தனது சேவையை வழங்கிக் கொண்டுள்ளது. இந் நிறுவனத்திற்கு பின்வரும் பதவிகளுக்கான வெற்றிடங்களை ஒரு வாரத்தில் தகுதியானவர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றது.

**வெற்றிடமாகவுள்ள பதவிகள் -IMMEDIATE VACANCIES FOR**

- Field Staff (08)
- Team Leaders (03)

- ✔ சர்வதேச தரத்தில் சகல பயிற்சிகளும் இலவசமாக வழங்கப்படும்
- ✔ Field Staff அனைவருக்கும் அடிப்படை வேதனமாக (5000/= முதல் 10,000/= வரை வழங்கப்படும்)
- ✔ பயிற்சியின் பின்னர் அடிப்படை வேதனம் உட்பட தரகுப் பணம் வழங்கப்படும். (மாதாந்தம் 40.000/- தொடக்கம் 60.000/- வரை பெறலாம்
- ✔ ஆறுமாத காலங்களின் பின் உங்களது திறமையின் அடிப்படையில் வேலை நிரந்தரமாக்கப்படும்.

**கல்வித் தகைமை** (Team Leader)

க.பொ.த (சா/த) பரீட்சையில் ஒரே அமர்வில் ஆகக் குறைந்தது 06 சாதாரண சித்திகளுடன் (தமிழ் மற்றும் கணிதம் போன்ற பாடங்களில் சித்தி பெற்றிருக்க வேண்டும்)

**மற்றும்** க.பொ.த (உ/த) பரீட்சையில் ஒரே அமர்வில் குறைந்தது 03 சாதாரண சித்திகளைப் பெற்றிருப்பதுடன் தொழில்துறை. கணனித்துறை. அனுபவமும் பெற்றிருப்பின் மேலதிக தகுதியாக கருதப்படும்.

Field Staff

க.பொ.த (சா/த) பரீட்சையில் ஒரே அமர்வில் ஆகக் குறைந்தது 06 சாதாரண சித்திகளுடன் (தமிழ் மற்றும் கணிதம் போன்ற பாடங்களில் சித்திபெற்றிருக்க வேண்டும்) **அல்லது**

இளைப்பாறிய உத்தியோகத்தர்கள் மற்றும் தொழிலை எதிர்பார்த்து காத்திருக்கும் அனைவரும் தொடர்பு கொள்ளலாம்.

**தொடர்புகளுக்கு: 021 7501100, 0773440323, 0775292501** (2030)

# தடுத்து வைக்கும் சட்டமூலம் ஆளுக்காள் மாறுபடுகிறது

## ஐ.தே.க குற்றச்சாட்டு

பொலிஸ் நிலையத்தில் சந்தேக நபர்களை 48 மணி நேரத்திற்கு தடுத்து வைக்கும் சட்டமூலம் ஒவ்வொருவருக்கும் மாறுபட்ட வகையில் அமுல்படுத்தப்படுவதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்துகிறது.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் கயந்த கருணாதிலக்க குறித்த கருத்தை வெளியிட்டார். சுயாதீன பொலிஸ் ஆணைக்குழு செயற் படுத்தப்படாமையே இதற்கான காரணம் என்றும் பொலிஸ் துறை தற்போது அரசியல் மயமாக்கப்பட்டுள்ளதாக அவர் குற்றம் சுமத்தி யுள்ளார்.

இது பற்றி அவர் மேலும் கூறுகையில், 48 மணித்தியாலம் தடுத்து வைக்கும் சட்டமூலம் கொண்டுவரப்பட்ட தருணத்திலும் நாம் நாடளுமன்றத்தில் எதிர்ப்பினை வெளி யிட்டோம். இது அரசியல் கொலைக்கு தயாரா கும் செயல் என்று சுட்டிக்காட்டப்பட்டது.

தற்போது தாக் குதலுக்கு உள்ளான டி.ஐ. ஜியின் மகன் காயமடைந்து மருத் துவமனை யில் தீவிர சிகிச்சைபெற்று வரும் நிலையில் அமைச்சரின் மகன் பொலிஸ் நிலை யத்திற்கு சென்று பிணையில் செல்ல அனுமதிக்கப் பட்டிருக்கிறார். எனவே, தடுத்து வைக்கும் உத்தரவு ஒவ் வொருவருக்கும் தராதர அடிப்படையில் மாறு படுகின்றதா என்ற கேள்வி மக்கள் மத்தியில் எழுந்துள்ளது. பொலிஸ் ஆணைக் குழு இன்மைக்கான பிரிதிபல னால் பொலிஸ் கட்டமைப்பு அரசியல் மயமாக்கத்திற்கு உட்படுகின்றமை தற்போது தடுக்க முடியாதுள்ளது என தெரிவித்துள்ளார். (அ-2)

# விஞ்ஞான சங்கத்தின் விஞ்ஞானக் கண்காட்சி

தமிழ் மாணவர்களின் விஞ்ஞான அறிவினை மேம்படுத்தும் நோக்குடன் யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தினால் நடத்தப்படும் வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான விஞ்ஞானக் கண்காட்சி போட்டி எதிர்வரும் மார்ச் மாதம் 4 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 9.30 மணி முதல் பிற்பகல் 4 மணிவரை யாழ். இந்து மகளிர் கல்லூரி யின் விசாலாட்சி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சமூகவலுவூட்டலுக்கான கல்வி என்ற கருப்பொருளில் இடம்பெறும் இக்கண்காட்சியில் சுவரொட்டிகள், சித்திரங்கள் மற்றும் விஞ்ஞான புத்தாக்கங்கள் என்பன காட்சிப் படுத்தப்படவுள்ளன.

இக்கண்காட்சியில் பாடசாலை மாணவர்கள், கல்விமான்கள், சமூகப் பிரதிநிதிகள், பொதுமக்கள் அனைவரையும் கலந்து கொண்டு பயன்பெறுமாறு யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் உதவிப் பொதுச் செயலாளர் கலாநிதி பா.நிமலதாசன் கேட்டுக்கொண்டுள்ளார். (அ-5)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



Valampurii Graphics (2032)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 28 ஆவது பட்டமளிப்பு விழாவில் கல்வி முதுமாணிப் பட்டத்தில் சிறப்புத் தேர்ச்சி பெறும் M.Ed merit

## சுப்ரமணியம் தர்மரத்தினம்

B.A.Hons M.A. Pgde (Merit), PGDEM (Merit) M.Ed (Merit), SLPS - 2-1 - கோட்டக் கல்விப் பணிப்பாளர் – பூநகரி

**இவர் மேலும் கல்வியுலகில் சாதனைகள் படைத்து கல்விச் சமூகத்துக்கு சேவையாற்ற வாழ்த்துகின்றோம்.**

**பாடசாலைச் சமூகம்,**
**கிளி/முழங்காவில் ஆரம்ப வித்தியாலயம்,**
**கிளி/முக்கொம்பன் அ.த.க.பாடசாலை, பூநகரி.**

(2032)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் : 14.07.1960
மறைவு : 29.01.2013



Valampurii Graphics (c-2532)

கடந்த 29.01.2013 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் செய்தி கேட்டு நேரில் வந்தும் தொலைத் தொடர்புகள் மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும் மற்றும் பல வழிகளில் உதவி புரிந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (01.03.2013) வெள்ளிக்கிழமை காலை 6 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

**அமரர் கணேசரட்ணம் ஞானரட்ணம்**

**தகவல்: குடும்பத்தினர்**
கரணவாய், கரவெட்டி, 0772487830

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் இன்று (28.02.2013) நடைபெறும் 28 ஆவது பட்டமளிப்பு விழாவில் கலைமாணிப் பட்டம் பெறும்

**திருமதி நிஷாந்தன் சத்யா**
(B.A.)

அவர்கள் மென்மேலும் பல பட்டங்கள் பெற்று நீடூழி வாழ்கவென மனதார வாழ்த்துகின்றோம்.



Valampurii Graphics (c-2532)

**வாழ்த்துவோர்:**
மாமா, மாமி,
மச்சாள், மச்சான்மார்,
(றஞ்சனாஸ் றெக்ஸ்),
சுன்னாகம்

(அ/2532)



நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி வழங்கும் நேஷன்ஸ் லீஸிங் சேவையின் மூலம் உங்களுக்கு தேவையான வாகனம் அல்லது இயந்திர உபகரணத்தை குறைந்த கொடுப்பனவு முறையில் துரித கதியில் பெற்றுக்கொள்ளுங்கள்.

இன்றே அழையுங்கள்: (011) 4 218 218

Nations Trust Bank
Nations Leasing

(அ/2533)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கைக்கு எதிராக வாக்களிக்கக்கோரி

# அயர்லாந்து, லிபிய தூதர்களுடன் தி.மு.கழக எம்.பிக்கள் சந்திப்பு

(கொழும்பு)

**ஜெனீவாவில் இலங்கையில் மனித உரிமை மீறல்கள் குறித்து அமெரிக்கா கொண்டுவரவுள்ள தீர்மான த்தை ஆதரிக்குமாறு உலக நாடுகளிடம் தி.மு.க.வலி யுறுத்தி வருகிறது. இலங்கைக்கு எதிரான தீர்மானத்தில் வாக்களிக்குமாறு அயர் லாந்து, லிபிய தூதர்களை சந்தித்து தி.மு.க.எம். பிக்கள் வலியுறுத்தியுள்ளனர்.**

இது தொடர்பாக டில்லியில் உள்ள பல்வேறு நாட்டு தூதர்களை தி.மு.க.எம்.பிக்கள் சந்தித்து இலங்கைக்கு எதிராக வாக்களிக்குமாறு கோரி வருகின்றனர்.

இது தொடர்பாக நேற்று முன்தினம் அயர்லாந்து, லிபிய தூதர்களை சந்தித்து வலியுறுத்தியுள்ளனர். இந்தச் சந்திப்பின் போது தி.மு.க.நாடாளுமன்ற உறுப்பினர் ஹெலன் டேவிட்சன், ரித்திஷ், டி.கே.எஸ்.இளங்கோவன், தயாநிதி மாறன் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர். ஜெனீவாவில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமை ஆணைய மாநாட்டில் இலங்கைக்கு எதிராக கொண்டு வரவு ள்ள தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க வேண் டும் என ஈழ ஆதரவு அமைப்புகள் கோரிக் கைகள் விடுத்துள்ளன.

ஜெனீவாவில் நடைபெற்றுவரும் ஐ.நா. மனித உரிமை ஆணைய மாநாட்டில் இலங்கைக்கு எதிராக கொண்டு வரவுள்ள தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இலங்கையில் நடைபெற்ற போர்க் குற்றங்கள் குறித்து விசாரிக்க சுதந்திர மான சர்வதேச விசாரணை ஆணையம் அமைக்க ஐக்கிய நாடுகள் சபை யின் மனித உரிமை மாநாட்டில் இந்தியா தீர்மானம் கொண்டுவர வேண்டும் என பிரிட்டன் வாழ் தமிழர்கள் அமைப்பு வலுயுறுத்தியுள்ளது. (அ-2)

## பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் இருபாலாருக்குமான எல்லே போட்டி



(கரவெட்டி)

வடமராட்சி வடக்கு பிரதேச செயலகத்திற் குட்பட்ட பதிவு செய்த விளையாட்டுக்கழகங்களுக்கிடையிலான இருபாலாருக்குமான எல்லே போட்டியில் பருத்தித்துறை ஐக்கியம்-பருத்தித் துறைசென்தோமஸ் அணிகள் சம்பியனாகியன.

அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழக மைதானத்தில் நேற்று முன்தினம் காலை நடைபெற்ற இப் போட்டிகளில் ஆண்களுக்கான போட்டியில் பருத்தித்துறை சென். தோமஸ் அணியே 10:9 புள்ளிகளில் பருத்தித்துறை ஐக்கியம் வெற்றி பெற்று சம்பியனாகியது.

அரையிறுதியாட்டத்தில் பருத்தித்துறை வீனஸ் அணியை வென்று சென்.தோமஸ் அணியும் இரண்டாவது போட்டியில் வல்வை அணியை வென்று பருத்தித்துறை ஐக்கிய அணியும் இறுதிப்போட்டிக்கு தெரிவாகின.

பெண்களுக்கான போட்டியில் வல்வெட்டித்துறை கழுகு அணியை வென்று பருத்தித் துறை சென்.தோமஸ் அணி சம்பியனாகியது.

அரையிறுதிப் போட்டிகளில் நெடியகாடு இளைஞர் அணியை கழுகு அணியும் வல்வை அணியை சென்.தோமஸ் அணியும் வென்று இறுதிப் போட்டிக்கு தெரிவாகின. (அ-3-24)

# பட்டதாரிகளே!.....

(14 ஆம் பக்கத் தொடர்ச்சி.)

இந்தியாவில் தற்போது பட்டதாரிகள் எத்தகைய பட்டம் பெற்றாலும் ஆசிரியர்களாக வருவதற்குப் போட்டிப்பரீட்சையொன்றில் தோற்றி தமது புதிய அறிவையும் பிற உன்னத திறன்களையும் வெளிப்படுத்த வேண்டும். அல்லது ஆசிரியத் தொழில் பெறமுடியாது. அத்துடன் தொடர்ந்து தொழிலில் நீடிக்கும் ஆற்றல் இருப்பதை உறுதிப்படுத்துவதற்கும் பதிய தேடல்கள் நிறைந்திருப்பதை வெளிப்படுத்துவதற்கும் பரீட்சைகளில் தோற்றவேண்டுமென வலியுறுத்தப்படுகின்றது.

இத்தகைய தொடர் தகைமையை, குன்றாத ஆற்றலை வலியுறுத்தும் நடைமுறைகள் பின்பற்றப்படாத துறைகளில் அதிக தொழில்வாய்ப்பை தேடும் பட்டதாரிகளின் எண்ணிக்கை கூடிச்செல்கிறது. அரசாங்கம் வினைத்திறன் உயர்ச்சியை வருடாந்தம் அளவிடுகின்ற ஊழியர் கணிப்பீட்டு (Employee appraisal) முறைகளை செறிவானதாக மாற்றுமாயின் பட்டதாரிகளின் பயன்பாட்டு நன்மைகளை அதிகரிக்கமுடியும்.

### தனியார் துறையுள் நுழைவோம்

இலங்கையில் தனியார்துறை வளர்ச்சி யென்பது முதன்மையான தேவையாகி பல்துறைகளிலும் வலிமைபெற்று வருகின்றது. தமது கடினமான உழைப்பு மற்றும் சேமிப்பை தொழில் முதலீடுகளாகவும் பட்டதாரிகளுக்கு தொழில்வாய்ப்பு வழங்கும் செலவுகளாகவும் மாற்றும்தனியார் துறையினர் நட்டம் அடையக்கூடாதுதானே! தொழிலை மூடிவிட்டு வீதியில் நிற்கக்கூடாதல்லவா?

இந்த நிலையில்தான் தாம் பணத்தை உண்மையாக முதலிடுவது போல் பட்டதாரிகளும் அவர்களுக்கு தேவைப்படுகின்ற ஆற்றல்களை அறிவை, உழைப்பை உற்சாகமாகவும் உண்மையாகவும் தொய்வேதுமின்றி வழங்கவேண்டும் என்று எதிர்பார்க்கின்றனர். இது நியாயமான எதிர்பார்ப்பு அல்லவா?

அறிவு மட்டத்தில் உயர்வானவர்களான பட்டதாரிகள் இதனை விளங்கிக்கொண்டும் தம்மை மாற்றிக்கொண்டும் தம்மை வலுப்படுத்திக் கொண்டும் தனியார் துறையில் தொழில்வாய்ப்பைத்தேடவேண்டும். அரச துறையில் தொழில்வாய்ப்பு கூடிச்சென்றாலும் பட்டதாரிகள் அனைவரையும் உள்ளே உறிஞ்சிக்கொள்வதாக ஒருபோதும் வளரா மாட்டாதென்பதை உணர்ந்து கொள்ளுங்கள்.

இலங்கையில் 2011 இல் 7.89 மில்லியன் வேலைவாய்ப்புப் பெற்றவர்களிருந்தனர். வேலைவாய்ப்பற்றவர்கள் 3 இலட்சத்து 40 ஆயிரம் பேராகக் காணப்பட்டனர். இவர்களின் தனியார்துறையில் தான் ஒப்பீட்டு ரீதியில் தொழில்வாய்ப்பு பெருகிவருகின்றது.

தொழில்வாய்ப்பு நிலைமை

| வகை | 2008 | 2011 |
|---|---|---|
| நேரடி அரசதுறையில் | 1,047,041 | 986,386 |
| துணை அரசதுறையில் | 266,543 | 246,091 |
| மொத்த அரச துறையில் | 1,313,584 | 1232,477 |
| வேலையற்றோர் தொகை (2009) | 401,000 | 342,000 |
| க.பொ.த உயர்தரத்துடன் | -- | 5.2% |
| க.பொ.த உயர்தரத்துடன் | -- | 9.0% |

*Source: Central Bank annual Report 2011:p 92*

இதன்படி அரச துறையில் வேலைவாய்ப்புக்களை தொடர்ந்து அதிகரிக்கமுடியாதென்பது வெளிப்படுத்தப்படுகின்றது.

எனினும் கலை மற்றும் வணிக, முகாமை, விஞ்ஞான பட்டதாரிகள் போதிய பாட அறிவைக் கொண்டிருப்பதால் ஆசிரியர்களாக வருவதில் அதிகநாட்டம் கொண்டுள்ளனர். ஒப்பீட்டு ரீதியில் ஆசிரியர்கள் ஏனைய அரச ஊழியர்களைவிடவும் குறைவான வேதனம் பெறுகின்றனர் என்பதை உணர்ந்துகொள்வது மிகவும் அவசியம். இலங்கையின் கூலிச் சுட்டெண் மாற்றங்கள் இதனை தெளிவுபடுத்துகின்றன.

கூலி வீத குறிகாட்டிகள்

| வகை | 2009 | 2011 |
|---|---|---|
| அரச வேலைவாய்ப்புக்கள் | | |
| மத்தியஅரசாங்க ஊழியர் | 4502.8 | 4964.5 |
| நிர்வாகி அல்லாதவர்கள் | 4082.4 | 4490.1 |
| சிற்றூழியர்கள் | 4943.5 | 5465.1 |
| அரச பாடசாலை ஆசிரியர் | 3215.3 | 3576.1 |

*Source: Central Bank annual Report 2011:p 88*

தொழில்வாண்மை கல்வி பெறாதபட்டதாரிகள் ஆசிரியர்களாக வருவதற்கு மாத்திரம் நாட்டம் கொள்ளக்கூடாது. தனியார் துறைகளில் உயர்வேதனங்களுடனும் உயர்ந்த மதிப்புடனும் அதிகூடிய ஊக்கத்துடனும் பணியாற்ற விரும்பவேண்டும். முகாமைத்துவமான பட்டதாரிகளை முகாமையாளர்களாக உள்வாங்குவதில் தனியார்துறை தொழில் வழங்குநர்கள் அதிக திருப்தியுடன் இருக்கவில்லை. அவர்களது பலவீனங்களை பின்வருமாறு சுட்டிக்காட்டுகிறார். சிங்கர் குழுமத்தின் (Singer Group) அப்போதைய (1996) தலைவர் ஹேமகா அமரசூரியா அவர்கள் (Work shop on teaching methodologies in under graduate Course in Commerce and Management 1996:IV-V)

1.விளையாட்டு வீரனைப்போல் உடல் வலுவும் மனதைரியமும் கொண்டு இடை விடாது நீண்டநேரம் பணியாற்றவும் எல்லா வேலைகளையும் செய்வதற்கும் பெரும் பாலான பட்டதாரிகள் தயாராக இல்லை.

2. தற்துணிவுடன் சிலவற்றை செய்யக் கூடிய தலைமைத்துவத்திறன் அநேகரிடம் காணப்படவில்லை.

3. வேறுபட்ட அறிவு, திறன்கள், எதிர்பார்க்கைகள் கொண்ட பலருடன் இணைந்து குழுவாக பணியாற்றக்கூடியதான புரிந்துணர்வும் மற்றவர்கள் எண்ணங்களை அங்கீகரிக்கும் இயல்பும் அதிகம் வளர்க்கப்படவில்லை.

4.தாய்மொழியில் மட்டுமன்றி ஆங்கிலத்திலும் சரளமாக எழுதவும் வாசிக்கவும் கூடிய மொழித்திறன் போதியளவு விருத்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

5.ஒருநாளில் நெருக்கடியான சூழலில் பலமுடிபுகளை நிதானமாக, தொலை நோக்குடன் மேற்கொள்ளும் பயிற்சியும் அனுபவமும் போதியளவில் பட்டதாரிகள் பெற்றிருக்கவில்லை.

6.தொழிலிடத்தில் சமூக நீதியுடனும் நாட்டின் விருத்தி பற்றிய தொலைநோக்குடனும் சிந்திக்கவும் செயற்படவும் கூடியதான மதிநுட்ப மற்றும் விழுமிய துணிவுகள் போதியளவு பட்டதாரிகளிடம் வளர்க்கப்படவில்லை.

ஏறக்குறைய 17 ஆண்டுகளுக்கு முன்பு தெரிவிக்கப்பட்டிருந்த கருத்துக்களாக இருப்பினும் பெரும்பாலான பட்டதாரிகளிடம் இத்தகைய தேர்ச்சிகள் இன்றும் வளராதபடியினாலேயே தனியார் துறையில் வேலை தேடுவதற்கு இப்போதும் அச்சமடைகின்றனர்.

பட்டதாரிகளே இத்தகைய எதிர்பார்க்கைகளை விளங்கிக்கொண்டு உங்களை வளர்த்துக்கொள்ளுங்கள். பாடசாலைகளில் இடைவிலகியவர்கள் பட்டதாரிகளுக்கு தொழில் வாய்ப்பு வழங்கும் நிலைமை மாறவேண்டும். இதற்கு மாறாக ஆயிரக்கணக்கான பல்துறைப்பட்டதாரிகளுக்கும் க.பொ.த. (உயர்தரம்/ சாதாரணம்) தகுதியுடையோர்க்கும் இடைவிலகியோருக்கும் தொழில்வாய்ப்பு வழங்கக்கூடிய பெரிய தொழிற்றுறைகளை நீங்கள் கூட்டாக இணைந்து உருவாக்க வேண்டும். கிடைக்கின்ற உட்கட்டமைப்பு, வங்கி, காப்புறுதி, தொழிற்பயிற்சி, மதிநுட்ப ஆலோசனைகள் என்பவற்றைப் பயன்படுத்திக் கொண்டு பலர் ஒன்றிணைந்து பெரிய தொழில் நிறுவனங்களை ஏன் உருவாக்கக்கூடாது? ஆயிரக்கணக்கானவர்கள் வேலைவாய்ப்புக்காக உங்கள் பின்னால் நடந்து வருவதற்கான வழிகாட்டிகளாக மாறுங்கள். மாறுவீர்களா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்த வினையும் செய்கின்ற தீ வினையும் ஓர் எதிரொலியைக் காட்டாமல் மறைய மாட்டாது.
-கண்ணதாசன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## சூர்ப்பனகை இராமனைக் கண்டதும்... சனல் 4 ஆவணப் படம் வெளியிட்டதும்...

இராவண வதம் நடந்தேற வேண்டும் என்பதற்கான கருக்கட்டல் இலங்கையில் நடக்கவில்லை. மாறாக அது அயோத்தியில் நடைபெறுகின்றது.

தசரத மகாராஜன் முனிபுங்கவரின் மகனை அம்பெய்திக் கொல்வதில் ஆரம்பிக்கும் இக் கருக்கட்டல் கூனியின் முதுகில் இராமன் மண் உருண்டையால் எறிவதில் வளர்ச்சி காண்கின்றது.

இவை அனைத்துக்கும் இடையில் பல்வேறு நிகழ்வுகள் நடந்தேறினவாயினும் அயோத்தியில் நடந்த கருக்கட்டலின் குறிக்கோள் இராவணனை முடிபுக்கு கொண்டுவருவதேயாகும்.

இராவணனை முடிபுறுத்த வேண்டும் என்றால் இராமன் காடு செல்ல வேண்டும். இராமன் காடு செல்லும்போது சீதையும் உடன் சென்றால்தான் காரியத்தைக் கனகச்சிதமாக முடிக்க முடியும்.

இவை நடந்தேறிவிட்டால் அடுத்து இருக்கக்கூடிய வழி சூர்ப்பனகை இராமனைக் சந்திப்பதாகும்.

கம்பர் தனது இராமாயணத்தை ஆறு காண்டங்களாக காட்டி நின்ற போதிலும் சூர்ப்பனகை இராமனைக் கண்ட இடத்திலேயே இராவணனின் சேனைக்கு அழிவு ஏற்படுகிறது எனக் கூறுகிறார்.

"...மேலைநாள் அண்டசத்து அருந்துயில் துறந்த ஐயனைக் கண்டனள் தன் கிளைக்கு இறுதி காணுவாள்" என்ற கம்பன் கூறுவதற்குள் இராமாயணத்தில் முழுச் சரித்திரமும் காரண காரியமும் அடங்கிவிடுகின்றது.

இங்கு இராவணனின் அழிவுக்கு தசரதன், முனிபுங்கவரின் மகனைக் கொன்றதே காரணம் என்றோ,

இராமன் கூனியின் முதுகில் மண் உருண்டையை எறிந்ததே காரணம் என்றோ வாதிடுதல் முறையன்று. இராவணன் அழிய வேண்டும் என்பதே நியதி.

இந்த நியதிக்காக செயற்றிட்டங்களை வல்லவன் வகுத்தான். இந்த திட்டமிடலில் சூர்ப்பனகை இராமனைச் சந்தித்தமை இராவணன் அழிவுக்கு நேரடிக் காரணம் என்ற காட்சி கொடுக்கின்றது அவ்வளவுதான்.

இதுபோன்றுதான் இலங்கையின் நிலைமையும். பாலச்சந்திரனைக் கொலை செய்யாமல் இருந்தால், இலங்கைக்கு இந்நிலைமை வந்திருக்காது என்று வாதிடுவோர் இருப்பர்.

ஆனால் பாலச்சந்திரனைக் கொல் என்ற முடிபு யாருடைய சிந்தனையில் உதித்ததோ, அந்தச் செயலாக்கத்தை படம் பிடித்தால் நல்லது என்று யார் நினைத்தனரோ அவைகள் எல்லாம் இலங்கையை ஜெனிவாவில் நிறுத்துவதற்குக் காரணமாயினும்,

சனல் 4 தொலைக்காட்சி இருக்கிறதே அது இலங்கையில் நடந்த போர்க்குற்ற ஆவணங்கள் என்ற காட்சிப்படுத்தலை தயாரித்து வெளியிட்டமை இருக்கிறதல்லவா? இதுதான் சூர்ப்பனகை இராமனைக் கண்ட இடம் போன்றது.

ஆம், விதி நடந்தேற வேண்டும் என்றால் அதை வகுத்தவன்தானே கமராவுடன் வந்து படம் பிடிப்பான்.

இப்போது ஜெனிவாதான் சூர்ப்பனகையும் இராமனும் சந்திக்கின்ற இடத்துக்கு ஒப்பானது.

இனி பொறுத்திருந்து பார்க்கலாம் என்ன நடக்கும் என்று.

## வவுனியா இரு குறுக்கு வீதிகளை புனரமைக்கக் கோரிக்கை

வவுனியா முதலாம், இரண்டாம் குறுக்குத்தெரு வீதியின் ஊடாக பயணிப்பதில் மக்கள் சிரமங்களை எதிர்கொள்வதாக தெரிவிக்கப்படுகிறது. வவுனியா நகரசபைக்கு உட்பட்ட முதலாம், இரண்டாம் குறுக்குத்தெரு வீதியின் ஊடாக பய ணம் செல்லும் பயணிகள் தமது அன்றாட பயணத்தின் போது பெரும் அவலங்களையும் விபத்துக்களையும் சந்திக்க நேரிடுவதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

மேற்படி வீதிகளினாலே பாடசாலை மாணவர்கள் சென்று வருகின்றனர். அதனால் பல சிரமத்தை எதிர் நோக்குகின்றனர் தனியார் நிறுவனங்கள் தனியார் வங்கிகள், பல கடைகள், தனியார் பேருந்து தரிப்பிடம் ஆகியவை காணப்படுகின்றன.

பேருந்துகள் கடைகளுக்கு முன்னாள் தரித்து நிற்பதால் தமது வியாபாரம் பாதிக்கப்படுவதாக வியாபாரிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இதேவேளை தனியார் பேருந்து தரிப்பிடத்திற்கு காணி ஒன்று ஒதுக்கப்பட்டு ஆரம்ப வேலைகள் நடைபெற்று வந்தன. பின்னர் அத்திருத்த வேலைகள் கைவிடப்பட்டுள்ளன.

இது தொடர்பாக தனியார் பேருந்து சங்கத் தலைவரிடம் வினவியபோது இதனை ஆரம்பித்து வைத்த திட்டமிட்ட அதிகாரிகளை கேட்க வேண்டும் என கூறியுள்ளார். (அ-2,250)

## தொழில் திறன் பயிற்சிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

(பூந்தோட்டம்)

வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிமனையின் முறைசாராக்கல்வி பிரிவினால் நடத்தப்படும் தொழில் திறன் பயிற்சிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி அன்ரன் சோமராஜா தெரிவித்துள்ளார்.

இப் பயிற்சிக்கு பாடசாலையை விட்டு விலகிய இளைஞர் யுவதிகளை எதிர்கால வேலை உலகிற்கு தயார் செய்வதற்கான தொழிற் பயிற்சிகளை வழங்கும் நோக்கோடு விண்ணப்பங்கள் கோரப்படுவதாக அவர் குறிப்பிட்டார். இதற்கு 16 வயது தொடக்கம் 29 வயதுக்கிடைப்பட்ட பாடசாலையை விட்டு விலகிய ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பயிற்சி நெறிகளில் 6 மாத பயிற்சிகளாக உலோக ஒட்டுநர், வாயு சீராக்கி, குளிரூட்டி திருத்துநர், தொழிலக தையல், வீட்டு மின் இணைப்பு பயிற்சி களும் 3 மாத கால நெறிகளாக கேக் ஐசிங், மணப்பெண் அலங்காரம், சேலை, கம்பளி நூல் அலங்காரம், கணினிப் பயிற்சியும் 4 மாத கால பயிற்சி நெறி யாக தோல் பொருள் உற்பத்தியும் கற்பிக்கப் படவுள்ளது.

பயிற்சியை நிறைவு செய்வோருக்கு அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் களும் வழங்கப்படவுள்ளது. எனவே விண்ணப்பதாரர்கள் வலயக் கல்விப் பணிமனையுடன் காலம் தாழ்த்தாது தொடர்பு கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (அ-2-266)

## சத்திய தரிசனம்



இறைவனுக்கென்று வடிவம் கிடையாது. அவர் அணுவை விடச் சிறியவர். ஆகாயத்தை விடவும் இலேசானவர். அப்படிப்பட்டவருக்கு எவ்வாறு உன்னால் உருவத்தைத் தரமுடியும்? இவ்வுலகம் முழுவதும் அவர் நிறைந்திருக்கிறார். ஆனால் அவர் எதனோடும் தன்னைப் பந்தப்படுத்திக்கொள்ளவில்லை. பிரஹ்மன் இறைவன் உன்னுள் இருக்கிறார். நீ பிரஹ்மனுள் இருக்கிறாய். இத்தகைய ஏகாத்ம தத்துவத்திலும்கூட நாம் இரட்டை நிலையையே ஆதாரமாகக்கொண்டு நினைப்பதால் நமக்குத் தொல்லைகள்தான் மிஞ்சுகின்றன. இறைவனுக்கென்று எந்தவொரு குறிப்பிட்ட வடிவமும் இல்லையென்றாலும் எல்லா வடிவமும் அவருடையதே.

## நுண்கடன் திட்டம் கையேடு வெளியீடு

இலங்கை செஞ்சிலுவைச்சங்கத்தின் வவுனியா கிளையினால் மேற்கொள்ளப்பட்டுவரும் நுண்கடன் திட்டத்தின் வெற்றித்தன்மைகள் குறித்த கையேடு வெளியீட்டு நிகழ்வு இன்று வியாழக்கிழமை இந்திரன்ஸ் விடுதியில் காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ளது. இந்நிகழ்விற்கு தலைமை அலுவலக செயற்பாட்டாளர்கள் மற்றும் பயனாளிகள் உட்பட பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் அனுசரணையுடன் இடம்பெறவுள்ளதாக சங்கத்தின் பொருளாளர் க. தனபாலசிங்கம் தெரிவித்தார். (அ-2,266)

## 73 ஆவது ஆண்டு அவதார தினம்

அல்வாய் கிளானை மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி பீட, அம்மாவின் 73 ஆவது ஆண்டு அவதாரத் திருவிழா எதிர்வரும் மார்ச் மாதம் 2 ஆம் திகதி சனிக்கிழமை சக்திக்கொடி ஏற்றுதலுடன் ஆரம்பித்து மறுநாள் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 7 மணிக்கு சிறப்பு அபிஷேகமும் தொடர்ந்து 8 மணிக்கு பாதபூசையும் 9 மணிக்கு மக்கள் நலன்வேண்டி கலச விளக்கு யாக பூசையும் இடம் பெறும் என அம்மா நிர்வாகம் தெரிவித்துள்ளது. (அ-5)

## நிர்வாகிகள் தெரிவு


புலோலி தென்மேற்கு கந்தமுருகேசனார் சனசமூக நிலைய புதிய நிர்வாகத் தெரிவு அண்மையில் நடைபெற்றது. இதில் நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட் டுள்ளனர்.

தலைவராக சி.தில்லைநாதன், உப தலைவராக பா.இரகுநாதன், செயலாளராக மு.ஜெக நாதன், உபசெயலாளராக திருமதி சரஸ்வதி தியாகராஜன், பொருளாளராக திருமதி நாகேஸ்வரி நேசலிங்கம் மற்றும் உறுப்பினர்களாக சி.பரராசசிங்கம், ச.இராசேந்திரம், ஆ.செல்வராசா, திருமதி பரமேஸ்வரி செல்லத்துரை, திருமதி யோகம்மா ஜெயக்குமார், திருமதி ரேணுகா ஸ்ரீதாஸ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (அ-10)

## சிறுபோகம் குறித்து கலந்துரையாடல்

இவ் ஆண்டுக்கான சிறுபோக நெற் செய்கை தொடர்பான கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு புளியம்பொக்கணை கமநல சேவை நிலையத்தில் நடைபெறும். (அ-3-263)

## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்



## துளசி இலையை காதுக்குப் பின் வைப்பது ஏன்?

காதுக்குப் பின் துளசிக்கதிர் அல்லது இலை சூடுவதற்கு இக்காலத்தில் யாரும் தயாராகமாட்டார்கள். அப்படி சூடுபவர்களை காதில் பூ வைத்தவன் என்று ஏளனமாகக் கூறுவதுண்டு.

ஆனால் காதுக்குப்பின் துளசி வைப்பதனால் பெரும் பயனடைந்தனர் பண்டைய மக்கள். மனித உடலில் மிகக்கூடுதல் உறிஞ்சும் சக்தியுடையது காதுக்குப் பின்புறம் ஆகும் என்பது விஞ்ஞானம் நிரூபித்திருக்கின்றது. துளசியின் மருத்துவக்குணங்களை நாம் நன்கறிவோம். இந்த மருத்துவக்குணங்கள் காதுக்குப் பின்னுள்ள சருமவழியாக ஊடுருவிச் செல்லும். இதுவே பழங்காலத்து மக்கள் காதுக்குப்பின் துளசியைச்சூடி வந்ததும் பின் சந்ததிக்குஅதைக்கற்பித்ததும்.

பழங்காலத்திலுள்ள வீடுகளில் துளசிமாடம் கட்டி துளசியை ஓர் புனிதச் செடியாகப் பராமரித்து வந்தனர்.

சூரிய ஒளி கிடைக்கும் இடத்தில் கிழக்குப் பக்கத்து வாசலுக்கு நேராக துளசிமாடம் கட்டவேண்டும் என்று ஆசாரியார் போதித்துள்ளனர். வீட்டின் தரையை விட தாழ்ந்த மட்டத்திலாகாமல் குறிப்பிட்டளவில் துளசித்தரை அமைக்கவேண்டும். துளசித்தரையில் நடுவதற்காக கிருஷ்ணதுளசி தேர்ந்தெடுக்கவேண்டும் என்று விதிக்கப்பட்டுள்ளது. துளசிச் செடிக்குப் பக்கம் அசுத்தமாகச் செல்வதாகாது. ஜெபம் செய்து கொண்டே அதன் பக்கம் செல்லவேண்டும். துளசியை தினமும் மூன்றுவேளை வலம் வரவேண்டும். வலம்வரும்போது,

பிரசீத துளசிதேவி
பிரசீத ஹரி வல்லபே
க்ஷீரோதமத நோத்புதே
துளசி த்வாம் நமாம்யகம்

என்ற மந்திரம் சொல்லவேண்டும். துளசிப்பூ பறிக்கும்போது,

துளஸ்வமுத சம்பூதா
சதா த்வம் கேசவப்ரியே
கேச வார்த்தம் லுனமி த்வாம்
வரதா பவ சோபனே

மாலைநேரமும் ஏகாதசிக்கும் செவ்வாய், வெள்ளி நாட்களிலும் துளசிப்பூ பறிக்கலாகாது என்றும் விதியுண்டு. பூஜைக்கல்லாமல் துளசிப்பூ பறிக்கவும் கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவுக்கு அடுத்து வரும் போட்டிகளில் பதிலடி - கிளார்க்



அடுத்த போட்டிகளில் இந்தியாவுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் எமது ஆட்டங்கள் அமையும் எனக் கூறியுள்ளார் அவுஸ்திரேலிய அணித் தலைவர் மைக்கல் கிளார்க்.

முதல் டெஸ்ட் போட்டி தோல்வி குறித்து அவர் கருத்துத் தெரிவிக்கையில், இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாங்கள் செய்த சில தவறுகள் காரணமாகவும், இந்திய பந்துவீச்சாளர்கள் திறமையின் காரணமாகவும் தோல்வி ஏற்பட்டு விட்டது. இந்த தோல்விக்கு காரணம் என்ன? எங்கள் தரப்பில் என்னென்ன தவறுகள் செய்தோம் என்பதை பற்றி ஆய்வு செய்வோம். அடுத்த போட்டியில் இந்த தவறுகளை களைந்து சிறப்பாக ஆடுவோம்.

எங்கள் அணியில் திறமையான வீரர்கள் பலர் உள்ளனர். அவர்கள் தங்கள் முழு திறமையை வெளிக்கொண்டுவந்து ஆடினாலே இந்தியாவை வெற்றி பெறலாம். எனவே அடுத்த போட்டிகளில் இந்தியாவுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் எங்கள் ஆட்டம் இருக்கும்.

சென்னை போட்டியில் எங்களது பந்து வீச்சை குறை சொல்ல முடியாது. ஆனால் துடுப்பாட்டம் சரியில்லை. இந்த குறைகள் அடுத்த போட்டியில் சரிசெய்யப்படும் இவ்வாறு கூறியுள்ளார் அவுஸ்திரேலிய அணித் தலைவர் மைக்கல் கிளார்க்.



சென்னை சேப்பாக்கம் டெஸ்ட் வெற்றியை இந்திய வீரர்கள் நட்சத்திர ஹொட்டல் ஒன்றில் கேக் வெட்டிக் கொண்டாடி மகிழ்ந்தபோது.....

# கடுமையான விமர்சனங்களைக் கண்டுகொள்ளவில்லை - தோனி

கடுமையான விமர்சனங்கள் எழுந்தபோதும் அதை கண்டுகொள்ளாமல் தவிர்த்ததாலேயே சிறப்பாக விளையாட முடிந்தது என்று தெரிவித்தார் இந்திய அணித் தலைவர். வெற்றிக்குப் பின் அவர் கருத்து வெளியிடுகையில்,

நான் என்னுடைய வேலையை மட்டுமே சிறப்பாக செய்ய முயற்சித்தேன். விளையாட்டு தொடர்பான ரி.வி. செய்திகளையோ, பத்திரிகை செய்திகளையோ பார்ப்பதில்லை. அதுதான் நான் விமர்சனத்துக்குள் சிக்காமல் சிறப்பாக விளையாட உதவியது.

என் மீது விமர்சனங்கள் பாய்ந்தபோதும் என்னுடைய ஆட்ட முறை மாறவில்லை. அவுஸ்திரேலியாவுக்கு எதிரான இந்த வெற்றிக்குரிய அனைத்து பாராட்டுகளும் 3, 4, 5 ஆவது வரிசையில் களமிறங்கிய துடுப்பாட்ட வீரர்களையே சேரும். சச்சின் சதமடிக்காவிட்டாலும், புஜாரா அரைசதமடிக்காத போதிலும் நீண்ட நேரம் களத்தில் நின்றனர். சென்னையில் வீசும் அதிக ஈரப்பதம் கொண்ட காற்று அவுஸ்திரேலிய பந்துவீச்சாளர்களை சோர்வடைய வைத்துவிட்டது என்றார்.

# சச்சினுக்காக குவிந்த ரசிகர்கள்

இந்திய அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் சேப்பாக்கத்தில் 10 டெஸ்டுகளில் விளையாடி ஐந்து சதம் அடித்துள்ளார்.

ஒருநாள் போட்டியில் இருந்து ஓய்வு பெற்ற பின் அவர் சேப்பாக்கத்தில் நடந்த டெஸ்டில் தான் விளையாடியுள்ளார். சச்சினுக்கு எப்போதுமே சென்னையில் அதிகமான ரசிகர்கள் உண்டு. இதனால் அவரின் ஆட்டத்தைக் காணும் ஆவலுடன் ரசிகர்கள் குவிந்திருந்தனர்.

3 ஆவது நாளான ஞாயிற்றுக்கிழமை ஆட்டத்தில் சச்சின் சதம் அடிப்பார் என்றே ரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்த்து குவிந்திருந்தனர். ஆனால் அவர் 81 ஓட்டங்களுடன் ஆட்டம் இழந்து ரசிகர்களின் ஆவலை குலைத்துவிட்டார்.


இரண்டாவது இன்னிங்ஸில் வெற்றிக்கான 50 ஓட்டங்களை தொடக்க வீரர்களான முரளி விஜய்யும், ஷேவாக்கும் எடுத்து விடுவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இந்த ஓட்டங்களை தொடுவதற்கு முன் இருவரும் ஆட்டம் இழந்தனர். 2ஆவது விக்கெட்டில் ஷேவாக் ஆட்டம் இழந்தபோது ரசிகர்கள் உற்சாகத்தில் ஆரவாரம் செய்தனர்.

ஏனென்றால் அடுத்து சச்சின் களம் இறங்குவார் என்ற உற்சாகத்தில் ஆரவாரம் செய்தனர். வெற்றிக்கு 14 ஓட்டங்கள் தேவைப்பட்ட அடுத்தடுத்து இரு சிக்சர்களை அடித்து ரசிகர்களை ஆரவாரத் தில் மிதக்கவிட்டார். சேப்பாக்கம் போட்டி சச்சினின் கடைசி டெஸ்ட்டாக இருக்கலாம் என்பதால் எப்போதும் இல்லாத அளவுக்கு ரசிகர்களின் [illegible]வு மிகவும் அமோகமாக இருந்தது என்பது



## தைரியமாக இருங்கள்;

# ஆஸி.வீரர்களுக்கு 'சேலைன்' ஏற்றுகிறார் ஷேன் வோர்ன்!



அவுஸ்திரேலிய அணித் தலைவர் கிளார்க் மற்றும் வீரர்களை சந்தித்து, 'தைரியமாக இருங்கள்' என வார்த்தைகளால் 'சேலைன்' ஏற்றியுள்ளார் ஓய்வு பெற்ற அவுஸ்திரேலிய அணியின் சுழற்பந்து வீச்சாளர் ஷேன் வோர்ன்.

அவுஸ்திரேலிய கிரிக்கெட் நிர்வாகிகள், தேர்வாளர்களை கடந்த மாதம் கடுமையாக தாக்கி விமர்சித்திருந்தார் வோர்ன். இப்போது, இந்திய தொடரில் எல்லாம் மறந்து, அவர்களை உற்சாகப்படுத்தும் விதத்தில் கருத்து வெளியிட்டுள்ளார்.

சேப்பாக்கம் மைதானத்தில் பயிற்சியாளர் மிக்கி ஆர்தர், பந்து வீச்சுப் பயிற்சியாளர் ஸ்டீவ் ரிக்சன், அணித் தலைவர் கிளார்க், சுழற்பந்து வீச்சாளர்கள் லியான் மற்றும் தோகர்டியுடன் நீண்ட ஆலோசனையில் ஈடுபட்டார். அப்போது வீரர்களை உற்சாகப்படுத்தும் விதத்தில் பேசியதாக தெரிகிறது.

எதிர்வரும் மார்ச் 2ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள இரண்டாவது டெஸ்டிலும், சுழற்பந்து வீச்சு தான் முக்கிய பங்கு வகிக்கும் என்று எதிர்பார்க்கப்படும் என்ற நிலையில், இவரது ஆலோசனை முக்கியத்துவம் பெற்றுள்ளது. இதுகுறித்து எவ்வித கருத்தும் தெரிவிக்க, மறுத்துவிட்டார் ஷேன் வோர்ன்.

வேறு சுழற்பந்து வீச்சாளர்களை கொண்டு வரப் போகிறீர்களா என்ற ஊடகவியலாளரின் கேள்விக்கு அணித் தலைவர் கிளார்க் பதில் கூறுகையில், விரைவில் அவுஸ்திரேலியாவில் இருந்து அனைவரையும் இங்கு அழைத்து வருவோம். வோர்ன் கூட இந்தியாவில் தான் உள்ளார். அவர் சரி என்றால் அணியில் சேர்க்கலாம் என நகைச்சுவையாக கூறினார்.

# வேட்பு மனுதாக்கல் செய்தார் சுமதிபால

இலங்கைக் கிரிக்கெட் சபைத் தலைவர் பதவிக்கான வேட்புமனுவை முன்னாள் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திலங்க சுமதிபால நேற்று தாக்கல் செய்தார்.

தன்னுடைய குழு மிகவும் தன்னம்பிக்கையுடன் காணப்படுவதாகத் தெரிவித்த திலங்க சுமதிபால, இலங்கைக் கிரிக்கெட்டின் நன்மைக்காகத் தங்களது திட்டங்களைச் செயற்படுத்த எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

திலங்க சுமதிபால தலைவராகவும், மொஹான் டீ சில்வா, ஷமில் டீ சில்வா ஆகியோர் உப தலைவர்களாகவும், ஈஸ்றமான் நரங்கொடபோர் பொருளாளராகவும், ஏன்வின் ஜெயவர்தன உப பொருளாளராகவும் திலங்க சுமதிபாலவின் வேட்புமனுக்களில் போட்டியிடவுள்ளனர்.



இலங்கைக் கிரிக்கெட் சபையின் தலைவராக 1997-1998, 2000-2001, 2003-2004 காலப்பகுதிகளில் பதவி வகித்த திலங்க சுமதிபால, இலங்கை நாடாளுமன்றத்தின் ஆளுங் கட்சியின் கொழும்பைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் என்பதோடு, சுமதி குரூப் என்ற நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளராகவும் உள்ளார்..

# 3 ஆவது போட்டியிலும் தோற்றது சிம்பாவே




சிம்பாப்வே அணிக்கும் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்குமிடையிலான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் போட்டித் தொடரின் மூன்றாவதும் இறுதியுமான போட்டியிலும் மேற்கிந்தியத் தீவுகள் அணி வெற்றிபெற்றுள்ளது.

கிரெனடா, தேசியக் கிரிக்கெட் மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற சிம்பாப்வே அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே அணி 50 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 211 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் சிம்பாப்வே அணி சார்பாக சமு சிபாபா 62 பந்துகளில் 48 ஓட்டங்களையும் வியூசி சிபன்டா 60 பந்துகளில் 41 ஓட்டங்களையும் பிரென்டன் ரெய்லர் 38 பந்துகளில் 39 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் மேற்கிந்தியத்தீவுகள் அணி சார்பாக வீரசம்மி பேர்மாள் 3 விக்கெட்டுக்களையும் ரீனோ பெஸ்ட், டுவைன் பிராவோ ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் சுனில் நரைன் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

215 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி 46.2 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

ஒரு கட்டத்தில் 4 விக்கெட்டுக்களை இழந்து 121 ஓட்டங்களையும் 5 விக்கெட்டுக்களை இழந்து 167 ஓட்டங்களையும் பெற்று அவ்வணி தடுமாறியபோதிலும் டெரன் பிராவோ, டினேஷ் ராம்டினின் சிறப்பான ஆட்டத்தால் மேற்கிந்தியத்தீவுகள் அணி வெற்றிபெற்றது.


துடுப்பாட்டத்தில் மேற்கிந்தியத்தீவுகள் அணி சார்பாக டெரன் பிராவோ 103 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 72 ஓட்டங்களையும் கெரன் பவல் 52 பந்துகளில் 42 ஓட்டங்களையும் டுவைன் பிராவோ 23 பந்துகளில் 25 ஓட்டங்களையும் டினேஷ் ராம்டின் 26 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 24 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் மேற்கிந்தியத்தீவுகள் அணி சார்பாக ரினோரெண்டா முற்றொம்போட்ஷி விக்கெட்டுக்களையும் கைல் ஜார்விஸ், ஹமில்ற்றன் மஸகட்ஸா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இப்போட்டியின் நாயகனாகவும் போட்டித் தொடரின் நாயகனாகவும் டெரன் பிராவோ தெரிவானார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணிக்கராஜாவுக்கு பதவி உயர்வு



(யாழ்ப்பாணம்)

நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.மாணிக்கராஜா இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

திறமை மற்றும் சேவை மூப்பின் அடிப்படையில் இப்பதவி உயர்வு அவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

2011-ம் ஆண்டு யூன் மாதம் முதல் செயற்படும் படியாக இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு நல்லூர் கோட்ட கல்விப் பணிப்பாளர் எஸ்.மாணிக்கராஜா பதவி உயர்த்தப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ந)

## விஜயகாந்த் மீது...

பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, தஞ்சாவூர் நீதிமன்றத்துக்கு நேற்று புதன் கிழமை விஜயகாந்த் சென்றிருந்தார். இதன் போது அங்கு கூடியிருந்த பெருமளவான தே.மு.தி.க தொண்டர்கள் விஜயகாந்தை சூழ்ந்து கொண்டனர்.

இந்நிலையில் அவர்களை விலக்கிக்கொண்டிருந்தார் அவரது கட்சி சட்டமன்ற உறுப்பினர் ஒருவர். அப்போது சில தொண்டர்களை அடிக்கவும் தொடங்கினார் அவர். தொண்டர்களை அடித்துக்கொண்டிருந்த அந்த எம்.எல்.ஏ., எதிர்பாராத வகையில் விஜயகாந்த் தலையிலும் ஓங்கி ஒரு அடி அடித்தார். ஒரு அடி என்றாலும் மிகவும் பலமான அடியாக இருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனைச் சற்றும் எதிர்பாராத நிலையில் அடி வாங்கிய விஜயகாந்த் ஒன்றுமே பேசாமல் அமைதியாக இருங்க என மட்டும் கூறியுள்ளார். (எ-11)

## இந்திய மாநிலங்களவை...

மூடப்பட்டதாக இலங்கை அரசு, இந்தியாவிடம் தகவல் அளித்துள்ளதாகக் கூறினார்.

அதுமட்டுமன்றி இலங்கையில் இடம்பெயர்ந்த தமிழர்கள் குடியமர்த்தப்பட வேண்டும். இலங்கையில் தமிழர்களின் வாழ்வாதாரம் உறுதி செய்யப்பட வேண்டும் என்றும் இந்தியா விரும்புகின்றது என சல்மான் குர்ஷித் விளக்கம் அளித்தார்.

அதனைத்தொடர்ந்து தீர்மானத்தை கொண்டுவந்த அதிமுக எம்.பி மைத்ரேயன் பேசுகையில்;

இலங்கை பிரச்சினைக்கான மூல காரணத்தை ஏற்க ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு மறுக்கிறது. இலங்கைப் பிரச்சினைக்கு விடுதலைப்புலிகள் காரணம் இல்லை. தமிழர்கள் ஒடுக்கப்பட்டதாலேயே விடுதலைப் புலிகள் இயக்கம் தோன்றியது.

இலங்கைத் தமிழர்களின் போராட்டம் ஒரு முழுச் சுற்று வந்து முடிந்துள்ளது. 1948 முதல் 1983 வரை அகிம்சை வழியில் இலங்கைத் தமிழர்கள் போராடி வந்தனர். அதன் பின் தொடங்கிய ஆயுதப் போராட்டம் 2009 மே மாதத்துடன் முடிபுக்கு வந்தது.

இலங்கை புரிந்த போர் குற்றத்தில் குழந்தைகள் கொல்லப்படுதல்; தமிழர்கள் காணாமல்போதல் மற்றும் படுகொலைகள் நடந்தன. இலங்கை புரிந்த போர்க்குற்றத்தில் 40 ஆயிரம் அப்பாவி தமிழர்கள் கொல்லப்பட்டனர். பல தமிழ் பெண்கள் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டனர் என்றார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் ராஜா பேசுகையில்,

போர்க் குற்றம் புரிந்துள்ள இலங்கையை இந்தியா கடுமையாக கண்டிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். அவரைத் தொடர்ந்து திமுக எம்.பி திருச்சி சிவா விவாதத்தில் பங்கேற்று பேசினார்.

தொடர்ந்து பாரதிய ஜனதா தலைவர் வெங்கையா நாயுடு பேசினார். அவர் பேசுகையில், இலங்கையில் செல்வாக்கைச் செலுத்த இந்தியாவிற்கு அனைத்து உரிமையும் உள்ளது என்றார்.

இலங்கைக்கு எதிராக ஐ.நா மனித உரிமை ஆணையத்தில் கொண்டு வரப்பட உள்ள தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க வேண்டும் என்று வலியுறுத்தி நாயுடு, பிரபாகரன் மகன் பாலச்சந்திரனை இலங்கை இராணுவம் பிடித்து வைத்துக் கொன்றது மன்னிக்கமுடியாத செயல் என்றும் அவர் கூறினார். மேலும் புலிகளை காரணம் காட்டி இலங்கை அரசின் செயலை நியாயப்படுத்த முடியாது என்றும் அவர் கூறினார்.

வெற்று வாக்குறுதிகளால் இலங்கை தமிழர்களுக்கு எந்த பயனும் இல்லை என்றும் நாயுடு தெரிவித்தார். (எ-11)

## இந்தியாவின் எதிரி நாடாக...

இந்தியா ஆதரிக்க வேண்டும் என்கிற கோரிக்கையை இந்த உறுப்பினர்கள் வலியுறுத்தினார்கள்.

இவர்களின் இந்த கோரிக்கைகள், விமர்சனங்களுக்கு பதிலளித்த வெளியுறவு அமைச்சர் சல்மான் குர்ஷித், இலங்கையில் நடந்த விடயங்களுக்கான பொறுப்பு கூறல் நடக்கவேண்டும் என்பதைவலியுறுத்தும் அதே வேளை இந்த பொறுப்புக்கூறல் என்பது ஒரு நாட்டிற்கு உள்ளிருந்தே வருவது தான் சரியானது என்பது எனது கருத்து.

அது தான் எதிர்பார்க்கும் பலன் தரும் என் பது எனது நம்பிக்கை. இந்த மாதிரியான அணுகுமுறைதான் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு மட்டு மல்ல, மற்ற தரப்பாலும் ஏற்றுக்கொள்ளப்படுவதாக இருக்கும் என்றார்.

ஐ.நாவில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டுவரவிருக்கும் தீர்மானத்தை இந்தியா ஆதரிக்கும் என்பதை அறிவிக்க வேண்டும் என்று உறுப்பினர்கள் வைத்த கோரிக்கை குறித்து பதிலளித்த சல்மான் குர்ஷித், இந்த முறை நாம் எடுக்கவிருக்கும் இறுதி முடிபு என்ன என்று நான் இப்போதே அறிவிக்க முடியாது.

நான் உங்களுக்கு இப்போது சொல்வது என்னவென்றால் இந்த தீர்மானத்தைக் கொண்டுவரும் நாடுகள் இலங்கை அரசுடன் பேசிய பிறகு இலங்கை அரசில் முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதாக இலங்கை அரசு மற்ற நாடுகளை ஒப்புக் கொள்ளச் செய்யுமானால் நாங்கள் ஒருவிதமான முடிபுக்கு வருவோம். மாறாக இலங்கையில் நிலைமைகள் முன்னேறவில்லை என்கிற முடிபு எட்டப்படுமானால் நாங்கள் வேறுவிதமான முடிபுக்கு வருவோம் என்பதை மட்டும் உங்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கின்றேன் என்றார்.

இந்திய- இலங்கை உடன்படிக்கையின் அடிப்படையில் உருவான இலங்கையின் 13-வது அரசியல் சட்டத்திருத்தத்தை ரத்து செய்ய வேண்டும் என்று ஜனாதிபதி மகிந்தவின் சகோதரரே பகிரங்கமாக கூறியிருப்பது குறித்து இந்திய அரசின் நிலைப்பாடு என்ன என்கின்ற கேள்விக்கு பதிலளித்த அமைச்சர் குர்ஷித்,

இலங்கை அரசானது 13-வது அரசியல் சட்ட திருத்தத்திற்கு அதிகமாகச் சென்று செயலாற்ற வேண்டும் என்பதுதான்இந்தியாவின் நிலை. அதைத்தொடர்ந்தும் வலியுறுத்துவோம். 13-வது அரசியல் சட்ட திருத்தத்தை ரத்துச்செய்ய வேண்டும் என்று இலங்கையில் கோரிக்கைகள் வெளிப்படுவது குறித்து இலங்கை அரசிடம் நாங்கள் பேசிய போது அந்த விவாதங்கள் ஜனநாயக நாட்டில் வெளிப்படும் பல தரப்புக் கருத்துக்களின் ஒரு பகுதியே தவிர, அது அரசின் இறுதியான கொள்கை முடிபல்ல என்று எங்களுக்குச் சொல்லப்பட்டது என்றார்.

சர்வதேச ராஜிய அரசியலில் அனுமதிக்கப்பட்ட வரையறைக்குட்பட்டு, நாடுகளின் இறையாண்மையை மதிக்கும் விதத்தில் இலங்கை அரசுக்கு எவ்வளவு அழுத்தம் கொடுக்க முடியுமோ அவ்வளவு அழுத்தங்களை இந்தியா கொடுக்கும் என்று கூறிய சல்மான் குர்ஷித், இலங்கையுடன் இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு கடும் கருத்து வேறுபாடுகள், மனக்குறைகள் கடும் விமர்சனங்கள் இருந்தாலும் இலங்கை யை இந்தியாவின் எதிரி நாடு என்று தம்மால் கருத முடியாது. அப்படி கூறமுடியாது என்றும் அறிவித்தார். (எ-11)

## இலங்கைக்கு எதிரான...

வாழ்வு மற்றும் நல்லிணக்கம் தொடர்பில் இலங்கை மிகவும் வெற்றிகரமாக செயற்பட்டு வருகின்றநிலையில், விடுதலைப் புலிகள் அமைப்பின் எஞ்சியுள்ள தரப்பினர் சில மேற்கு நாடுகளில் இலங்கைக்கு எதிராக பொய் பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர். அவர்களது தவறான தகவல்களுக்கு சர்வதேச சமூகத்தில் சில பிரிவுகள் எடுபட்டுவிட்டது. அதனால் இலங்கை பக்கசார்பான, சமநிலையற்ற நடவடிக்கைகளை எதிர்கொள்ள நேர்ந்துள்ளது.

### நல்லிணக்க ஆணைக்குழு

இலங்கையின் நல்லிணக்க ஆணைக் குழுவின் சிபாரிசுகள் புறக்கணிக்கப்பட்டதாகக் கூறப்படுவது தவறு. அதன் பரிந்துரைகளின் அடிப்படையில் இலங்கை இறுதிப் போர் நிகழ்வுகள் குறித்தும், சனல் 4 தொலைக் காட்சியின் ஆவணப்படத்தின் உண்மைத்தன்மை பற்றியும், ஏனைய பல விடயங்கள் குறித்தும் இலங்கை இராணுவத் தளபதியால் நியமிக்கப்பட்ட ஒருவிசாரணை மன்றம் ஆராய்ந்து தனது கருத்துக்களை முன்வைத்திருக்கின்றது.

அந்த விசாரணை மன்றம் தற்போது தனது இரண்டாவது கட்ட நடவடிக்கையாக சனல் 4 ஆவணப்படம் குறித்த புலனாய்வுகளை ஆரம்பித்துள்ளது.

திருகோணமலை மாணவர்கள் படுகொலை மற்றும் ஏசிஎப் கொலைகள் குறித்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகிறது. அதற்கு சிரேஷ்ட அரசசட்டத்தரணிகள் குழு ஒன்று உதவுகிறது. அந்தநல்லிணக்க ஆணைக்குழுவின் இடைக்கால சிபாரிசுகள் குறித்த விடயத்தில் அவற்றில் சில ஏற்கெனவே அமுல்படுத்தப்பட்டுவிட்டன.

காணிகள் குறித்த பிரச்சினைகளின் தீர்வுக்காக காணி ஆணைக்குழு ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும், பாதுகாப்பு வலயப் பிரதேசங்கள் குறைக்கப்பட்டு வருகிறது. மக்கள் நடமாட்டத் தடை எதுவும் கிடையாது என்றும், வடக்கில் இராணுவ பிரசன்னம் குறைக்கப்பட்டு வழமை நிலைமைக்கான ஏற்பாடுகள் செய்யப்படுவதாகவும், 75 வீத மான கண்ணி வெடிகளை இலங்கை இராணுவம் அகற்றி விட்டதாகவும், புனர்வாழ்வு நடவடிக்கைகள் விடுதலைப் புலிகளை இலக்கு வைப்பதற்கரன ஓர் ஏற்பாடு அல்ல என்றும் அது முன்னாள் போராளிகளுக்கான நல ஏற்பாடு என்றும் அவர் அங்கு தனது நீண்ட உரையில் கூறியுள்ளார். (எ-11)

## இலங்கையின் நட...

ஆதரிப்பது என்று அப்போது அமெரிக்கா தீர்மானித்ததாக கூறிய பிளேக், அதன் மூலமே நல்லிணக்க ஆணைக்குழு அங்கு உருவாக்கப்பட்டதாகவும் கூறினார். ஆனால் அந்த நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளை அமுல்படுத்துவதில் இலங்கை காட்டிய தாமதம் தமக்கு ஏமாற்றத்தை தந்ததாக பிளேக் கூறியுள்ளார்.

வடக்கு மாகாண தேர்தல் தள்ளிப் போடப்படுவது குறித்தும் அவர் ஏமாற்றம் வெளியிட்டார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான அரசாங்கத்தின் அதிகாரப்பூர்வ பகிர்வு குறித்த பேச்சுவார்த்தைகள் பூர்த்தி செய்யப்படாமை குறித்தும் அவர் கவலை வெளியிட்டுள்ளார்.

13-வது திருத்தச் சட்டம் மற்றும் பிரதம நீதியரசர் விவகாரம் போன்றவற்றில், ஜனநாயகம் பின்வாங்கிச் செல்வது போன்ற நகர்வை தாம் காண்பதாகவும், அது ஏமாற்றம் தருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அதன் காரணத்தினாலேயே இலங்கை மீது மேலதிக அழுத்தத்தை கொடுக்க ஐ.நா மனித உரிமைகள் பேரவைத் தீர்மானத்தை இந்தியா போன்ற நாடுகளுடன் சேர்ந்து தாம் கடந்த தடவை ஆதரித்ததாகவும் அவர் கூறினார்.

அதனடிப்படையில் இந்தத் தடவையும் அது குறித்த தீர்மானத்துக்கு நல்ல ஆதரவு கிடைக்கும், என்று எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார். (எ-11)

பாராட்டி வாழ்த்துகிறோம்

பஞ்சநாதன் பிரியங்கா B.A (Hons)



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 28ஆவது பட்டமளிப்பு விழாவில், இன்று B.A (Hons) பட்டம் பெறும் பஞ்சநாதன் பிரியங்கா மேலும் பல பட்டங்கள் பெற்று கல்வி உலகில் பல சாதனைகள் படைக்க வாழ்த்துகின்றோம்.

கம்பஸ் லேன், திருநெல்வேலி.

பவானி அத்தை -குடும்பம்

(சி-2539)

பாராட்டி வாழ்த்துகிறோம்



மா.நவநீதமணி (அதிபர்)

அ.அருளானந்தசோதி (அஞ்சல் அதிபர்)

யாழ்.பல்கலைக்கழகத்தில் முதுகல்விமாணி (M.Ed) பட்டம் பெறும் தேவரையாளி இந்துக் கல்லூரி அதிபர் திரு. மா.நவநீதமணி அவர்களையும், பொறுப்பு அஞ்சல் அதிபர் தரம் I பரீட்சையில் சித்தி எய்திய கரவெட்டி தபால் அதிபர் திரு. அ.அருளானந்தசோதி அவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்

கமலநாதன் குடும்பத்தினர்

நெல்லியடி கிளினிக்

(சி-2542)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒன்றிணைந்தால்...

அமைப்பின் 3-ம் ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு லண்டனில் நடைபெறவுள்ளஅமர்வுகளுக்கான வாழ்த்துச் செய்தியில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் நிரந்தர சமாதானம் ஏற்படுத்தப்பட வேண்டுமென்பதே பிரித்தானியாவின் விருப்பமாகும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நல்லிணக்கம், நீதி, சட்டம் ஒழுங்கு உள்ளிட்ட அனைத்து விடயங்களிலும் முன்னேற்றத்தை ஏற்படுத்துவதன் மூலமே சமாதானத்தை ஏற்படுத்த முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச மனிதாபிமான சட்டங்கள் மீறப்பட்டதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் இலங்கைஉரியமுறையில் விசாரணை நடத்த வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

சாட்சிகளுடன்குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டால், குற்றவாளிகளுக்கு உரிய தண்டனை விதிக் கப்பட வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-11)


### டோஹா கட்டார் நாட்டில் உடனடி வேலைவாய்ப்பு

**(DOHA QATAR)** அரச அனுமதி இல. L.L No 2490

இலங்கை அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட Air trust வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தி னூடாக கீழ்க்காணும் வேலைவாய்ப்புக்கள் உடனடியாக காத்திருக்கின்றன.

◆ மேசன்(Meson) ◆ இலக்ரிஷியன் (அனுபவம் இல்லாதவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும்) ◆ காா்பென்டர் ◆ House painter ◆ பைப்லைன் பொருத்துனர் (அனுபவம் இல்லாதவர்களுக்கு பயிற்சி வழங்கப்படும்) ◆ கல்f லைசன் சாரதிகள் ◆ Welders ◆ கம்பி கவுடுகட்டுபவர்கள் ◆ உதவியாளர் ◆ சுத்திகரிப்பாளர்

இன்னும் பல வாய்ப்புக்கள், அதி உயர் சம்பளம் மிக குறைந்த கட்டணத்தில் பயணமாக விரையுங்கள். கீழ்க் காணும் முகவரியில், மார்ச் மாதம் 1ம்,2ம்,3ம்,4ம் திகதிகளில் உங்கள் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

மேலதிக விபரங்களுக்கு உடன் தொடர்புகொள்ளவும்

ஆவணங்கள்: Passtport, Passtport (Photo), தகைமை சான்றிதழ்

**மார்ச்-01** Jaffna 0777929475

**மார்ச்-02** முல்லைத்தீவு Holly Wood city Word No:02,Mulliyawalai,Mullaitiru.0777929475, 0772393165

**மார்ச்-03** வவுனியா Lanka voice No.24, Sation Road.0777929475, 0772393165

**மார்ச்-04** கொழும்பு Air trust 945, Maradana Road, Borella, Colombo-08,0112676777

(C-2503)

### வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் **DMI** அமெரிக்க நிறுவனத்துக்கு கிளிநொச்சி, முல்லைத்தீவு; யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா ஆகிய பிரதேசங்களிலிருந்து Distributor, Supervisor, Ass. Manager, Administration ஆகிய பதவிகளுக்கு O/L,A/L படித்த துடிப்பான இளைஞர், யுவதிகள் தேவைப்படுகின்றனர்.

☆ 30 பேர் மட்டும்

☆ 6 மாத காலப் பயிற்சி

பயிற்சியின் போது கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்

☆ பயிற்சி முடிவின் போது 30,000 - 50,000 பெற முடியும்.

குறிப்பு: ➤ தங்குமிட வசதிகள் உண்டு. ➤ வயதெல்லை 18-35

தொடர்புகளுக்கு:

**0775566224, 0776219536, 0217200867**

(2034)

### சங்கானையில்

விசேட ஆங்கில பாடநெறி

**SPOKEN ENGLISH**

with International Certificate

இலவசமாக கணனிப்பாடநெறி ஒன்றினை பெற்றிடுங்கள்

புதிய பிரிவு ஆரம்பம்

**02.03.2013 @ 3.30 P.M**

இப்பிரிவானது சனி, ஞாயிறு 3.30 - 6.30 P.M வரை இடம்பெறும்.

E-CITY

COLLEGE OF ENGLISH & IT SKILLS DEVELOPMENT

பிரதான வீதி, சங்கானை

(செலான் வங்கி அருகில்)

**0777364362/0772844625**

(2018)

### Banking Revision Classes

இம்முறை பரீட்சைக்கு தோற்றும் CBF, DBF மாணவர்களிற்கான துரித மீட்டல் வினாவிடை வகுப்புகள் March 2ஆம், 3 ஆம், 9 ஆம், 10 ஆம், 16 ஆம், 17 ஆம் திகதிகளில் அனுபவமும் திறமையும் வாய்ந்த விரிவுரையாளர்களால் நிகழ்த்தப்படவுள்ளது. பதிவுகளிற்கு முந்துங்கள்:

தொடர்புகளுக்கு:

spectra skills

19, Stanley Road, (Peoples Bank 2nd Floor), Jaffna

Tel: 021 222 1422, 1423

(C-2537)

### மணல் விற்பனைக்குண்டு

கட்டிட வேலைக்கும் பூச்சு வேலைக்கும் சிறந்த மணல் மண் இப்போது உங்கள் இடத்திற்கே கொண்டு வந்து தரப்படும்.

**4 டிரக்டர் - 21,000/-**

தொடர்புகளுக்கு

தீபன்

**0722694462**

(C-2521)

### பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 28 ஆவது பட்டமளிப்பு விழாவில் கல்வி முதுமாணிப் பட்டத்தில் சிறப்புத் தேர்ச்சி பெறும் M.Ed merit

**சுப்ரமணியம் தர்மரத்தினம்**

B.A.Hons M.A. Pgde (Merit), PGDEM (Merit) M.Ed (Merit), SLPS - 2-1 - கோட்டக் கல்விப் பணிப்பாளர் - பூநகரி

சிறந்த கல்விமானும் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு கொண்ட இவர் மேலும் பல பட்டங்களை பெற்று கல்வியுலகில் சாதனைகள் படைத்து நீடூழி வாழ்க என வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்

கிளி/மட்டுவில் நாடு அ.த.க பாடசாலை, பூநகரி

### யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் மிகப்பெரிய இந்திய கல்விக் கண்காட்சி

பிரவேசம் இலவசம்

ON THE SPOT ADMISSIONS

edCIL

**INDIAN Education Fair**

விஷேடமாக உயர்தரப்பரீட்சையில் தோற்றியோர் மற்றும் உயர்கல்வியினைத் தொடர்வதற்கு ஆர்வமுள்ளவர்களுக்காக

2013 மார்ச் மாதம்
5 மு.ப. 10.30 – பி.ப. 6.30
6 மு.ப. 10.30 – பி.ப. 12.00

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில்

#### இந்திய கல்விச் சந்தை உங்களுக்கு வழங்குவது என்ன?

- பட்டதாரி மற்றும் முதுநிலைப் பட்டதாரி கல்வியை வழங்கும் இந்தியக் கல்வி நிலையங்கள்
- இலவச தொழில்சார் வழிகாட்டுதலும் ஆலோசனையும்
- தொழில் பயிற்சி நிலையங்கள்
- தொழில்சார் திட்டமிடல் பற்றிய கருத்தரங்குகள்
- விமானப் போக்குவரத்துத் துறை கல்வி நிலையங்கள்
- வியாபாரப் பாடசாலைகள்
- தகவல் தொழில்நுட்ப மற்றும் பொறியியல் கல்லூரிகள்
- தகவல் தொழில்நுட்ப பயிற்சி நிலையங்கள்
- சந்தைப்படுத்தல் மற்றும் முகாமைத்துவ கல்வி நிலையங்கள்
- ஹொட்டேல் முகாமை மற்றும் சுற்றுலா கல்வி நிலையங்கள்
- நிதி மற்றும் வங்கித் தொழில் கல்வி நிலையங்கள்
- கடற் போக்குவரத்துக் கல்வி நிலையங்கள்
- கல்வி ஆலோசகர்கள்
- உள்ளக வடிவமைப்பு மற்றும் கட்டடக்கலை நிலையங்கள்
- செயலக அலுவல் பயிற்சி நிலையங்கள்
- மருத்துவ மற்றும் தாதிமார் கல்வி நிலையங்கள்
- மூன்றாம்நிலை கல்வி நிலையங்கள்
- நுண்கலை மற்றும் நவநாகரிகக் கலை பாடசாலைகள்

ORGANISED BY: edCIL — EdCIL (India) Limited — A GOVERNMENT OF INDIA ENTERPRISE

SUPPORTED BY: Consulate General of India Jaffna

PROFESSIONAL EXHIBITION ORGANISER: LECS — LANKA EXHIBITION & CONFERENCE SERVICES (PVT) LIMITED

OFFICIAL TV: CHANNEL Eye


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.02.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்